# பொருளியல் நோக்கு


மார்ச் 1978



சமூக சேவைகள்

மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பௌதீக வாழ்க்கைத் தரக் குறிகாட்டியில் ஸ்ரீலங்கா முன்னணியில் நிற்கின்றது

சமூக சேவைகள் அபிவிருத்தியை எவ்வளவு தூரத்துக்குப் பாதிக்கின்றன என்ற வினுவுக்கான விடையை சமீபத்திய 'டைம்' இதழொன்றில் பிரசுரிக்கப்பட்ட "உலக பொருளாதார முறைகள்" என்ற உலக வரை படத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். அபிவிருத்தியின் பணி மொத்த தேசிய உற்பத்தி அளவுகளையும் தலா நபர் வருமான மட்டங்களையும் அதிகரிக்கச் செய்வதுடன் நின்று விடுவதில்லை. சகல பிரிவு மக்களதும் வாழ்க்கை நிலைமைகளை விருத்தி செய்வதே அதன் பிரதான இலட்சியமாகும். எனவே, இத்தகைய பின்னணியில் நோக்கும் போது ஸ்ரீலங்காவின் அனுபவம் வளர்முக நாடுகளில் விஷேடித்துக் கூறக்கூடியதொன்ருக இருக்கின்றது.

ஸ்ரீலங்காவின் மிகக்கூடிய பௌதிக வாழ்க்கைத் தரக் குறிகாட்டியை வரை படம் காட்டும். ஒன்றன் பின் ஒன்ருக வந்த அரசுகள் சுகாதாரம், கல்வி, போஷாக்கு போன்ற துறைகளுக்கு பெருமளவு நிதி வளங்களை ஒதுக்கி வந்தமையாலும், சமூக நலன் குறித்த பொது முதலீடுகளிலும், வருமான மறு பங்கீட்டு உத்திகளிலும் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டமையாலும் இத்தகையதொரு விருத்தி நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் (சரியான) பொருளாதார அபிவிருத்தியைக் கணிப்பீடு செய்வதற்கு (பாரம்பரிய மொத்த தேசிய உற்பத்தி மட்டங்களைவிடவும்) பௌதீக வாழ்க்கைத்தரக் குறிகாட்டிகள் பொருத்தமானவையாயிருக்கும். சமூக சேவைகளின் விளைவுகளைக் கணிப்பீடு செய்யும் பொருட்டு வாஷிங்டன் ஆய்வு நிலையமொன்று பௌதீக வாழ்க்கைத் தரக் குறிகாட்டியை அறிமுகஞ் செய்தது. வரை படத்தில் இக்குறிகாட்டி அளவுகளை அடுத்து 1976ம் ஆண்டு உலக வங்கித்தரவுகளிலிருந்து பெறப்பட்ட தலா நபர் மொத்த தேசிய உற்பத்தி அளவுகள் (ஐக்கிய அமெரிக்க டொலர்களில்) தரப்பட்டுள்ளன. பௌதீக வாழ்க்கைத் தரக் குறிகாட்டியை அபிவிருத்தியின் அளவு கோலாகக் கருதுவோமேயாயின், நம் நாடு ஆசியப் பிராந்தியத்தில் மட்டுமன்றி முழு வளர்முக உலகிலும் முன்னணியில் நிற்பதை அவதானிக்க முடிகின்றது. ஸ்ரீலங்காவின் பௌ. வா. த. குறிகாட்டி 82 ஆகும்; மாருக இது நேபாளத்தில் 26 ஆகவும், வங்காள தேசத்தில் 35 ஆகவும், பாகிஸ்தானில் 38 ஆகவும், இந்தியாவில் 43 ஆகவும் இந்தோனேஷியாவில் 48 ஆகவும், பர்மாவில் 51 ஆகவும், மலேஷியாவில் 62 ஆகவும், தாய்லாந்தில் 68 ஆகவும், பிலிப்பைன்ஸில் 71 ஆகவுமிருக்கின்றது. இதே வேளையில் ஸ்ரீலங்காவின் தலா நபர் மொ. தே. உ. 220 டொலர் மட்டுமே. ஆனல் இந்தோனேஷியா (240), தாய்லாந்து (318), பிலிப்பைன்ஸ்

இவ்வரை படம் 'டைம்' வார ஏட்டின் அனுமதியுடன் மறுபிரசுரஞ் செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 3 இதழ் 12 மார்ச் 1978

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1261

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

## பொருளடக்கம்

### நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு
16 மீன் பிடி
17 பண்டப் பொருட்கள்
18 வர்த்தகம்

### விசேஷ அறிக்கை

3 சமூக சேவைகள்
சேம நலனும் அபிவிருத்தியும்

### சிறப்புக் கட்டுரைகள்

அமில்கார் ஓ ஹெரேரா 22 பேரழிவு அல்லது நவ சமுதாயம் — ஓர் இலத்தீன் அமெரிக்க உலக மாதிரி

26 யாவர்க்கும் ஓர் உலகு — சமகால சமுதாயம் பற்றிய ஒரு விமரிசனம்

### சந்திப்பு

31 டட்லி ஸியர்ஸ் —
பொருளாதார அரங்கின் அபிவிருத்திக் காட்சிகள்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## அடுத்த இதழில்

- ★ சர்வதேச நாணய நிதி மாற்றங்கள்? —இரண்டாவது திருத்தம்
- ★ செய்திப் பத்திரிகைகளின் வெற்றிடங்களுக்கான விளம்பரங்களின் பின்னணியில் வேலை வாய்ப்பு நிலைமைகள் பற்றி ஓர் ஆய்வு.

## அட்டைப்படம்

சமூக சேவைகள் பிரச்சினைகளும் அவற்றுடன் தொடர்பான ஏனைய அம்சங்களும் படப்பிடிப்பாளர் பாலித்த கன்னங்கரா வினால் சித்தரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

பெப்ரவரி

1 நுகர்வுச் செலவுப் போக்கிலிருந்து விடுபட்டு பொருளாதார அபிவிருத்திக்கான முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்ளவிருக்கும் ஸ்ரீலங்கா, அடுத்து வரும் மூன்று வருடங்களில் சர்வதேச நாணய நிதியிலிருந்து பெருமளவு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமென கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் உரை நிகழ்த்திய நிதியின் நிர்வாக இயக்குநர் திரு. ஜோன்னஸ் விட்டவீன் தெரிவித்தார்.

2 இரு நாடுகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையொன்றின் பிரகாரம், இவ்வருடத்தில் சீனா பிலிப்பைன்சுக்கு 10 லட்சம் தொன் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யை வழங்குமென ரொய்ட்டர் அறிக்கையொன்று தெரிவித்தது.

சபுகஸ்கந்தையில் அமைந்திருக்கும் ரூ. 220 கோடி பெறுமதியான யூரியா உரத்திட்டத்தை தொடர்ந்து அரசு மேற்கொள்ளப் போவதாக அறிவிக்கப்பட்டது. கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்டிருந்த நால்வர் கொண்ட குழுவின் சிபார்சின் பேரிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

3 உரம், டிராக்டர்கள், விவசாய இரசாயனப் பொருட்கள் போன்றவற்றை வாங்குவதற்காக ரூ. 8 கோடி நிதியுதவியையும், "அவசரகால உதவியாக" ரூ. 8 கோடியையும் ஸ்ரீலங்காவுக்கு வழங்க ஜப்பானிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. மேலும், பண்ட உதவியாக 29.2 கோடி ரூபாவும் தந்தித் தொடர்புத் திட்டமொன்றுக்காக ரூ. 12.9 கோடியும், பேராதனையில் போதனை வைத்தியசாலையொன்றை நிறுவுவதற்காக ரூ. 7.3 கோடியும் ஜப்பானால் வழங்கப்பட்டுள்ளதென நிதியமைச்சு அறிவித்தது.

6 சோவியத் ருஷ்யாவிலிருந்து 115 கோடி ரூபா பெறுமதியான சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யைப் பெற்றுக் கொள்வதற்கான உடன்படிக்கையொன்றை இந்தியா கைச்சாத்திட்டுள்ளதென 'லண்டன் டைம்ஸ்' செய்தியொன்று தெரிவித்தது.

10 தனியார் துறையின் புதிய வேலை வாய்ப்புக்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதியைச் சந்தித்த வர்த்தக வட்டாரப் பிரதிநிதிகள், தம் தற்போதைய உழைப்பாளர் படையை 10 சதவிதத்தால் அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்தனர்.

11 சொந்தமாக வீடுகளை வைத்திராதவர்களுக்கு ரூ. 40,000 வரை கடன்கள் வழங்கப்படுமெனத் தேசிய வீடமைப்புத் திணைக்களம் அறிவித்தது.

13 ஆசிய, பசுபிக் தலைவர்களின் பொதுநலவாய பிராந்திய மாநாடு (குண்டு வெடிக்கப்பட்ட பரபரப்பான சூழ்நிலையில்) சிட்னியில் ஆரம்பமானது.

15 கியூபா தேசிய வங்கியின் ஆளுநர் 24 யப்பான் வங்கிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்புடன் 100 கோடி யென் கடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டார். இக்கடன் கியூபாவின் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை நிதிப்படுத்த உதவுமென ரொய்ட்டர் அறிக்கையொன்று தெரிவித்தது.

16 சிட்னியில் நடைபெற்ற மாநாட்டை முடித்துக் கொண்ட ஆசிய, பசுபிக் பிராந்தியத்தின் 12 பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், தம் நாடுகளில் வாழும் 75 கோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அவர்களின் அபிலாசைகளை நிறைவு செய்வதற்கும், பட்டினியை ஒழிப்பதற்கும், புது வலு வளங்களைக் கண்டுபிடிப்பதற்கும் சர்வதேச ரீதியான வன் செயல்களைக் குறைப்பதற்கும், இப்பிராந்தியத்தில் நடைபெற்றுவரும் போதை வஸ்து வியாபாரத்தைத் தடை செய்வதற்கும் தம் நாடுகளின் முற்றுமுழுதான அரசியல், பொருளாதார ஆற்றல்களை ஒன்று திரட்டுவதெனத் தெரிவித்தார்கள்.

19 விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து தந்தித் தொடர்பு போன்ற துறைகளின் அபிவிருத்திக்காக ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு ஸ்ரீலங்காவுக்கான அதன் கடன் மற்றும் உதவிகளை இவ்வருடத்தில் இரட்டிப்பாக்குமென (ரூ. 57 கோடி) கொழும்புக்கு விஜயம் செய்த உத்தியோகபூர்வ தூதுக்குழுவொன்று தெரிவித்தது.

20 மஸ்கெலிய ஓயா திட்டத்தின் 3வது அங்கமான ரூ. 40 கோடி பெறுமதியான கன்யன் வலுத்திட்டத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

25 வங்கியின் ஊழியர் ஒருவரை இயக்குநர் சபையில் சேர்த்துக்கொள்வதற்கு இடமளிக்கும் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டமூலத்தின் திருத்தம் தேசிய அரசுப் பேரவையால் நிறைவேற்றப்பட்டது.

24 தெங்குப்பயிர்ச் செய்கைத்துறைக்கான மானியம், உற்பத்தி செய்யப்பட்ட ஏக்கர் அடிப்படையில் வழங்கப்பட்ட முன்னைய முறைக்குப் பதிலாக உற்பத்தி அளவின் (அதாவது காய்களின் எண்ணிக்கையின்) பிரகாரம் வழங்கப்படுமென பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர் தெரிவித்தார்.

27 ஸ்ரீலங்காவின் தேயிலை உற்பத்தித்துறையின் அபிவிருத்தியின் பொருட்டு கனடாவின் உதவியுடன் 15 ஆண்டு காலப் பெருந்திட்டமொன்று வரையப்பட்டுள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர் சொன்னார்.

உலகப் பொருளாதார மீட்சிக்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் காணப்படும் தேக்க நிலையைப் போக்கி செயலில் இறங்க வேண்டிய அவசியம் பற்றி பாரிசில் கூடிய மேற்கத்திய கைத்தொழில் நாடுகளின் உயர் அதிகாரிகள் பேசினார்களென பிரெஞ்சுச் செய்தித்தாபனமொன்று அறிவித்தது.

28 இந்தியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஜனதா அரசின் 1978/79 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் பற்றுக்குறைத் தொகையான 1396 கோடி ரூபாவை ஈடுகட்டும் பொருட்டு 524 கோடி ரூபா மேலதிக வரி அறவீடு செய்யும் முயற்சிகளை நிதி அமைச்சர் மேற்கொண்டார்.

சென்மதி நிலுவைப் பிரச்சினைகளால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு உதவும் பொருட்டு சர்வதேச நாணய நிதி உருவாக்கி இருக்கும் "விட்டவீன் வசதி" நிதிக்கு ஐக்கிய அமெரிக்கா வழங்கும் 475 கோடி டொலர் பங்களிப்புக்கு அந்நாட்டுப் பிரதிநிதிகள் சபை அங்கீகாரம் வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவைகள்
## சேமநலனும் அபிவிருத்தியும்

சமூக நலன்களை விருத்தி செய்வதில் நம் நாடு எய்தியிருக்கும் முன்னேற்றம், கூடிய தலா நபர் வருமானங்களைக் கொண்டிருக்கும் பல நாடுகளின் அளவுகளை மிஞ்சியிருப்பதாகவும், மூன்றாவது மண்டலத்தைச் சார்ந்த சகல வளர்முக நாடுகளுக்கும் ஸ்ரீலங்கா வெற்றிகரமான ஒரு முன்மாதிரியாகத் திகழ்வதாகவும் அடிக்கடி கூறப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக (சுகாதாரம், கல்வி, போஷாக்கு போன்ற சமூக நலத்தர நிர்ணயக் குறிகாட்டிகளால் கணிப்பீடு செய்யப்படும்) நாட்டின் சமூக முன்னேற்றம், பொருளாதார ரீதியில் பெரு வளர்ச்சி கண்டிருக்கும் நாடுகளின் மட்டங்களை ஒத்ததாய் இருக்கின்றது.

சுகாதாரம், கல்வி, உணவு போன்ற துறைகளுக்கு அரசு பெருமளவு நிதியைத் தொடர்ந்து ஒதுக்கி வந்தமையாலும், சமூக நலன், வருமான மறுபங்கீடு போன்றவற்றைக் கருத்திற் கொண்டபோது முதலீடுகளில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டு வந்தமையாலும் ஸ்ரீலங்காவின் வாழ்க்கைத் தரத்தினை (பல வளர்முக நாடுகளின் அளவுகளை விடவும்) உயர்த்துவது சாத்தியமாயிற்று. எனவே கடந்த சில வருடங்களில், வருமானப் பங்கீட்டு உத்திகளை சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையேயும் பிரயோகிப்பதில் நம் நாடு வெற்றி கண்டுள்ளது. ஆயினும், பொருளாதாரத்தில் தொடர்ந்தும் பதிவு செய்யப்படும் மெதுவான வளர்ச்சி, இவ்வாறெய்தப்பட்ட உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினைப் பேணிக் காப்பதில் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, கடந்த இரு தசாப்தங்களில் வேலையின்மை பாரிய அளவில் வியாபித்து வந்துள்ளது. சமூக நலன் கருதி அரசு வருடா வருடம் ஒதுக்கிவரும் பெருந் தொகைப் பணம், தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்துக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடியதா? என்பது குறித்த விவாதங்கள் இப்பொழுது சூடுபிடித்து வருகின்றன.

மூல வளங்களைக் குறைவாகக் கொண்டிருக்கும் ஒரு நாடு, குறைந்த நுகர்வாற்றல் பெற்றிருக்கும் தன் மக்கள் மீது மேலும் சுமைகளை ஏற்றாது (அதே வேளையில்) மூலதனவாக்கத்தைத் துரிதப்படுத்த வேண்டிய இக்கட்டான ஒரு நிலையிலிருக்கின்றது. எந்த அபிவிருத்தித் திட்டமும் அது வெற்றிகரமான முறையில் அமுல் நடத்தப்பட வேண்டுமாயின், அத்திட்டத்தில் சமூக சேவைகள், சேம நலன் போன்றவற்றுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படுதல் அவசியமாகும். இத்தகு சேவைகள் நுகர்வுச் சேவைகளாகக் கருதப்படினும், எந்த நாடும் அவற்றை அலட்சியம் செய்துவிட முடியாது. மேலும், உற்பத்தித் துறையில் பயன்படுத்தப்பட வேண்டிய நிதி வளங்கள் இவ்வாறான துறைகளுக்குத் திசை திருப்பப்படுவதால் அபிவிருத்தியின் வேகம் தடைப்படுகின்றது என்றும் வாதிடப்படுகின்றது. 'அபிவிருத்தி' என்றால் என்ன? என்ற வினாவை இது எழுப்புகின்றது. மொத்த தேசிய உற்பத்தியின் விருத்தி மட்டும் அபிவிருத்தியாக இருக்க முடியாது. (இந்த உற்பத்தி வளர்ச்சிக்காக) உழைக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் இத்தகைய அபிவிருத்தியால் யாதொரு பயனுமில்லை.

சமூக நலன் குறித்த இத்தகு சேவைகள் (மறைமுகமாகவேனும்) பெருமளவில் உற்பத்தியதிகரிப்புக்குப் பங்காற்றும் மூலதனப் பொருட்களாக இருப்பதனால் இச் சேவைகளை நுகர்வுப் பொருட்களாக மட்டும் கருதிவிட முடியாது. கல்வியை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்; கல்வியானது பொதுத் திறமைகளையும், தொழில் நுட்பத் திறன்களையும் போஷித்து வளர்ச்சிக்கு வழிவிடுகின்றது; மேலும், அபிவிருத்திக்குச் சாதகமான முறையில், சமூக நிறுவனங்கள் குறித்த கண்ணோட்டங்களையும் அது நவீனமயப்படுத்துகின்றது.

சுகாதாரத் துறையிலான முதலீடுகள் உற்பத்தி அளவுகளை அதிகரிக்க உதவுகின்றன. அத்துடன் வீடமைப்பு, சுகாதார நிலைமைகளைப் பேண உதவுகின்றது; போதியளவு" இருப்பிட வசதிகளின்மை, சுகாதார நலனில் பாதிப்பேற்படுத்துவதுடன், மக்களின் திறமை, குண நலன்கள் போன்றவற்றில் சீர்குலைவுகளை ஏற்படுத்தி உற்பத்தியைப் பாதிக்கின்றது. மேலும், கல்வி, வீடமைப்பு போன்ற சேவைகளிலான முதலீடுகள் பெருமளவிலான வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்துக்கும், கைத் தொழில் வளர்ச்சிக்கும் கால்கோளாக இருக்கும்.

எவ்வாறிருப்பினும், பொருளாதார வளர்ச்சி முதலீடுகளைப் பொறுத்திருப்பதாகவும், மறுபுறத்தில் முதலீடுகளின் அளவு சேமிக்கும் ஆற்றலில் பெருமளவில் தங்கியிருப்பதாகவும் பலர் வாதாடி வருகின்றனர். சேமிப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டுமாயின் நுகர்வு குறைக்கப்படுதல் வேண்டும். ஆயினும், பொருளாதாரக் காரணிகள் மட்டுமன்றி சமூக, அரசியல் காரணிகளும் இத்தகு சாதனையொன்றைக் கடினமாக்கியுள்ளன. எனவே, நுகர்வுச் செலவுகளுக்கும், மூலதனவாக்க நடவடிக்கைகளுக்குமிடையே உச்ச மட்டச் சம நிலையொன்றை எய்துவதானது ஸ்ரீலங்காவை உள்ளடக்கிய பல வளர்முக நாடுகள் இன்று எதிர்நோக்கிவரும் மிகப் பிரதான பிரச்சினையொன்றாக இருந்து வருகின்றது.

கடந்த பத்தாண்டு காலத்தில் ஸ்ரீலங்காவின் வருடாந்த நுகர்வு மொத்த தேசிய உற்பத்தியின் 83 சத வீதமாக இருந்து வந்துள்ளதை அட்டவணை காட்டுகின்றது. மறு வார்த்தைகளில் கூறுவதாயின், மொத்த உள் நாட்டு மூலதனவாக்கம் சராசரி 17 சத வீதமாக இருந்து வந்துள்ளது. கடந்த ஒரு தசாப்த காலத்தில் (1967 — 1977) மொத்த தேசிய உற்பத்தியில் மூலதனவாக்கத்தின் சத விகிதம் தொடர்ந்தும் மாறுதல்களின்றி இருந்து வந்துள்ளது; எனவே சேமிப்பாற்றலைப் பெருமளவில் விருத்தி செய்திருக்க முடியும். மேலும், அரச துறை தனியார் துறைப் பிரிவுகளின் நுகர்வு, மூலதனவாக்க நடவடிக்கைகளில் கடந்த காலப் பிரிவில் எவ்வித மாறுதல்களும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் சேமிப்பு அளவுகளை உயர்த்துதல் அல்லது நுகர்வு வீதத்தைக் குறைத்தல் பல் வேறு தடைகள் காரணமாகச் சாத்தியமானதாயில்லை. இது, ஸ்ரீலங்காவின் மிகப் பிரதான சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளிலொன்ருகும். நெகிழ்ச்சித் தன்மையற்ற நுகர்வுப் போக்கு முதலீட்டு அதிகரிப்புக்கு எவ்வகையிலும் இடமளிப்பதாகத் தெரியவில்லை. இதன் விளைவாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் மிகக் குறைவானதாகவே இருந்து வந்துள்ளது. உதாரணமாக 1960 — 1977 கால கட்டத்தில் வருடாந்த (மெய்) வளர்ச்சி சராசரி 4 சத வீதத்துக்கும் குறைவாகவே இருந்தது. சனத் தொகை அதிகரிப்பினைக் (2.2%) கழித்து நிகர வளர்ச்சியைக் கணிப்பீடு செய்யும்போது தனி நபர் தலா வருமானம் 2 சத வீதத்துக்கும் குறைவான வளர்ச்சியைக் கண்டுள்ளதை அறிய முடிகின்றது.

துரிதமான சனத் தொகை வளர்ச்சியின் பின்னணியில், (குறைந்த பட்சம்) தற்போதைய நுகர்வுப் போக்கினைப் பேணுவது கூட அரசுக்குப் பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. அரசியல் சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும் இந் நாடு, மக்களுக்கான பொது நல சேவைகள் குறித்து தாராள மனப்பான்மையையே பின்பற்றி வந்துள்ளது. மானியங்களுடன் கூடிய உணவு வினியோகம், இலவசக் கல்வி, சுகாதார சேவைகள் போன்றன இக் கொள்கையின் பிரதான கூறுகளாக இருந்து வந்துள்ளன. 1931ல் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வஜன வாக்குரிமை, 1930க்களின் உலகளாவிய மந்தம், இண்டாம் உலகப் போர் போன்றன இத்தகைய சேம நலச் சேவைகளின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் பிரதான காரணங்களாயமைந்தன. சுதந்திரத்தையடுத்து வந்த வருடங்களில், சனத் தொகையில் ஏற்பட்ட தீவிர அதிகரிப்பும், மக்கள் பிரிவில் இள வயதினர் விகிதம் கூடுதலாகக் காணப்பட்டமையும், மக்களிடையே ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சியும், போட்டி அடிப்படையிலான அரசியல் கட்சிகளின் தோற்றம் போன்றனவும் இத்தகைய சேவைகளின் விஸ்தரிப்புக்கு மேலும் தூண்டுதல் அளித்தன.

சுதந்திரத்துக்குப் பின்னர் அரசாங்கச் செலவுகளில் ஏற்பட்டிருக்கும் பாரிய அதிகரிப்பு அட்டவணை 2ல் காட்டப்பட்டுள்ளது. ஆயினும், பொருளாதாரத்தில் காணப்படும் பணவீக்கப் போக்குகள் காரணமாகவே ரூபா அளவில் இத்தகைய பெரிய அதிகரிப்பு காணப்படுகின்றது; பண வீக்கத்துக்கான கழிவுகளை ஒதுக்கிப் பார்ப்பின் மெய்ப் பெறுமானம் மிகக் குறைவாகவே இருக்கும். இருப்பினும், (இவ் அட்டவணையில்) அரசாங்கத்தின் மொத்த வருமானத்தினை விடவும் நடைமுறைச் செலவுகள் அதிகரித்துக் காணப்படுவது கவனிக்கத் தக்க ஓர் அம்சமாகும்.

ஆரம்ப வருடங்களில் அரசாங்கத்தின் நடைமுறைக் கணக்கு (அதாவது நடைமுறைக் கணக்குகளைக் கழித்த வருமானம்) பெருந் தொகையான சேமிப்புக்களை உருவாக்கியதுடன், இச் சேமிப்புக்களின் உதவியால் பெருந் திட்டங்கள் பல நிதிப்படுத்தப்பட்டன. உதாணமாக 1947/48 — 1951 —52 ஐந்தாண்டுக் காலப் பகுதியில் நடைமுறைக் கணக்கு நிலுவை சராசரி வருமானத்தில் 20 சத வீதமாக இருந்தது. அதனையடுத்து வந்த 1952/53 — 1956 — 57 ஐந்தாண்டு காலப் பகுதியில் இது 27% ஆக அதிகரித்தது. அரசு தன் மூல வளங்களில் பெரும் பகுதியை முதலீடுகளில் ஒதுக்கமுடியுமென்பதனை இத்தகைய சாதகமான நிலுவை சுட்டிக் காட்டுகின்றது. அறுபதுக்களின் நடுப் பகுதியிலிருந்து அரசாங்கத்தின் நடைமுறைச் செலவுகள் வருமானத்தை விடவும் கூடிய வேகத்தில் அதிகரித்துச் சென்றமையையும், அதன் விளைவாக நடைமுறைக் கணக்கில் குறை ஏற்பட்டமையையும், அட்டவணை காட்டும். இப்போக்கு (1968/69ல் தவிர) 1973 வரை தொடர்ந்து சென்றது; இதன் விளைவாக, 1962/63 — 1971 — 72 கால கட்டத்தில் வரவு செலவுத் திட்டங்களினால் திரட்டப்பட்ட வருமானத்தினால் நடைமுறைச் செலவுகளை ஈடு செய்ய முடியாதிருந்தது.

1973ம் ஆண்டின் பின்னர் இந் நிலைமையில் ஓரளவு விருத்தி காணப்பட்ட போதிலும், கூடியளவிலான சாதக நிலுவைகள் ஏற்படக் கூடிய நிலைமை இன்னும் உருவாகவில்லை. நடை முறைக் கணக்கில் மிகச் சிறு மிகை (வருமானத்தில் 2—5%) ஒன்றினை ஏற்படுத்துவது திருப்திகரமானது என்று கூற முடியாது. மறு வார்த்தைகளில் கூறுவதாயின், மூலதனச் செலவுகளை நிதிப்படுத்துவதற்கு அரசின் வருமானத்தில் கணிசமான ஒரு பகுதியைச் சேமிப்பதானது சாத்தியமானதாகத் தெரியவில்லை.

கடந்த பத்தாண்டு காலத்தில் அரசாங்க வரவு செலவுத் திட்டங்களின் நடைமுறைச் செலவுகளில் 21 சத வீதமும், மொத்த மூலதனச் செலவுகளில் 13 சத வீதமும் கல்வி, சுகாதாரம் போன்ற சமூக சேவைத்துறைகளுக்கு ஒதுக்கப்பட்டு வந்துள்ளன. 1970க்கு முன்னைய காலத்தில் இவ்விகிதம் இதைவிடக் கூடுதலாக இருந்தது; அதாவது நடைமுறைச் செலவுகளில் 25 சத வீதமும், மூலதனச் செலவுகளில் 15 சத வீதமும் சமூக சேவைகளுக்காகச் செலவிடப்பட்டு வந்தன.

மொத்த அரசாங்கச் செலவுகளில் 17 சத வீதத்தைச் சமூக சேவைத் துறைகள் பெறுகின்றன. இத் துறைகளுக்காக ஒதுக்கப்படும் அரசாங்கத்தின் நிதி கடந்த காலங்களில் குறைவடைந்து வந்துள்ளது. 1968/1977 பத்தாண்டு காலப் பிரிவின் முதல் அரைப் பாகத்தில் 22 சத வீதமாக இருந்த இச் செலவுகள் பின்னரைப் பகுதியில் 17 சத வீதமாகக் குறைவடைந்தன. ‘நுகர்விலிருந்து’ ‘முதலீடு’ நோக்கிய வளமாற்றீடு தொடர்பான ஐந்தாண்டுத் திட்ட (1972 — 76) முன் மொழிவின் விளைவொன்ருக இதனைக் கருதமுடியும்.

மொத்த தேசிய உற்பத்தியின் அளவுகளிலும் சமூக சேவைகளின் பங்கு ஓரளவு குறைந்துள்ளது; 1970க்கு முன்னைய காலத்தில் 7 சத வீதமாக இருந்து 1977ல் இது 6 சத வீதமாக வீழ்ச்சிகண்டது. சமூக சேவைகளுக்கான தலா நபர் செலவு 1968 — 1977 காலப் பிரிவில் ரூ. 58 இலிருந்து ரூ. 111 ஆக (அதாவது இரு மடங்காக) அதிகரித்தது. ஆயினும், சமூக சேவை நடவடிக்கைகளில் இரு மடங்கு அதிகரிப்பு காணப்பட்டது என்பது இதன் அர்த்தமாகாது. பண வீக்கத்தின் விளைவான சமூக சேவைத் துறைகளின் உற்பத்திச் செலவதிகரிப்பே இதற்குப் பிரதான காரணமாகும். எவ்வாறிருப்பினும், (பண வீக்க நிலைமைகளுக்கு 10 சத வீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 1

### நுகர்வுக்கும் மூலதனவாக்கத்துக்குமிடையிலான மொத்த உள்நாட்டுச் செலவினங்களின் பங்கீடு

| | உள்நாட்டுச் மொத்த செலவினம் | மொத்த நுகர்வு | தனியார் துறை | அரசதுறை | மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | அரச, பொது திறுவனங்கள் | அரச கூட்டுத் தாபனங்கள் | தனியார் துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| ரூ. பத்து லட்சம் 1967 | 9294 | 7,917 | 22,009 | 1,240 | 1,377 | 446 | 232 | |
| சத விதம் | 100 | 85.2 | 6,677 | 11.9 | 14.8 | 4.8 | 2.5 | 699 |
| ரூ. பத்து லட்சம் 1968 | 11,035 | 9,336 | 71.8 | 13.4 | 1,699 | 531 | 322 | 7.5 |
| சத விதம் | 100 | 84.6 | 7,928 | 1,408 | 15.4 | 4.8 | 2.9 | 846 |
| ரூ. பத்து லட்சம் 1969 | 12,422 | 10,189 | 71.8 | 12.8 | 2,253 | 505 | 399 | 7.7 |
| சத விதம் | 100 | 81.9 | 8,698 | 1,471 | 18.1 | 4.1 | 3.2 | 1,349 |
| ரூ. பத்து லட்சம் 1970 | 13,060 | 10,505 | 70.0 | 1,649 | 2,554 | 785 | 514 | 10.8 |
| சத விதம் | 100 | 80.4 | 3,856 | 12.6 | 19.6 | 6.0 | 4.0 | 1,255 |
| ரூ. பத்து லட்சம் 1971 | 12,888 | 10,639 | 67.8 | 1,790 | 2,249 | 588 | 435 | 9.6 |
| சத விதம் | 100 | 82.5 | 8,849 | 13.9 | 17.5 | 4.6 | 3.4 | 1,226 |
| ரூ. பத்து லட்சம் 1972 | 13,814 | 11,697 | 68.7 | 1,924 | 2,118 | 342 | 363 | 9.5 |
| சத விதம் | 100 | 84.7 | 9,773 | 13.9 | 15.3 | 2.5 | 2.6 | 1,413 |
| ரூ. பத்து லட்சம் 1973 | 16,876 | 14,246 | 70.8 | 2,043 | 2,630 | 677 | 489 | 10.2 |
| சத விதம் | 100 | 84.4 | 12,203 | 12.1 | 15.6 | 4.0 | 2.9 | 1,464 |
| ரூ. பத்து லட்சம் 1974 | 22,610 | 19,470 | 72.3 | 2,770 | 3,140 | 872 | 284 | 8.7 |
| சத விதம் | 100 | 86.1 | 16,700 | 12.2 | 13.9 | 3.9 | 1.7 | 1,884 |
| ரூ. பத்து லட்சம் 1975 | 25,266 | 21,358 | 73.9 | 2,503 | 3,908 | 1,307 | 466 | 8.3 |
| சத விதம் | 100 | 84.5 | 18,850 | 9.9 | 15.5 | 5.2 | 1.8 | 2,135 |
| ரூ. பத்து லட்சம் 1976 | 26,802 | 22,608 | 74.6 | 3,050 | 4,194 | 1,496 | 493 | 8.5 |
| சத விதம் | 100 | 81.4 | 19,558 | 11.4 | 15.6 | 5.6 | 1.8 | 8.2 |
| ரூ. பத்து லட்சம் 1977 | 30,352 | 25,158 | 73.0 | 3,149 | 5,194 | 1,971 | 772 | 2.451 |
| சத விதம் | 100 | 82.9 | 72.5 | 10.4 | 17.1 | 6.5 | 2.5 | 8.1 |

ஒதுக்கிப் பார்ப்பினும்கூட) சனத்தொகையின் தொடர்ந்த அதிகரிப்புக்கு மத்தியிலும் நம் நாடு, சமூக சேவைகளுக்கான தனி நபர் தலா மெய்ச் செலவு அளவுகளை தொடர்ந்தும் பேணி வருவதில் வெற்றிகண்டுள்ளது.

பல் வேறுபட்ட சமூக சேவைத் துறைகளில், கல்வி அரசாங்கச் செலவுகளில் பெரும்பாகத்தைச் சுவீகரித்துக் கொள்கின்றது. மொத்தச் சமூகச் சேவைச் செலவுகளில் கல்வி 60 சத வீதத்தைப் பெறுகின்றது. சுகாதார சேவைகளுக்கான செலவுகள் 30 சத வீதமாகும். வீடமைப்பு, விசேட பொது நல சேவைகள் போன்றன மிகுதி 10 சத வீதத்தையும் பெறுகின்றன. இத்தகைய பகிர்வமைப்பு கடந்த ஒரு தசாப்த காலமாக தொடர்ந்தும் மாற்றங்கள் இன்றி இருந்து வந்துள்ளது.

நுகர்வோர், உற்பத்தியாளர் மானியங்கள், பொதுக் கடன் மீதான வட்டி, ஓய்வுகால ஊதியங்கள் போன்றனவும் சமூக நலச் செலவுகளாகக் கருதப்படினும் அவற்றைப் பெறுபவர்கள் உற்பத்தித் துறைக்கு எத்தகைய நேரடிப் பங்களிப்பையும் செலுத்துவதில்லை. ஆயினும், சமூக நலக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது இத்தகைய கொடுப்பனவுகளை — குறிப்பாக பொதுக் கடனை — குடியிருப்பாளர்களுக்கான அரசின் பண உதவிகளாகக் கருத முடியாது. எனவே மானியங்களை மட்டும் (பிரதானமாக உணவு மானியங்களை) இத்தகைய செலவுகளாகக் கருதுவது யதார்த்தமானதாயிருக்கும். மேற்கூறிய சகல மாற்றுக் கொடுப்பனவுகளிலும் உணவு மற்றும் மானியங்கள் 40 சத வீதமாக இருக்கின்றன. 1970க்கு முன்னைய காலத்தில் இவை 55 — 60 சத வீதமாகக் காணப்பட்டன.

அரசாங்கத்தின் நடைமுறைக் கணக்கில் இத்தகைய மாற்றுக் கொடுப்பனவுகள் பெரும் பகுதியைக் (50%) கொண்டிருக்கின்றன; இக் கொடுப்பனவுகளில் ஏறத்தாழ அரைப் பங்காக இருக்கும் மானியங்கள் அரசின் நடைமுறைச் செலவுகளில் பிரதான அம்சமொன்றாக இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து தற்போதைய சமூக நலச் செலவுகளும், மானியங்களும் மொத்த நடைமுறைச் செலவில் 42 சத வீதத்தைக் கொண்டிருக்கின்றன.

சமூக சேவைகளிலும் மானியங்களிலும் செலவிடப்பட்ட அரசின் மொத்தச் செலவு 1968ல் 41 சத வீதமாக இருந்தது; 1977ல் இது 30% ஆக வீழ்ச்சியுற்றது. நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று, அரசின் வளங்கள் உற்பத்தி சார் திட்டங்களில் திசை திருப்பப்படுவதால் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டு வந்தமையையே இது காட்டுகின்றது. கடந்த ஒரு தசாப்த காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வந்த மிக மெதுவான வளர்ச்சியும் அதனையடியொற்றி தலா நபர் வருமான அதிகரிப்பில் காணப்பட்ட தேக்க நிலையும், சமூக நலச் சேவைகளின் விஸ்தரிப்பைக் கட்டுப்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளில் கூடிய கவனமெடுக்க அரசை நிர்ப்பந்தித்திருக்க வேண்டும். பெருமளவில் அதிகரித்து வரும் உழைப்பாளர் படையை உற்பத்தித்துறைகளுக்கு வழிப்படுத்தவும் வியாபித்துவரும் வேலையின்மைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் அரசு மேற்கொள்ளும் முயற்சிகளில், பொதுச் செலவமைப்பிலான இத்தகு மாற்றங்கள் தவிர்க்க முடியாதவையாகும்.

பத்தாண்டுகளுக்கு முன்னர், மொத்த தேசிய உற்பத்தியில் 13 சத வீதமாக இருந்த பொது நலத் துறைகளுக்கான செலவுகள் 1977ம் ஆண்டில் 10 சத வீதமாகக் குறைவடைந்தன. சமூக நலச் செலவுகளில் ஒப்பீட்டு ரீதியான வீழ்ச்சிப் போக்கு அவதானிக்கத்தக்கதெனினும், சமூக நலத் திட்டங்களில் அண்மைய வருடங்களில் செலவிடப்பட்ட பணம் குறை விருத்தி நாடொன்றைப் பொறுத்த வரையில் இன்னும் அதிகமானதாகவே தென்படுகின்றது.

(சமூக சேவைகள், மானியங்களை உள்ளடக்கிய) சமூக நலன் தொடர்பான தலா நபர் செலவு 1968ல் ரூ. 108 ஆகவும் 1977ல் ரூ. 200 ஆகவுமிருந்து வந்திருக்கின்றது. ரூபா அளவிலான அதிகரிப்பு பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் விலை மாற்றங்களையும் காட்டுகின்றது. எவ்வாறிருப்பினும், குறித்த இவ் வருடங்களுக்கான (காரணிச் செலவு விலைகளில்) தலா நபர் மொத்தத் தேசிய உற்பத்தியில் தலா நபர் சமூக நலச் செலவுகளின் வீதம் 13%இலிருந்து 10% ஆக மாற்றமடைந்து வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நாம் இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து, அரசியல் சுதந்திரத்தையடுத்து வந்த வருடங்களில் சமூக நலத் திட்டங்களுக்கான செலவுகளுக்கு ஸ்ரீலங்கா கூடிய முக்கியத்துவமளித்து வந்துள்ளமையையும், அடுத்தடுத்து வந்த அரசுகள் இச் செலவுகளைக் குறைத்து விடுவது தொடர்பாகத் தயக்கம் காட்டி வந்துள்ளமையையும் உணர முடிகின்றது. ஆயினும் இத்தகைய செலவுகள் தற்பொழுது உற்பத்தி சார் திட்டங்களுக்கு வழிப்படுத்தப்பட்டு வருவதனை அண்மைய வருடங்களின் தரவுகள் காட்டும்.

சமூக சேவைகள், **மானியங்கள்** போன்றன குறித்த செலவினங்களை வெறும் நுகர்வுச் செலவுகளாகக் கருதும் பாரம்பரியக் கண்ணோட்டம் தற்பொழுது மாறுதலடைந்து வருகின்றது. இச் செலவுகளை மனித வளத்தின் மீதான முதலீடுகளாகக் கருதும் போக்கொன்று அண்மைக் காலங்களில் எழுச்சியுற்று வருவதைக் காண முடிகின்றது. மறு வார்த்தைகளில் கூறுவதாயின், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, உணவு மானியங்கள் போன்றன மீதான செலவுகள் மனித வளத்தின் தர மேம்பாட்டுக்கு உந்துதல் அளிக்கும் காரணிகளாகக் கருதப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சி குறித்த அண்மைக்கால ஆய்வுகள், வளர்ச்சி மூலமொன்றாக மனித மூலதனம் பெறும் முக்கியத்துவத்தைத் தெளிவாகக் காட்டின.

ஆயினும் கடந்த பல தசாப்த கால ஸ்ரீலங்காவின் வளர்ச்சி அனுபவம் உற்பத்தியதிகரிப்புக்கு எவ்வகையிலேனும் பங்களிப்பு வழங்கியதாகத் தெரியவில்லை. மனித வளத்தின் மீதான முதலீடுகள் பொருளாதார வளர்ச்சியின் அத்தியாவசிய அம்சமொன்றாக இருப்பினும், அவை மட்டும் தனித்து அத்தகு வளர்ச்சியொன்றை ஊக்குவிக்கமாட்டா என்பதனை இது காட்டுகின்றது. எம்முடையதைப் போன்ற வளர்முக நாடொன்றில், பௌதிக மூல வளங்கள் மீது பெருமளவு முதலீடுகளைச் செலுத்தும் பட்சத்தில் மட்டுமே மனித வள முதலீடுகளிலிருந்து உற்பத்தி சார் பயன்களைப் பெறமுடியும். இவ்வாறில்லாத பட்சத்தில் — குறிப்பாக ஏனைய மூல வளங்கள் அருமையாக இருக்குமிடத்து — சமூக சேவைகள் மீதான கூடிய தலா நபர் செலவு இத்தகு பொருளாதார வளர்ச்சியொன்றைத் தடைப்படுத்துவதாகவே இருக்கும். அதாவது இத்தகைய பெருந் தொகையான செலவுகள் நாட்டின் அருமையான வளங்களை விரயம் செய்வதுடன், பொருளாதாரப் பன்முகப்படுத்தல், உற்பத்திசார் முதலீடுகள் போன்ற அத்தியாவசியத் தேவைகளின் புறக்கணிப்புக்கும் உந்துதல் அளிக்கின்றன.

எவ்வாறிருப்பினும், மொத்த தேசிய உற்பத்திக் குறி காட்டிகள், உண்மையான வளர்ச்சி வீதத்தையும், சமூக வாழ்க்கைத் தரத்தையும், சனத் தொகையில் சகல பிரிவினரினதும் பொது முன்னேற்றங்களையும் சரியாகப் பிரதிபலிப்பதில்லை என்பதனை இப்பொழுது பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். கடந்த ஒரு தசாப்த காலமாக நாட்டின் தலா நபர் வருமானத்தில் ஏற்பட்டு வரும் மிக மெதுவான அதிகரிப்பினைக் காணும் ஒருவர், இக் கால கட்டத்தில் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எவ்வித விருத்தியும் ஏற்படவில்லையென நினைக்கலாம். ஆனால், பௌதிக வாழ்க்கைத் தரக் குறிகாட்டிகள் மாறுபட்ட முடிவுகளுக்கு அவரை இட்டுச் செல்லும். ஸ்ரீலங்காவைப் பொறுத்த வரையில், நாட்டின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதில் சமூக நலச் செலவுகள் ஏற்படுத்தும் தாக்கத்தினை மொ. தே. உ. குறிகாட்டிகளுடன் இனங் கண்டு கொள்ள முடிவதில்லை.

மறு புறத்தில், குறைந்தளவிலான மூலதனவாக்கம், உற்பத்தித் துறைகளின் விஸ்தரிப்புக் குறைவு போன்றன காரணமாக கடந்த பல தசாப்தங்களில் வேலையற்றோர் தொகை துரிதமாக அதிகரித்து வந்திருப்பதையும் காண முடிகின்றது. வேலையின்மை பற்றிய அண்மைய ஆய்வுகள், இளைஞர்களிடையே — குறிப்பாக உயர் கல்வித் தகைமைகளைப் பெற்றிருக்கும் வாலிபர்களிடையே இது பாரதூரமான பிரச்சினையொன்றாக வியாபித்துள்ளதைக் காட்டுகின்றன. எனவே, இவ்வாறு உயர் கல்வி கற்றோர் வேலையற்றோராக இருப்பதனால், கல்வித் துறையிலான பெருந் தொகைச் செலவுகள் நாட்டின் உற்பத்தியதிகரிப்புக்கு எவ்வகையிலும் உந்துதல் அளிக்கவில்லையெனப் பலர் வாதிட்டு வருகின்றனர். தேசத்தின் மனித வலுத் தேவைகளின் அடிப்படையில் மனித வளங்கள் மீதான முதலீடுகள் மேற்கொள்ளப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 2

### அரசாங்க வருமானங்களும் செலவினங்களும் 1947/48 — 1977

| (ரூ. பத்து லட்சங்களில்) காலம் | மொத்த வருமானம் | நடப்பு செலவினம் | முதலீட்டு செலவினம் | நடைமுறை நிலுவை | நடப்புக் கணக்கீட்டு நிலுவை— வருமான விதத்தில் |
|---|---|---|---|---|---|
| 194 /48—1951 /52 (வருடாந்த சராசரி) | 721 | 580 | 254 | 140 | 19.42 |
| 1952 /53—1956 /57 (வருடாந்த சராசரி) | 1,131 | 811 | 367 | 320 | 27.32 |
| 1957 /58—1961 /62 (வருடாந்த சராசரி) | 1,430 | 1,365 | 507 | 65 | 4.55 |
| 1962 /63—1966 /67 (வருடாந்த சராசரி) | 1,791 | 1,796 | 571 | — 5 | — 0.29 |
| 1967 /68 — | 2,156 | 2,157 | 849 | — 1 | — 0.05 |
| 1968 /69 — | 2,497 | 2,433 | 1,112 | 64 | 2.56 |
| 1969 /70 — | 2,736 | 2,860 | 1,026 | — 124 | — 4.53 |
| 1970 /71 — | 2,815 | 3,089 | 1,054 | — 274 | — 9.73 |
| 1971 /72 — | 3,282 | 3,440 | 1,207 | — 158 | — 4.81 |
| 1973 — | 4,034 | 3,916 | 1,543 | 118 | 2.93 |
| 1974 — | 4,787 | 4,545 | 1,841 | 242 | 5.06 |
| 1975 — | 5,084 | 5,226 | 2,556 | — 142 | — 2.79 |
| 1976 — | 5,739 | 5,866 | 3,448 | — 128 | — 2.23 |
| 1977 — | 6,686 | 6,498 | 3,210 | 188 | 2.81 |

பட்சத்தில் உழைப்பாளர்களுக்கான கேள்வியிலும் நிரம்பலிலும் சமனின்மை ஏற்பட்டு வேலையின்மை உருவாக முடியும் என்பதனை ஸ்ரீலங்காவின் உதாரணம் காட்டி நிற்கிறது.

எது எவ்வாறிருப்பினும், கடந்த முப்பது வருட காலமாக சமூக சேவைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா பின்பற்றி வந்த தாராள மனப்பான்மைக் கொள்கைகள் காரணமாக, தொடர்ந்தும் அதிகரித்து வரும் சனத் தொகைக்கு மத்தியிலும் சராசரி வாழ்க்கைத் தரத்தைச் சீர்குலைவின்றிப் பேணிக் காப்பதில் இந் நாடு வெற்றி கண்டுள்ளது என்றே கூறவேண்டும். அத்துடன், சுதந்திரத்துக்கு முன்னர் 1000க்கு 20 ஆக இருந்த மரண விகிதம் இப்பொழுது 8 ஆகக் குறைந்துள்ளது. மேலும் இதே கால கட்டத்தில், சிசு மரண விகிதம் 1000க்கு 141 ஆக இருந்து 51 ஆக குறைந்துள்ளது; தாய் மரணம் 1000க்கு 2ஐ விடவும் குறைந்துள்ளது. 1946ல் 42 வருடங்களாக இருந்த வாழ்வெல்லை இப்பொழுது 66 வருடங்களாக அதிகரித்துள்ளது. கலோரி உட்கொள்ளல் சிபார்சு செய்யப்படும் தேவையளவை மிக அண்மித்து விட்டது. 6100 மக்களுக்கு ஒரு வைத்தியர் வீதம் இருக்கின்றார்கள். அத்துடன் ஒரு வைத்தியசாலைக் கட்டிலுக்கான சனத் தொகை விகிதம் 330 ஆகும். இவை யாவும் சுகாதார நலன்களின் விருத்தியுற்று வந்திருப்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

கல்வியைப் பொறுத்தவரையில், எழுத வாசிக்கத் தெரிந்தோர் தொகை 78% வரை உயர்ந்து சென்றுள்ளது; ஆரம்பப் பாடசாலை நுழைவுத்தொகை 86% ஆக இருக்கின்றது. இன்று 22 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் வீதம் இருக்கின்றனர்; பத்தாண்டுகளுக்கு முன்னைய நிலைமையை விடவும் (1:28 — 1968) இது திருப்திகரமானதாகும். மொத்த ஆசிரியர் தொகையில் பட்டதாரி ஆசிரியர் சதவீதம் 1968ல் 8% இலிருந்து 1977ல் 16% ஆக அதிகரித்துள்ளது. பல்கலைக்கழக மாணவர் தொகையிலும் பெரும் அதிகரிப்புக் காணப்படுகின்றது.

சமீப காலத்தில் நம் நாடு எய்தியிருக்கும் சமூக நல முன்னேற்றம் குறித்த பிறிதொரு குறிகாட்டி வருமானப் பங்கீட்டு முறையாகும். அடுத்தடுத்து வந்த அரசுகளின் வருமான மறுபங்கீட்டு உத்திகளின் மிகப் பிரதான கூறாக, பெருந்தொகையான சமூக நலச் செலவொதுக்கம் இருந்து வந்துள்ளதென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். வருமானப் பங்கீட்டு அமைப்பு முறையின் சாதக நிலைமைக்கு இத்தகைய செலவினங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் காரணமாக இருந்து வந்துள்ளன. காலத்துக்குக் காலம் மத்திய வங்கி மேற்கொண்ட பல நுகர்வோர் நிதி ஆய்வுகள் மாறுதல்களுக்குள்ளாகி வரும் வருமான அமைப்புக்களைக் காட்டும்.

சமூக நலக் கொள்கைகள் தொடர்பான ஸ்ரீலங்காவின் அனுபவத்திலிருந்து நாம் அவதானிக்கும் பிரதான அம்சம் யாதெனில், அரசின் சமூக நலத் தொடர்பான கொள்கைகளுக்கும், உற்பத்தி சார் உத்திகளுக்குமிடையிலான தொடர்பாகும். பல்வேறு நோக்கங்களுக்குமான மூலவளப் பங்கீட்டில் சமநிலை காண்பது எப்போதும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது. இவற்றில் மிகச் சிக்கலான பிரச்சினை முன்னுரிமை வழங்க வேண்டிய நோக்கங்களை இனங் காண்பதும், பொருத்தமான நேரத்தில் இத்தகைய முன்னுரிமைகளை வழங்குவதுமாகும். இத்தகைய பின்னணியில் பொருத்தமான அபிவிருத்தி உத்திகளை வகுத்து, அரசின் அடிப்படைச் சமூக நலக் கொள்கைகளுக்குப் பங்கம் ஏற்படா வகையிலும், சமூக அரசியல் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பேற்படாத முறையிலும் அவற்றைப் பிரயோகித்தல் அவசியமாகும்.

கடந்த சில வருடங்களில் நம் நாடு தாண்டி வந்திருக்கும் அபிவிருத்திப் பாதையில் வறுமையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ரீதியில் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டிருக்கும் வளர்முக நாடுகளின் மக்கள் பிரிவினரை 'வறியவர்களிலும் வறியவர்கள்' என்ற சொல்லால் அழைப்பது வழக்கமாகிவிட்டது. சமூக சேவைத்துறை நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்று கொழும்பு மாவட்டத்தில் சமூக சேவையின் நிலை பற்றி மேற்கொண்ட ஆய்வொன்றின் பிரகாரம், மிகவும் மோசமான வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட இத்தகைய மக்கள் பிரிவொன்று இருந்து வருவது தெரிய வந்தது. 'வறியவர்களிலும் வறியவர்களான' இம்மக்களை இக்குழு பின்வருமாறு வர்ணிக்கின்றது.

தேசிய ரீதியில் அவர்களை இனங்கண்டு கொள்ள முடிவதில்லை; நகர் சார்ந்த ஒதுக்குப்புறங்களிலும், கிராமப் பகுதிகளிலும் இவர்கள் வாழ்கிறார்கள். பொது நலச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான அலுவலக நடைமுறைகளையோ, ஏனைய ஒழுங்குகளையோ அவர்கள் அறிய மாட்டார்கள். இன்றும் கூட, சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கால விரயம், கூடிய முயற்சி, பணச் செலவு போன்றவற்றை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. வைத்திய சேவைகளைப் பெற்றும் கொள்ளும்போது பிரயாணம், மருந்துப் பொருட்கள் வாங்குதல், உணவுப் பொருட்கள் வாங்குதல் போன்றவற்றுக்கும் பணம் தேவைப்படுகின்றது. நோய்வாய்ப்பட்டிருக்கும் சிறுவர்களைப் பொறுத்தளவில் பெற்றோர் அன்றாட உழைப்பு வருமானத்தை வைத்திய சிகிச்சையில் செலவிட வேண்டி நேரிடும். அதே போன்று சிறுவர்களுக்குக் கல்வி வழங்கும் போதும் புத்தகங்கள், ஆடைகள், உணவு, போக்குவரத்து போன்றவற்றிற்காக செலவினங்களைச் செய்ய வேண்டியேற்படும். மேலும், உபகாரச் சம்பளங்களைப் பெறுவதற்குக்கூட விண்ணப்பங்களை எழுதி அனுப்புதல், போக்குவரத்து போன்றவை குறித்த ஆரம்பச் செலவுகள் தவிர்க்க முடியாதவையாகும். காசநோயாளர்கள் அரசாங்கம் வழங்கும் பணக் கொடுப்பனவைப் பெறுவதற்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை சமர்ப்பித்தல் அவசியமாகும். ஆனால் இவ்வத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு வைத்திய நிலையங்களுக்குச் செல்வதற்கு அவர்களுக்கு பண வசதியில்லை. கல்வி இலவசமாக வழங்கப்பட்டாலும் கூட பாடசாலைக்குச் செல்வதில் பல செலவுகள் ஏற்படுவதுண்டு. மேலும் ஒரு குழந்தையின் வீட்டு வாழ்க்கைப் பின்னணி சிறந்ததாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே சரியான கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எமது சமூக அமைப்பு, சகல மட்டங்களிலும் உதவிகளைக் கொடுப்பதிலும், பெற்றுக்கொள்வதிலுமே தங்கியுள்ளது. இத்தகைய சமுதாயமொன்றில் வாழும் வறியோரிலும் வறியோர் பெருமளவில் பணித்துறை ஆட்சியின் கெடுபிடிகளின் பாதிப்பிலும், அரசியல் வாழ்வின் அரவணைப்பிலுமே தம் வாழ்க்கையைக் கழிக்க வேண்டி நேரிட்டுள்ளது

வறியோர்களிலும் வறியோர்களான மக்கள் தம் வாழ்க்கையை ஓட்டுவதற்காக சமூகத்தினால் நிராகரிக்கப்பட்ட சில செயல்களில் இறங்க வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பாடசாலை வயதில் இருக்கும் சிறுவர் ஓரிரு வருடங்களிலேயே பாடசாலைகளிலிருந்து விலகி விடுகின்றனர். அல்லது பாடசாலைக்கு அவர்கள் அறவே செய்வதில்லை. சிலர் பகுதி நேர வேலைகளைத் தேடிக் கொள்கின்றனர்; அல்லது பெற்றோரைப் பிரிந்து வீட்டு ஊழியராகச் செல்கின்றனர். வேறும் சில பெற்றோர் வசதியான குடும்பங்களுக்கு தம் பிள்ளைகளைக் கொடுத்து விடுகின்றனர். எஞ்சியிருக்கும் சிறுவர்கள் நகர்களில் பிச்சைக்காரர்களாகவோ, அழுக்கு அகற்றுபவர்களாகவோ தம் இளம் பிராயத்தின் வாழ்வை ஆரம்பிக்கின்றனர். காலப் போக்கில் இச் சிறுவர்கள், போதை வஸ்து வியாபாரம், கள்ளச் சாராயம் வடித்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடத் தொடங்குகின்றனர்.

பங்கீட்டுப் புத்தகத்திற்காகப் பெறப்படும் உணவு மற்றும் பொருட்கள் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வெளியே விற்கப்படுகின்றன. உணவுப் பண்டங்களின் விலைளுக்கு வாழ்க்கைத்தரம் மேலும் சரிந்து செல்கின்றது. அரசு சலுகை விலைகளில் மானியமாக வழங்கும் உணவுப் பண்டங்களை நுகராது அவர்கள் விற்று வருகின்றனர். இதன் விளைவாக அரசாங்கத்தின் நோக்கம் தோல்வியடைந்திருப்பதுடன் இம்மக்களிடையே சுகாதாரக் கேடு, போஷாக்கின்மை, நோய் போன்றவை தீவிரமாக பரவி வருகின்றன. வறியோர்களிலும் வறியோராக இருக்கும் இம்மக்களிடையே காணப்படும் பிறிதொரு சிறப்பம்சம் யாதெனில் அவர்கள் பெருமளவில் கடன் சுமையால் வாடுவதுடன், தம் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்றவற்றை அடகுக்காரர்களிடம் ஒப்படைக்கின்றனர் இங்கும்கூட அரசின் மானிய உதவித் திட்டங்களின் நோக்கம் தோல்வியடைந்து விடுவதைக் காண முடிகின்றது.

வறியோர்களிலும் வறியோர்களான இம் மக்களுக்குப் போதிய அளவில் அரசியல் ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை அவர்கள் தம் சொந்தக் காலில் நிற்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் பொதுநலன் விரும்பும் தனி நபர்களும், சமூகசேவைத் தாபனங்களும் அவர்களுக்கு உதவி வருவதுண்டு. இத்தகைய உதவிகள் கிடைக்காத பட்சத்தில் இச்சமூகத்தில் வாழும் வயது வந்தோர், நாடோடி வாழ்க்கையிலும், பிச்சையெடுப்பதிலும், விபசாரத்திலும் ஈடுபடத் தொடங்கி விடுகின்றனர்.

வீடமைப்பு வசதிகளைப் பொறுத்தளவில் இம்மக்கள் மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அழுக்கும், அசுத்தமும் மலிந்த சிறு குடிசைகளிலும், சேரிகளிலும் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இதன் விளைவாக அவர்களது குடும்ப வாழ்க்கைத் தரம் மேலும் சீரழிந்து வருகின்றது.

### வருமானம் உழைப்போர் சதவிகிதம்

| மாதமொன்றுக்கு ரூபாய் | முழுத்தீவிலும் | நகர்ப் புறம் | கிராமப் புறம் | பெருந்தோட்டத்துறை |
|---|---|---|---|---|
| கீழ் — 100 | 48.3 | 19.6 | 44.1 | 89.9 |
| 100 — 199 | 27.4 | 30.8 | 32.0 | 7.6 |
| 200 — 399 | 18.9 | 33.1 | 20.0 | 2.1 |
| 400 — 599 | 3.5 | 9.2 | 2.9 | 0.3 |
| 600 — 799 | 1.0 | 3.3 | 0.6 | 0.1 |
| 800 — 999 | 0.4 | 1.1 | 0.3 | 0.0 |
| 1000— க்கு மேல் | 0.5 | 2.6 | 0.1 | 0.9 |

மூலம்: ஸ்ரீலங்காவின் சமூக—பொருளாதார ஆய்வு — 1969—70 பாகம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் சஞ்சலத்திலும் வாடும் பெருந்தொகையான குடியிருப்பாளர்களின் பல பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன என்பது உண்மையே; ஆனால் அதே வேளையில் இவ்வாறான உத்திகளின் பிரயோகம் புதிய பல பிரச்சினைகளின் தோற்றத்துக்குக்காலாக இருந்திருக்கின்றது என்பதையும் நாம் மறந்து விட முடியாது. சமூக நலத்துறையில் வியப்பூட்டும் அளவுக்குக் காணப்படும் சாதகமான விருத்தி நிலைமைகள் பொருளாதார அரங்கில் அதே அளவிலான எதிர்மறை விளைவுகளையும் தோற்றுவித்துள்ளன என்பதனை இங்கு நினைவூட்டல் பொருந்தும். துரிதமான சமூக மாற்றங்கள் தோற்றுவித்திருக்கும் புதிய அபிலாசைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத மெதுவான பொருளாதார வளர்ச்சியும், கூடிய அளவிலான வேலையின்மையும், சென்மதி நிலுவைக் கொடுப்பனவுச் சிக்கல்களும் இத்தகைய எதிர்மறை விளைவுகளாகக் கருதப்படுகின்றன. ஆயினும், இத்தகு பிரச்சினைகளின் தோற்றம் கணிசமானளவு வளங்கள் சமூக நல சேவைகளுக்கு ஒதுக்கப்பட்டமையால் ஏற்பட்டதென அவசியமாகக் கூற முடியாது. இத்தகைய சமூக நல, மறுபங்கீட்டு நடவடிக்கைகளை சாதகமான விளைவுகளைத் தரக்கூடிய பொருத்தமான வழிகளில் இட்டுச் செல்ல முடியாதா என்பதே இன்று எழுப்பப்பட வேண்டிய வினாவாகும்.

## சமூகப் பாதுகாப்பு

கடந்த வருடங்களிற் பின்பற்றப்பட்ட சமூக சேமநல அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள், திட்டங்கள் மூலமாக பல்வேறு அரசாங்கங்களும் சமூகப் பாதுகாப்பு தொடர்பாகப் பரந்த அளவில் கவனம் செலுத்தி முயற்சிகள் மேற்கொண்டு வந்தமை காரணமாக, நாட்டு மக்களுட் பெரும் பகுதியினர் வறுமையின் குரூரத் தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்பட்டனர் என்பதை முன் பக்கங்களிலிருக்கும் பகுப்பாய்வு காட்டுகின்றது. இத்திட்டமானது இலவச மருத்துவ சேவைகள், ஆகக் குறைந்தளவான இலவச பங்கீட்டு உணவு, இலவசக் கல்வி மற்றும் மானிய உதவியடிப்படையில் வழங்கப்பட்ட மற்றும் பல வசதிகள் என்பன இத் திட்டத்தின் பிரதான கூறுகளாயிருந்தன. இவை தவிர வறுமையை ஒழிக்குமுகமாக வேறு பல சமூக நலத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. நிலமற்றோருக்கு நிலம் வழங்கப்பட்டமை, குறைந்த சலுகை பெற்ற அல்லது வசதி குறைந்த விவசாயிகள் தங்களது உற்பத்திகளைப் பெருக்குமுகமாக வழங்கப்பட்ட பல உதவித் திட்டங்கள், மீனவர்கள், கைத்தறி நெசவாளர்கள், கைவினைத் தொழிலாளர்கள், குடிசைக் கைத் தொழில்களில் ஈடுபடுவோர் போன்ற பிரிவினருக்கு வழங்கப்பட்ட பல மானிய உதவித் திட்டங்கள் போன்றவற்றை இதனுள்ளடக்கலாம். இவ் வகையில் சமூக நல அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான இந்நாட்டு அனுபவம் பல வளர்முக நாடுகளினின்றும் வேறுபட்ட ஒன்றாகக் காணப்படுகிறது.

இவை தவிர மேலும் பல சேம நல வசதிகளை அரசு பொதுமக்களுக்காக வழங்கி வருகின்றது. தொழிற் சங்கங்கள் போன்ற ஒன்றியங்கள், கழகங்கள் ஓங்கியிருப்பனவும், ஐக்கியப்பட்டுப் பேரம் பேசும் நிலைமைகள் காணப்படுவனவுமான நிறுவன ரீதியான ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் இந் நலன்களும் வசதிகளும் பெருமளவிற் காணப்படுகின்றன. இதே வேளை, நோய்கள், விபத்துக்கள், வயோதிகம் போன்ற காரணிகளால் தங்கள் வருமானத்தை இழப்போருக்குப் போதிய பாதுகாப்பு வழங்கவென, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நட்டயீடு, வைத்திய லீவு சலுகைகள், மற்றும் இவை போன்ற வேறு அத்தியாவசிய வசதிகள் யாவும் உருவாக்கப்பட்டுள்ளன. நவீன முதலாளித்துவத் துறையின் நிறுவன ஒழுங்கமைப்புச் சந்தையின், வேதனத் தொழில் தொழில் உறவு அம்சங்களின் அத்தியாவசியக் கேட்பாடுகளாக இவை இருக்கின்றன.

பல வளர்முக நாடுகளில் இச் 'சமூகப் பாதுகாப்பு' என்ற கோட்பாடு இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றது. மக்கள் அனைவருக்கும் பயன் தரவல்ல வகையில் பரந்தளவிலான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குமாறு தனது அங்கத்துவ நாடுகளை சர்வதேச தொழில் ஸ்தாபனமும் ஊக்குவித்து வருகிறது. சர்வ தேச தொழில் ஸ்தாபனத்தின் நோக்கு பின்வருமாறு அமைந்துள்ளது: "சமூகமானது அதன் அங்கத்தவர்களுக்கு அல்லது அவர்களுட் பல்வேறு பிரிவினருக்கு தொடரான பல பொது நடவடிக்கைகள் மூலம் வழங்கப்பட்ட பாதுகாப்பாகும். இவை இன்றேல் நோய், பிரசவம், தொழில் விபத்து, வேலையின்மை, வேலைக்கு லாயக்கற்றுப் போதல், வயோதிபம், இறப்பு போன்றனவற்றின் காரணமாக ஏற்படும் வருமானக் குறைவு, இழப்பு என்பன பெரும் பொருளாதாரத் துன்பத்தில் இவர்களை ஆழ்த்திவிடும். இவை தவிர, இவர்களுக்கான வைத்திய உதவிகளை வழங்கல், குறிப்பிடத் தக்களவு பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு மான்ய உதவிகள் வழங்கல் என்பனவற்றையும் இது உள்ளடக்குகிறது." இச் சமூகப் பாதுகாப்பானது, சமூக முன்னேற்றத்தின் பயன்

ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்ட நிலைமைகள் பாரிய சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளமையால் அரசின் சேம நலச் செலவுகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றன. நாம் வாழும் இக் கால கட்டத்தில், இத் தேசத்தில் காணப்படும் சமூக அபிவிருத்தியுடன் எவ்வகையிலும் ஒத்துப் போகாது முற்றிலும் முரணாக இருக்கும் இத்தகைய குடும்பங்களின் எதிர்கால வாழ்க்கை இருள் சூழ்ந்ததாகவே இருக்கின்றது. சிறுவர்களைப் பொறுத்தளவில், அறிவும் ஆற்றலுமிக்க நாட்டின் நாளைய பிரஜைகளாக வளர்ந்து பணி புரிவார்கள் என்பதற்கான எத்தகைய உத்தரவாதமுமில்லை. சனத்தொகையின் ஏனைய பிரிவினர் பயன் பெற்றிருக்கும் சமூக நலன்களில் பங்கு பெற முடியாதவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள்.

நம் நாட்டின் சனத்தொகையினரில் 48.3 வீதக் குடும்பங்கள் மாதத்திற்கு 100 ரூபாவிலும் குறைந்த வருமானத்தையே பெறுகின்றன. நாம் இதுகாறும் கூறிய வறியோர் பிரிவினரும் இத்தொகையில் அடங்குவர்; ஆனால் அவர்களது வாழ்க்கை நிலைமைகளின் அவலமும், அபாயமும் வெளியே தெரிவதில்லை. சமூக நீதியென்ற உயர்ந்த இலட்சியத்தில் ஈடுபாடு கொண்டிருக்கும் நாம் இத்தகைய மக்களின் வாழ்க்கை நிலைமைகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் நிற்கின்றோம். இது இத் தலைமுறையின் தர்மமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 3

## சமூக சேவைகளில் அரசாங்கச் செலவுகள்

(ரூ. பத்து லட்சங்களில்)

| | கல்வி | சுகாதாரம் | வீடமைப்பு | விசேட சேமநல சேவைகள் | சனசமூக சேவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | 15 | | |
| 1968 | 410 | 221 | 32 | 16 | 13 | 691 |
| 1969 | 442 | 248 | 37 | 17 | 13 | 756 |
| 1970 | 512 | 274 | 36 | 18 | 14 | 853 |
| 1971 | 527 | 266 | 16 | 18 | 23 | 850 |
| 1972 | 569 | 280 | 35 | 23 | 25 | 932 |
| 1973 | 602 | 298 | 45 | 45 | 26 | 989 |
| 1974 | 625 | 329 | 31 | 21 | 28 | 1034 |
| 1975 | 708 | 411 | 45 | 29 | 28 | 1221 |
| 1976 | 911 | 499 | 51 | 28 | 37 | 1526 |
| 1977 | 900 | 473 | 74 | 45 | 37 | 1529 |

* நடைமுறை, மூலதனச் செலவுகளை உள்ளடக்கியது.

மிக்க ஒரு கருவி என்ற கருத்து நீண்ட கால அனுபவத்தின் பின்னர் இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது; அத்துடன் அது ஒரு நாட்டின் தொழில் புரியும் மக்களது உரிமை என்பதும் அங்கீகாரம் பெற்றுவிட்டது. மேலும் சமூக, பொருளாதாரத் திட்டங்கள் ஒன்றுடனொன்று இணைந்திருக்க வேண்டுமெனவும், ஒழுங்காக வரையப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்காற்ற உள்ளன என்பதும் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

ஆசியாவின் வளர்முகநாடுகளில் மட்டுமன்றி ஏனைய நாடுகள் பலவற்றிலும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் மலர்ச்சியானது, நகரப்புறங்களில் அமைந்திருந்த நிறுவன ஒழுங்கமைப்புத் தொழில் துறைகளில் காணப்பட்ட நிலைமைகளிலிருந்தே தோன்றி வளர்ந்தது. கைத்தொழில் மயமாக்க நிலைமைகளுடன் இது ஆரம்பித்தது. கிராமியச் சமூகங்களில் நிலவி வந்த ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி ஒத்தாசை புரியும் தன்மை நகர்ப்புறத் தொழிலாளரிடையே அவ்வளவு காணப்படவில்லை. எனவே, அவர்களுக்கு மாற்று சமூகப் பாதுகாப்பு முறைகள் அத்தியாவசியமாயின. இந் நிலையில் அரசாங்கங்கள் இப்பாதுகாப்பை வழங்க முன்வந்தன. நாட்டின் தொழிலாளர்களது நன்மை கருதி அவர்களுக்குப் பல்வேறு சேமநல சேவைகளையும், பொருட்களையும் (அடிப்படை உணவுப் பங்கீடு, இலவசக் கல்வி, வைத்திய சேவைகள் போன்றன) வழங்கவேண்டியதன் அவசியத்தையும், தேவையையும், ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்குழுக்களும், ஆட்சியாளர்களும் அண்மைக் காலத்தில் உணரத் தலைப்பட்டுள்ளனர். அத்துடன், இத்தொழில்துறை சார் பிரிவினருக்கு நிதி மூலமான அனுகூலம் தரக்கூடிய சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சிலவும் கடந்த காலத்தில் தேவைக்கேற்ப ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன.

ஏனைய பல நாடுகளிற் போன்று, இலங்கையிலும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களானவை, வறியோருக்கு வழங்கப்படும் குறித்த ஒரு நிவாரணத் திட்டங்களிலிருந்தும் குறித்த சில தொழில்களில் ஈடுபடும் மக்கட் பிரிவினருக்கு வழங்கப்பட்ட விசேட (நிவாரண) உதவித் திட்டங்களிலிருந்தும் தோன்றி வளர்ந்தன. கைத்தொழில் வளர்ச்சி கண்ட மேற்கத்தைய நாடுகளில் குறித்த ஒரு தொழிலின் இயக்கத்தில் ஏற்பட்ட பொதுவான தடைகள் காரணமாக தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதுகாப்பு (அல்லது தொழில் உறுதி) இழப்பை ஈடு செய்யவெனவே, இந் நடவடிக்கைத் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. நம் நாட்டைப் பொறுத்த வரையில் மலைநாட்டுத் தோட்டங்களில் இந்தியாவிலிருந்து வந்து தொழில் புரிந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பே இவ்வகையில் முதன் முதல் வழங்கப்பட்ட தொழில் பாதுகாப்பாகும். தொடர்ந்து ஏற்பட்ட சமூக அரசியல் விழிப்புணர்ச்சி காரணமாக நிறுவன அடிப்படையிலமைந்த ஏனையதொழில் துறைகளையும் உள்ளடக்கும் வகையில் இத் திட்டம் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது. முதலாம் உலக யுத்தம் வரை, மலையகத் தோட்டங்களுக்கு இந்தியத் தொழிலாளரைச் சேர்த்தல், அவர்களுக்குத் தொழில் வழங்கல் என்பன தொடர்பான தொழிற் சட்டங்களே பெரும்பாலும் உருவாக்கப்பட்டன. ஆனால், 1920 அளவில் தொழிற் கொள்கைகளைக் கூட்டிணைத்தல், தோட்டத் தொழிலாளருக்கு ஆகக் குறைந்த வேதன மட்டத்தை நிர்ணயித்தல், அவற்றைச் சரியாக அமுல் நடத்தல் போன்றவற்றை வலியுறுத்தும் தொழிற் சட்டங்களும் இயற்றப்பட்டன. அரசியல் அறிவு வளர்ச்சியுற்றமை, ஸ்தாபன ரீதியான தொழிற் குழுக்களின் கோரிக்கைகள் போன்றன காரணமாக 1930-ம் 1940-ம் ஆண்டு காலப் பகுதிகளில் ஏனைய துறைகளையும் உள்ளடக்கும் வகையில் முன்னேற்றகரமான பல தொழிற்சேமநலச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களும் இக் காலப் பகுதியிலேயே செயற்பட ஆரம்பித்தன. இந்நிலைமையைத் தொடர்ந்து 1950 களைத் தொடர்ந்த காலப்பகுதியில் மேலும் பல தொழிற் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கைத்தொழிற் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல், உரிமைகளையும் சலுகைகளையும் ஐக்கியத்துடன் கோரிப் பெறல், பேரம் பேசல், தொழில் நீதிமன்றங்கள் போன்ற அண்மைக் காலத்தில் தோன்றி வளர்ந்துள்ள தொழிலாளர்களுக்கான இன்னோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பிற சமூகப் பாதுகாப்புச் சட்டங்களும் 1950க்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களாகும்.

தொழில் உத்தரவாதம், மருத்துவப் பராமரிப்பு, பிரசவ வசதிகள், கைத்தொழிற் பாதுகாப்பு, கைத்தொழிற் சுகாதாரம், தொழிலாளர் நட்டவீடு, ஓய்வு காலக் கொடுப்பனவுகள், இறப்பு நன்கொடைகள் போன்ற பல்வேறு திட்டங்களையும் இச்சேவை (சட்ட விதி)கள் உள்ளடக்கியிருந்தன. அத்துடன், ஊழியர்களுக்கான சேமலாப நிதியும் மற்றும் வறியோருக்கான பல்வேறு வகை சமூக உதவி, நிவாரணத் திட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டன.

தொழிலாளர்களது கொள்வனவுச் சக்திக்கு உத்தரவாதம் வழங்கும் ஒன்றாகவும் இத்திட்டங்கள் மிளிர்ந்தன. அண்மைய வருடங்களில் தொழிற் சட்டங்களின் நோக்கம், எல்லாத் துறைகளைச் சார்ந்த தொழிலாளர்களை உள்ளடக்கும் வகையிற் பரந்து சென்றுள்ளது. இத்தகைய திட்டங்களின் அமுலாக்கமும், சகல துறை தொழிலாளர்களையும் இதில் உள்ளடக்கவேண்டிய அவசியமும் இன்னும் பூரணமாக வெற்றியளிக்கவில்லையென்பது உண்மையே. இத்திட்டங்களை அமுலாக்குவதில் பல செயல் ரீதியான பிரச்சினைகள் காணப்படுகின்றன. உதாரணமாக கைத்தொழில் துறை ஊழியர்களுக்கு அவர்களது தொழில்களுக்கேற்ப ஆகக் குறைந்த வேதனங்களும், நிபந்தனைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எனினும், கைத்தொழில் வேதனச் சபைகள் நிர்ணயிக்கும் வேதன விகிதங்களுக்கும், விவசாயம் சார் தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ளோரின் வேதன மட்டங்களுக்குமிடையே பெரு வேறுபாடு காணப்படுகின்றது. சுமார் 15 இலட்சம் தொழிலாளர்களை மாத்திரமே இக்குறைந்த வேதனமட்டத் தீர்மானங்கள் உள்ளடக்கியுள்ளன. அதாவது இவர்களுக்கு குறைந்த வேதன மட்டம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தவிர, இத்தகைய சட்ட விதிகள் எவ்வளவு தூரம் சிறப்பாக அமுல் செய்யப்படுகிறது என்பதிலேயே சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது. ஆனால், இலங்கையின் மிகப் பெரிய சமூகக் காப்புறுதித் திட்டமான ஊழியர் சேமலாப நிதித் திட்டம் கூட சரியான முறையில் அமுலாக்கப்படவில்லையென்றே கூற வேண்டும். 1976-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த 78,766 வர்த்தக நிலையங்களில் 24,268 நிலையங்கள் மாத்திரமே (31%) இந்நிதிக்குப் பணம் செலுத்தி வந்தன. ஊழியர் சேமலாப நிதி போன்ற பரந்த திட்டங்களில் அதனைப் பெறுவோர், தாம் தொழில் புரியும் காலத்தில் இந் நிதிக்குச் செலுத்திய பணத்தின் விகிதாசாரத்துக் கேற்பவே தமக்குரிய பணத் தொகையை பெறுகின்றனர். மீள் பங்கீட்டுத் திறனைப் பொறுத்தளவில், (உணவு, சுகாதாரம், கல்வி, சேமநலன்) என்பனவற்றை வழங்கும் திட்டங்களே அதி முக்கிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களாக இன்று காணப்படுகின்றன. ஏனெனில், இவை சகல மக்கட் பிரிவினருக்கும் கிட்டுகின்றன. அத்துடன், ஒரு பொதுவரித் துறை மூலமாக இவற்றுக்கான நிதி கிட்டுகிறது. இலங்கையில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டது போன்று எல்லாப் பிரிவினருக்கும் கிடைக்க வேண்டுமெனில், மிகவும் குறைந்த வருமானம் பெறுவோரது பிரச்சினைகள் முதலில் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நவீன நகரப்புறத்தைச் சார்ந்த தொழிலாளரும், ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைக்கப்பெற்று ஒழுங்கான வருமானத்தைப் பெற்று வரும் பெருந் தோட்டத் துறைத் தொழிலாளரும் சமூகப் பாதுகாப்பு விஷயத்தில் பாரம்பரியக் கிராமியத் துறையுடன் ஒப்பிடுகையில் கூடிய வசதிகளைப் பெற்றுள்ளதை இன்று நாம் காணுகிறோம். கிராமியத்துறையில் காலத்துக்குக் காலமே (பருவ காலம்) தொழில் வாய்ப்புக்கள் கிட்டுகின்றன; தவிர, இங்கு சுய தொழில்முறை, சமயாசமய தொழில் முறை என்பனவே பேரளவிற் காணப்படுகின்றன. தாபன ரீதியான தொழில் துறைக்கான மரபு ரீதியான சமூகப் பாதுகாப்பு, இக்கிராமியத் துறைக்கு பலன் தருமெனக் கூற முடியாது. அவர்களைப் பொறுத்தளவில், சமூகப் பாதுகாப்பின்மைப் பிரச்சினையை, அபிவிருத்திப் பிரச்சினையினின்றும் பிரித்து தனித்து ஆராய முடியாது. அவர்களது பின்தங்கிய நிலைமைகளையும், உற்பத்தி அமைப்புகளையும் மாற்றியமைக்கும் பணி, பேரளவில் ஏற்படும் நட்டத்தைப் பல்வேறு வகைகளிற் குறைத்தல் என்பனவும் மிக ஆழமாகக் கருத்திற்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் சமூகப் பாதுகாப்பு என்பது, வருமானத்தில் நம்பிக்கையின்மை நேரல், எல்லை ரீதியான பாதுகாப்பின்மை போன்ற நிலைமைகளைச் சமாளிக்கவே நிச்சயமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன; பொருளாதார ரீதியில் குறை விருத்தி பெற்றுள்ள நாடுகளுக்கு இச்சமூகப் பாதுகாப்பு என்பது பரந்தமைந்த ஓர் உபாயத்தை கட்டாயமாக்கியுள்ளது. வருமான மீள் பங்கீடு, வருமான மாற்றம் என்பன தொடர்பான கொள்கைகளை ஆராய வேண்டியது இங்கு அவசியமாகின்றது.

## பொதுமக்கள் உதவியும் நிவாரண சேவைகளும்

வசதியற்ற மக்களது தேவைகள் கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகளும், பாதிக்கப்பட்ட, உதவி தேவைப்படுவோருக்கென வழங்கப்படும் பொது நிவாரணமும் இலங்கையின் சமூக சேவைகளுள் குறிப்பான ஓர் இடத்தை வகிக்கின்றன. வறியோர் — பிச்சைக்காரருக்கு வழங்கப்படும் நிதிக் கொடைகள். நிரந்தர நோய் காரணமாக உழைத்து வருமானம் பெற முடியாதிருப்போருக்கு வழங்கப்படும் நிதியுதவிகள், வெள்ளம் போன்ற அழிவுகளால் பாதிக்கப்படும் அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் அவர்களது புனர் வாழ்வு, மீளவும் குடியமர்த்தல் என்பனவற்றுக்கு ஆகும் செலவுகள், வயோதிபருக்கும், வலது குறைந்தோருக்குமான (அங்கவீனர்) சேம நல சேவைகள், உடல், உள ரீதியிற் பாதிக்கப்பட்டோருக்கும், சமூக ரீதியில் வசதி குறைந்தோருக்குமான புனர் வாழ்வுச் சேவைகள் என்பனவற்றை இவை உள்ளடக்குகின்றன.

இச்சமூக உதவிச் சேவைகளுட் பெரும்பாலானவை இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து 1940க்களின் பிற் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டவை. உடனடி நிவாரண நடவடிக்கைகளை வலியுறுத்துமுகமாகவே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், வறுமைப் பிரச்சினையானது பாரிய அளவில் வளர்ந்து சென்றபடியால், இந் நிவாரண சேவைகள் சமூகத்தின் மிக மிக வறிய மக்கட் பிரிவினருக்கே (அதுவும் ஓரளவில்) கிடைத்

(13ம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்தி—யாருக்காக? எதற்காக?

—டட்லி சியர்ஸ்

அபிவிருத்தியைப் பொருளாதார அபிவிருத்தியுடனும், பொருளாதார அபிவிருத்தியைப் பொருளாதார வளர்ச்சியுடனும் நாம் அடிக்கடி போட்டுக் குழப்பிக் கொண்டுவிடுகிறோமாயினும் அவற்றை நாம் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். சனத்தொகை வளர்ச்சி வேகத்தைவிட, தேசிய வருமானத்தின் வளர்ச்சி வேகம் அதிகமாக, விரைவாக இருப்பின் உடனடியாகவோ அல்லது சிறிது பிற்பட்ட காலத்திலோ சமூக, அரசியற் பிரச்சினைகளுக்கு அது தீர்வாக அமையுமென்ற எடுகோளை நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், கடந்த பத்தாண்டு கால அனுபவத்தைக் கொண்டு பார்க்கையில், இந்நம்பிக்கை அவ்வளவு தூரம் திருப்தி தருவதாக இல்லை. பல நாடுகளில் அபிவிருத்தியின் பல்வேறு கட்டங்களிலும் சமூகப் பிரச்சினைகளும், அரசியற் கிளர்ச்சிகளும் தோன்றியுள்ளன. இதனை விரைவாக வளர்ச்சியுறும் தலா வருமானங்களைக் கொண்ட நாடுகளிலும் அதே போன்று தேக்க நிலை கொண்ட (வளர்ச்சியில்லாத) பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளிலும் நாம் காணக்கூடியதாகவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. உண்மையில், பொருளாதார வளர்ச்சியானது, சமூக அரசியற் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிற் தோல்வியடைய மாட்டா எனத் தோன்றினும், சிலவகையான வளர்ச்சிகள் உண்மையில் அத்தகைய பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முடியுமென்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

தற்போது நாம் எதிர்நோக்கும் சவால்களைப் பற்றி ஆராய்வதன் ஆரம்பமாக, "அபிவிருத்தி" என்பதைச் சுற்றி நாம் இன்று ஏற்படுத்திக் கொண்டுள்ள கற்பனையுருவங்களைக் களைதல் அமைதல்வேண்டும். "அபிவிருத்தி" என்பது தவிர்க்க முடியாதபடி ஒரு வடிவியலான சொல்லாக அமைந்துள்ளது. நாம் அதன் மூலம் விளங்கிக் கொள்வதென்ன என்பதைத் தெளிவாகத் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும் அத்துடன், மனித ஆளுமையின் உள்ளார்ந்த தன்மையை உணர்ந்து கொள்ளல் வேண்டும். அத்துடன், கொள்ளக்கூடிய இலக்கை எய்தத் தேவையான நிலைமைகள் யாவை என்பதை நாம் எம்மைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இதற்கான அத்தியாவசியமான ஒரு தேவை என்ன என்று நாம் கேட்கும் பட்சத்தில் அதற்கான வெளிப்படையான ஒரு விடை "போதியளவு உணவு" என்பதாகும். ஒரு மனிதனது போஷாக்கு, குறித்த சில மட்டங்களை விடக் குறையும் பட்சத்தில் அவனது உடல் வலு, ஆரோக்கியம், ஆர்வம் என்பன குன்றி விடுகின்றன. சிறுவர்களைப் பொறுத்தளவிலும் இதே நிலைமைதான்.

உணவைக் கொள்வனவு செய்ய வருமானம் துணை செய்கிறது; எனவே, இதற்கான அளவு கருவியை வருமான மட்டங்களில் குறிப்பிடலாம். இது, ஆகக் குறைந்த வேறு சில தேவைகளையும் கருத்திற் கெடுத்துக் கொள்ள உதவுகிறது. மக்கள், அவர்கள் எவ்வளவுதான் வறியவர்களாகவிருந்தாலும், அவர்கள் தங்கள் பணம், சக்தி என்பன முழுவதையும் உணவுக்குச் செலவிட மாட்டார்கள். வருமானம் உணவுடன் அடிப்படைத் தேவைகளான உடை, உறையுள், காலணி முதலியனவற்றையும் உள்ளடக்க வேண்டியுள்ளது. ஆனால், இத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டவுடன் பணத்தின் பயன்பாடானது ஒரேயடியாகக் குறைந்து செல்கிறது.

இன்னொரு அடிப்படைத் தேவையாக தொழிலைக் கொள்ளலாம். இது இன்றி மனிதனது ஆளுமை விருத்தியுற மாட்டாது. இது வெறுமனே தொழில் வாய்ப்பைக் குறிக்கவில்லை; கல்வி கற்றல், வீட்டுப் பண்ணையொன்றில் தொழில் செய்தல், வீட்டுப் பராமரிப்பு போன்றனவற்றையெல்லாம் உள்ளடக்கும். நிரந்தரமாக வேலையின்றி இருத்தல், உணவுக்காயினும்கூட இன்னொருவரது உற்பத்தித் திறனில் தங்கியிருத்தல் போன்று மேற்சொன்ன எதையும் செய்யாதிருத்தலானது ஒருவரது சுயகௌரவத்துக்கும் மதிப்புக்கும் ஒத்துப் போகாத ஒன்று குறிப்பாக எதிர்காலம் பற்றிய உயர்ந்த இலட்சியங்களுடன் பல வருடங்களைப் பாடசாலையிலும் பல்கலைக் கழகத்திலும் செலவிட்ட ஒருவரது விஷயத்தில் இது மிக முக்கியம் பெறுகின்றது.

வறுமை, வேலையின்மை என்பன இரண்டும் தலா வருமானத்துடன் பல்வேறு வகைகளிற் தொடர்பு கொண்டுள்ளன என்பது உண்மையே. தலா வருமானங்கள் வீழ்ச்சியடைகையில், முழு வறுமை நிலையைப் பெருமளவிற் குறைத்தல் கடினம்; இதே போன்று வேலையின்மைப் பிரச்சினையைக் குறைத்தலும் கஷ்டம். இதே வேளை, தலா வருமான அதிகரிப்பு இப்பிரச்சினைகளைப் போக்குமெனக் கூறவும் முடியாது. பெற்றோலியப் பொருளாதாரங்கள் எமக்கு எடுத்துக் காட்டி நிற்பது போன்று, வறுமை, வேலையின்மை என்ற இரு பிரச்சினைகளுள் ஒன்றையாவது தீர்க்க தலா வருமானத்தின் அதிகரிப்பு உதவாது. உண்மையில், தலா வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பானது வளர்ந்து செல்லும் வேலையின்மைப் பிரச்சினையுடன் நிகழலாம்; அல்லது வளர்ந்து செல்லும் வேலையின்மைப் பிரச்சினையைத் தோற்றுவிக்கலாம்.

ட்ரினிடாடில், 1953க்கும் 1968க்கும் இடைப்பட்ட காலத்தில், தலா வருமான வளர்ச்சி வருடா வருடம் சராசரி 5 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தது; இதேவேளை வேலையின்மையானது, மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் 10 சதவீதத்துக்கும் அதிகமாக நிலையாகவும் உறுதியாகவும் வளர்ந்து வந்தது.

அபிவிருத்தியின் இன்னொரு மூலக் கூறாக சமத்துவம் கொள்ளப்படல் வேண்டும். இன்றைய உலகில் குறிப்பாகக் கைத்தொழில் நாடுகளுக்கு வெளியே காணப்படும் சமத்துவமின்மையானது, சமய, ஒழுக்கவியல் அடிப்படைகளில் எதிர்க்கத்தக்கவையாக — கண்டிக்கப்பட வேண்டியவையாகக் காணப்படுகின்றன. ஒரு சமத்துவ சமூகத்திற் காணப்படும் சமூகத் தடைகள், உயர் வருமானம் பெறுவோரது ஆளுமைகளை உருத்திரித்து விடுகின்றன; வறுமையாற் பீடிக்கப்பட்டுள்ள மக்களது நிலைமைகள் இதற்கு விதி விலக்கன்று. தலைமுறை, மொழி, உடை, பழக்க வழக்கம் முதலியனவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறிய, பயனற்ற வேறுபாடுகள் அடியோடு முக்கியமற்ற முக்கியத்துவத்தையே பெறுகின்றன. உண்மையில் அவை நகைப்பிற்கிடமானவை. அத்துடன், சமூகப் பண்பும் நல்லெண்ணமும் கற்றோரிடையே தான்— குறிப்பாக நாட்டுப்புற மக்களிடையே— வெறுப்பு, புறக்கணிப்பு போன்ற இழிவான பண்புகள் ஏற்படுத்தப் படுகின்றன. சாதி என்பது வழமையாக, வருமானத்துடன் உயர்ந்த அடிப்படையிற் தொடர்புற்றுள்ளதால், பொருளாதார சமத்துவமின்மையானது, சாதி சார்ந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு அல்லது நெருக்கடி நிலையின் மத்தியிலேயே காணப்படுகிறது என்று கூறுவது ஒருவேளை மேலும் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ம் பக்கத் தொடர்ச்சி

தன. இந்தக்கு சமூக சேவைகளின் தற்போதைய அமைப்பு கூட, நிறுவன ஒழுங்கமைப்புடன் கூடிய பணித்துறையாட்சி சார்ந்த ஓர் அமைப்பாகக் காணப்படுகிறதே யன்றி, மக்கள் சார்ந்த மக்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நோக்குடன் கூடிய ஒரு சேம நலத் திட்டமாக இருக்கக் காணோம். மேலும் இதுவரை காலத் தேசியத் திட்டமிடலில் இவை குறைந்தளவு முன்னுரிமையையே பெற்று வந்தன. அத்துடன் சமூக சேவை அமைச்சின் செலவினங்கள் தனியே நுகர் செலவினங்களாகவே கருதப்பட்டன.

மாறாக, ஏனைய பல வளர் முக நாடுகளில் சமூக சேமநல, உதவிச் சேவைகள் வெறுமனே பிரச்சினைகளையும், துன்பங்களையும் தீர்க்கும் நிவாரண நடவடிக்கைகளாக வன்றி, பிரச்சினைகள் உருவாவதைத் தடுத்து பொது அபிவிருத்தி என்ற குறிக்கோளை எய்தும் நோக்கில் வழிப்படுத்தப்பட்டு வருவதனைக் காண முடிகின்றது. நம் நாட்டிலும் இதன் தேவை உணரப்பட்டுள்ளதுடன், இவ் வழியில் எமது திட்டங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஏனைய அரசதுறைகளான காணி விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து, கல்வி, வீடமைப்பு என்பன தொடர்பான கொள்கைகளும், நிறுவன அமைப்புகளும் பெருகிவரும் தேவைகளுக்கும், சமூக பொருளாதார மாற்றங்கள் விடுக்கும் புதிய அறை கூவல்களுக்கும் ஏற்ப மாறுதல்களுக்குள்ளாகி வருவதைக் காணமுடிகின்றது. எனவே, இவ்வுதவிச் சேவைகள் தொடர்பான திட்டங்கள் அவற்றின் இலக்குகள், நிறுவன அமைப்பு என்பனவற்றில் முழுமாற்றத்தைக் கொண்டுவர வேண்டிய காலம் வந்துவிட்டது. தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் சமூக சேவைகள் அமைச்சு மேலும் நெருங்கி ஒன்றிணையவும் இது பெருமளவு உதவும்.

சமூக சேமநல நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களை அழைத்து 1968ல் ஐ. நா. சபை நடத்திய சர்வதேச மாநாடொன்றில் சமூக நலன் குறித்த இப்புதிய பார்வை அங்கிகாரம் பெற்றாலும் கூட, நம் நாட்டில் அதன் தாக்கம் குறைவாகவே இருந்து வந்துள்ளது. அம் மகாநாட்டின் உடனடி நோக்கத்துக்கென பின்வரும் விஷயம் ஏற்றுக் கொள்ளப்பட்டது:-

"சமூக சேமநல நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் பாரிய சமூகத்துறைகளான கல்வி, சுகாதாரம் தொழில் வாய்ப்பு, வீடமைப்பு என்பனவற்றில் நேரடியாக ஈடுபடாது விட்டாலும் கூட, அபிவிருத்திச் செய் முறையில் சகல மக்களினதும் பங்களிப்பைப் பெறவும், யாவர்க்கும் உரிமையான சமூக வாழ்க்கைத் தரத்தைப் பேணிக்காக்கவும் அவர் பொறுப்பாக இருக்க வேண்டும். அமைச்சரின் சிரத்தை முழு மக்களுக்கும் நலன் புரிவதாக இருக்கும் அதேவேளை, மிகவும் கஷ்டப்பட்ட வறுமையுற்ற மக்கட் பிரிவினரிடம் விசேட அக்கறை காட்ட வேண்டும். அத்துடன், தங்களதும், சமூகத்தினதும் முன்னேற்றம் கருதி, அது தொடர்பான முயற்சிகளில் பிரஜைகளை முழுமுயற்சியுடன் ஈடுபட ஊக்குவிக்கவேண்டியதும் அமைச்சின் முக்கிய பணியாகவிருக்கவேண்டும்..."

இவ்வமைச்சர்கள் சமூக சேம நல நடவடிக்கையின் பணியொன்றையும் அங்கிகரித்தனர்; இதனை அவர்கள் தொகுதி வாரியான ஏனைய திட்டங்களுக்கு ஓர் "ஆதாரமான" அம்சமாகக் கொண்டனர். இதில், "சமூக சேம நலமானது, சுகாதாரம், வீடமைப்பு, கல்வி, மனித வளப் பயிற்சி, தொழில் வாய்ப்பு என்பனவற்றின் அபிவிருத்திக்கும், கிராம நகர அபிவிருத்தி, கைத்தொழிலாக்கம், ஜனத்தொகை என்பனவற்றுடன் தொடர்புடைய பரந்த கொள்கைகளுக்கும் தேவையான ஆதாரவை வழங்கும்." (தேசிய திட்டமிடல் கருத்தில் சமூகச் சேம நலத் திட்டமிடல், ஐக்கிய நாடுகள், நியூயோர்க் 1970)

இத்தகைய சேம நல உதவித் திட்டங்கள், தேசிய செல்வத்தை மேலும் சிறந்த ஒரு வகையில் பங்கீடு செய்யக் கூடிய பலம் வாய்ந்த ஒரு சமூக நிறுவனமாக அமையுமென்பது நிச்சயம். இதன் மூலம் சமூகத்தின் ஆகக் குறைந்த மட்டத்திலுள்ள உழைப்பாளர்களும், வசதி குறைந்தோரும் கூட நன்மை பெறுவர். இவ்வகையில் இங்கு, மீள் பங்கீட்டு அம்சம், நிவாரண உதவியை பங்கிடு செய்வதை மட்டுமன்றி, ஒரு தொகையான சேவைகளின் பங்கீட்டையும், தனிமனிதனையும் குடும்பங்களையும் 'அபிவிருத்திப் பாதையில் வைத்து, அபிவிருத்தித் திட்டங்களின் முழுப் பயனையும் அவர்கள் பெற்றுக் கொள்ள உதவும் தொழில்நுட்ப ரீதியான தலையீட்டையும் குறித்து நிற்கிறது.

இத்தகைய சமூக உதவித் திட்டம் உறுதியாகச் செயற்படத் தொடங்கும் பட்சத்தில், அது சாதிக்க வேண்டிய சில அடிப்படைப் பணிகள் உள்ளன. உதாரணமாக, சமூக சேவையிலுள்ள அபிவிருத்திப் பணியானது, அபிவிருத்தியில் மனிதனுக்குள்ள இடத்தை அங்கீகரிக்கிறது. குடும்ப வாழ்க்கையைப் பலப்படுத்துவதுடன், மனித வளத்தை அபிவிருத்தி செய்வதிலேயே அது பிரதானமாக ஈடுபட்டுள்ளது. அத்துடன் தேசிய அபிவிருத்தியில், மக்களை, குறிப்பாக சிறுர்களையும்,

எனவே, ஒரு நாட்டின் அபிவிருத்தி பற்றிக் கேட்கக் கூடிய கேள்விகள், "வறுமைக்கு என்ன நிகழ்ந்து வந்துள்ளது?" "வேலையின்மைக்கு என்ன நடந்து வந்துள்ளது?", "சமத்துவமின்மைக்கு என்ன நிகழ்ந்துள்ளது?" என்பனவாகவே உள்ளன. மூன்றிலும் வீழ்ச்சி காணப்படின் சந்தேகத்துக்கிடமின்றி, அந்நாட்டில் அபிவிருத்தியுடன் கூடிய ஒரு காலப் பகுதி இருந்துள்ளது என்று கூறலாம். இம் மத்திய பிரச்சினைகளுள் ஒன்றோ, இரண்டோ மோசமாக வளர்ந்து சென்றால்,— விசேஷமாக மூன்று பிரச்சினைகளும் வளர்ந்து செல்லின்—தலா வருமானம் இரு மடங்காக அதிகரித்தாலும் கூட அவற்றின் விளைவுகளை "அபிவிருத்தி" எனக் கூறல் விந்தையாகும்

பொருளாதார வார்த்தைப் பிரயோகங்களால் விளக்க முடியாத, பெருமளவு விஷயங்களை மானிட உள்ளார்ந்த வளத்தின் நிறைவானது நாடி நிற்கிறது. மற்றெல்லாத் தேவைகளையும் இங்கு என்னால் கூறமுடியாது, ஆனால், அவற்றை நான் கூறாது விட்டால், அது சம நிலையற்ற ஒன்றாகக் காணப்படும். போதுமான கல்வி மட்டங்கள், பேச்சுச் சுதந்திரம், அரசியல், பொருளாதார ரீதியில் உண்மையான சுதந்திரமுடைய ஒரு நாட்டின் பிரஜாவுரிமை போன்ற பல விஷயங்களை இவை உள்ளடங்கியுள்ளன ஏனைய நாட்டு அரசாங்கங்களின் கருத்துக்கள், இந்நாட்டின் தீர்மானங்களிற் செல்வாக்குச் செலுத்தக் கூடாதென்பதையே இந்த உண்மையான சுதந்திரமுடைய நாடு என்ற சொற்றொடர் குறித்து நிற்கிறது.

(1969— நவம்பர் மாதம் புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் 11-வது உலக மகாநாட்டின் தலைமை யுரையிலிருந்து......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களையும் — அவர்கள் ஆற்ற வேண்டிய பங்கையும், சாதனையையும் வலியுறுத்தி அதற்கென அவர்களைத் தயார் செய்வதையும் அது தனது பணியாகக் கொண்டுள்ளது.

நிவாரண அல்லது பரிகாரப் பணியானது, பல்வேறு நெருக்கடிகள் காரணமாக, சமூகத்தினை நம்பி அதிற் தங்கியிருப்போர், கைவிடப்பட்ட அல்லது ஒதுக்கிவிடப்பட்ட பிள்ளைகள், வயோதிபர், அங்கவீனர்கள், வாழ்க்கை வருமானம் இன்றிக் கஷ்டப்படும் ஏனைய மக்கட் பிரிவினர் அனைவருக்கும் இடமளிக்கிறது. தனது ஆதரவு சேவைகள் மூலமும், சுகாதார, வீடமைப்பு, கல்வி மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேலும் சிறப்பாக அமுல் செய்வதன்மூலமும் சமூக உதவித் திட்டமானது, அபிவிருத்தி தொடர்பான விஷயங்களில் பாரிய ஒரு பங்களிப்பை நல்கலாம். சமூக ஒழுங்கின்மைக்கு, வறுமை ஒரு பிரதான காரணம் என்பதையும், ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அது ஒரு தடைக் கல் என்பதையும் நாம் உணரும்போதுதான், இந்த ஆதரவு சேவைகளது முக்கியம் நமக்கு விளங்குகிறது. கல்வியின்மை அல்லது அறியாமை, நோய்கள், துன்பம், உற்பத்திக் குறைவு, கவனயீனம், அக்கறையின்மை போன்றனவெல்லாம் வறுமையுடன் பிறந்தவை; மேலும் இவை அபிவிருத்தியைத் தடைப்படுத்துகின்றன.

நிவாரணம், பொது உதவிகள், சேவைகள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் முதலிய வகைகளில் பிரதானமாக ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற் துறைகளுக்கு வழங்கப்படும் சமூக சேவைகள் பொதுப் பொருளாதார மட்டத்தை உயர்த்தும் எனக் கருத முடியாது. நாட்டின் பொருளாதார வளங்கள் சிலவற்றை மீள்பங்கீடு செய்வதற்கப்பால் அவற்றின் பணி விரிந்து செல்லவில்லை. இச் சேவைகள் பற்றி மேற்கூறப்பட்ட விளக்கத்திலிருந்து, அவை செல்வத்தை உருவாக்குவதற்கான மூலங்கள் அல்ல என்பதும், மறைமுகமாகவும், ஒரு நீண்ட காலப் பகுதியிலும் அதனை பங்கீடு செய்ய உதவும் ஒரு முறை என்பதும் விளங்கும். உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் உழைக்கக் கூடிய ஜனசமூகமொன்றை உருவாக்க இச் சேவைகள் துணைபுரிகின்றன என்பது உண்மையே; ஆனால் பிரச்சினை இதற்கப்பாலும் வேரூன்றிச் செல்கின்றது.

ஸ்ரீ லங்காவின் நிலைமை எப்போதும் விதிவிலக்காகவே இருந்து வந்துள்ளது. வளர்ச்சியுடன் கூடிய மீள் பகிர்வைப் பொறுத்தளவில் இந் நாட்டின் பொருளாதாரச் சாதனை, அடிக்கடி முன்னுதாரணமாகக் காட்டப்பட்டபோதும், இந்த மீள் பகிர்வுக் கொள்கையின் மூலமான நன்மைகளையும், வசதிகளையும் சமூகத்தின் மிக வறுமைப்பட்ட பிரிவினர் எவ்வளவு தூரம் அனுபவித்துள்ளனர் என்ற வினு விடை வேண்டி நிற்கின்றது. மானிய அடிப்படையில் மேற்கொள்ளப்படும் உணவுப் பொருள் விநியோக முறை, கல்வி வசதிகள் போன்றன தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இக் குறைவருமான மக்கட் பிரிவினர், இத் திட்டங்கள் மூலம் பெற வேண்டிய உண்மையான பலனைப் பெறத் தவறிவிட்டனர் என்பதைக் காட்டும். அத்தியாவசியத் தேவைகளை ஈடு செய்தற்கென இவர்கள் தமது பங்கீட்டுக் கூப்பன்களைக் கூட அடகு வைக்கின்றனர். இம் மக்களின் கொள்வனவுச் சக்தியில் காணப்படும் வீழ்ச்சியே இதற்குக் காரணமாகும். இங்ஙனம், இவர்கள் தங்கள் கூப்பன்களை அடகு வைப்பதன் மூலம், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மானிய அடிப்படையிலான பங்கீட்டு உணவுப் பொருள்களும் கிட்டாது போகின்றன. இதே போன்றுதான் கல்வி வசதிகள் தொடர்பான பங்கீடும் காணப்படுகிறது. ஆரம்ப மட்டத்தில், குறை வருமான மட்டத்தினர் ஓரளவு இவ்வசதிகளைப் பெற்றாலும், இரண்டாம், மூன்றாம் தர மட்டங்களில் (அதாவது உயர் வகுப்பு மட்டங்களில்) இந் நன்மைகளையும், வசதிகளையும் அவர்கள் ஈட்டிக் கொள்வதில்லை — இச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தமது நிலைமைகளை உயர்த்திக் கொள்ளும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டாது போகின்றது.

பொருளாதார ரீதியில் மிகவும் வசதி குறைந்த வறியோரான மக்கட் பிரிவினரை இச் சமூக சேவைகள் சென்றடைய வேண்டுமென்ற எடுகோள் முற்றுப் பெறாமலேயே இருக்கின்றது. இம் மக்களின் உதவி மட்டத்தை அதிகரித்தல் இந் நெருக்கடிக்கான ஒரு தீர்வாக இதற்குக் காரணமாகும். மானிய மிகக் குறைந்த வருமானமே இருக்கலாம். உதாரணமாக, உயர் கல்வி கற்கப்போகும் மாணவனொருவனுக்கு ஏற்படும் மேலதிகச் செலவுகளை இவ்வதிகரித்த உதவி மூலம் சமாளிக்கலாம். ஆனால், இத்தகைய ஒரு நடவடிக்கை தற்போதைய நிலையில் பொருளாதாரரீதியில் சாத்தியமானதாயில்லை.

அபிவிருத்தியின் வேகத்தைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது உண்மையே; ஆனால் இது வளர்ச்சி, மீள் பகிர்வு என்ற இரு பிரச்சினைகளை எழுப்புகிறது. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொறிமுறையானது, பொருளாதாரம் ஓரிடத்தில் அல்லது ஒரு குழுவினரிடத்தில் குவிந்து விடுவதை ஊக்குவித்து விடாதபடியும், தாழ் வருமான மட்ட மக்களின் வறுமை நிலைமையை மேலும் மோசமாக்கி விடாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும். சார்பு ரீதியான வறுமை, முழு வறுமை என்ற இரு நிலைமைகளும் முற்றாக ஒழிக்கப்படுவது இலக்காகக் கொள்ளப்பட வேண்டும். தலா வருமான மட்டத்தை உயர்த்துவதில் வெற்றி கண்ட அபிவிருத்தி உபாயங்கள், சார்பு ரீதியான வருமானப் பங்குகளின் வீழ்ச்சியுடன் சேர்ந்து வரும் பட்சத்தில், வறுமைப் பிரச்சினையில் பெரும் மாற்றத்தை அல்லது தாக்கத்தை ஏற்படுத்தாது விடக் கூடிய நிலைமைகளுமுள்ளன. எனினும், உயர்ந்த வளர்ச்சி வீதங்கள், தவிர்க்க முடியாதபடி பாரிய சமத்துவமின்மையை உருவாக்கும் என்ற கருத்துக்கு ஓரளவு அடிப்படையே உள்ளது. எனினும், உற்பத்தி வெளியீடுகளின் அதிகரிப்பு, குறை விருத்தி நாடுகளில் தொழில் மட்டங்களை உயர்த்த உதவுமென நிச்சயமாகக் கூற முடியாது; ஆனாலும், வேலையின்மை, கீழுழைப்புப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய நிலைமைகளை அது ஏற்படுத்தாதுவிடினும் கூட, மேலும் கூடிய வளர்ச்சி வீதமானது பொது அபிவிருத்திக்கு அத்தியாவசியம் என்பதை நாம் மறந்து விட முடியாது.

உலகத் தொழில் வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சர்வதேச தொழில் தாபனம் மேற்கொண்டு வரும் "அடிப்படைத் தேவைகளுக்கான உபாயங்கள்" என்ற திட்டம், வளர்முக நாடுகளின் மிக வறிய மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே உருவாக்கப்பட்டது. மக்களுக்குத் தேவையான அடிப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை நுகர் பொருட்களை விநியோகித்தல், பொது சேவைகளைப் பெற்றுக் கொள்ள வழி செய்தல், முதலீட்டுப் பொருள், உற்பத்திக்குத் தேவையான அடிப்படைச் சாதனங்களை வழங்கல் என்பனவற்றை இது உள்ளடக்குகிறது. தொழில் வாய்ப்புக்கும் இத் திட்டம் வழி செய்கிறது. சகல மக்கட் பிரிவினரும் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், தொழிலாளர் நியாயமான வேதனத்தைப் பெற்றுக் கொள்ளவும் இது வழி செய்யும்.

இத்தகைய உபாயங்களின் அவசியம் குறிப்பாக ஸ்ரீலங்கா போன்ற வளர்முக நாடுகளுக்கு மிக அவசியமாகவுள்ளது. ஏனெனில் இந்நாடுகளில் நாடளாவிய ரீதியிலான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் இல்லை; இத்தகைய சந்தர்ப்பத்தில், புதிய தொழில்களும் அவை உருவாக்கும் வேதனங்களுமே பெரும்பாலான மக்களின் ஜீவனாதாரத்துக்கான ஒரே வழியாகவுள்ளன. தவிர, இவ்வாறு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம், வருமானம், செல்வம் என்பனவற்றில் காணப்படும் சமமற்ற நிலைமையை ஓரளவு குறைக்கலாம்.

சமீபத்திய தனது உரையொன்றில் இத்தகு பிரச்சினைகளில் கவனஞ்செலுத்திய நம் நாட்டு ஜனாதிபதி, "அபிவிருத்தியின் அடிப்படை நோக்கங்கள் யாவை?" என்ற வினாவை எழுப்பினார். இதற்கான விடையும், எளிதானதாயிருந்தது "குறைந்தபட்ச உணவு, உடை, உறையுள், சுகாதாரம், கல்வி போன்ற சேவைகளை வழங்குதல்,

போதிய வேலை வாய்ப்புக்களை வழங்கி நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் குறைந்த, நடுத்தர வருமானப் பிரிவினரின் வருமானங்களை அதிகரிக்கச் செய்தல் போன்றவற்றுடன்,

புதிய அபிவிருத்தி உற்பத்திகளும், விநியோக அமைப்புக்களும், படிமுறைகளும் மக்களுக்குச் சொந்தமாகும் விதத்தில் சமூக அமைப்பு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். சிறுபான்மை மேட்டிமையாளருக்கல்லாது, உற்பத்தியின் நலன்கள் பொதுஜனங்களைச் சென்றடைய வேண்டும்."

சமூக சேவைகளின் பங்கு பற்றிய ஒரு கலந்துரையாடலில் நுகர்வு, மூலதனச் செலவுகள், சமூக நலனும் அபிவிருத்தியும், மறுபங்கீடு, வளர்ச்சி போன்றவை குறித்த ஒன்றுடனொன்று முரண்பட்டதும், சிக்கலானதுமான பிரச்சினைகள் எழுதல் தவிர்க்க முடியாததே. வளர்ச்சி குறித்த பல கருதுகோள்கள் உண்டு. அதன் சாத்தியப்பாடு குறித்த சந்தேகமும், அதன் சமத்துவம் குறித்த சந்தேகமும் பிரதானமானவை. சாத்தியமானதாயிராததும், சமனில்லாததுமான இவ்வளர்ச்சி, வருமான மறுபங்கீட்டினைக் கொள்கை நோக்கொன்றாக வரித்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தில் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

தனியார் சொத்துடைமையிலும், வருமானப் பங்கீட்டிலும் காணப்படும் மிகப் பாரதூரமான சமனின்மைகள் வளர்ச்சியடைந்த, வளர்முக மண்டலங்களைச் சார்ந்த பல நாடுகளின் ஒரு பொதுத் தன்மையாகும். எவ்வாறிருப்பினும், வளர்முக நாடுகளில் குறைவிருத்தி, வறுமை என்பன காரணமாக, உற்பத்திசார் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதே இத்தகு சமத்துவம் ஒன்றை எய்துதல் குறித்த பிரதான இலட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் இவ்வாறான ஓரிலட்சியத்தை அடைவதற்குத் தேவையான முன்னிபந்தனைகள் இந்நாடுகளிலில்லை. இத்தகையதொரு பின்னணியிலேயே முதலீடுகளுக்கும், பல்வேறுபட்ட செலவினங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தோன்றுகின்றன. முதலீடுகள் அபிவிருத்தியின் அத்தியாவசிய அம்சங்களிலொன்றாகும் என்பதை நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டினோம். ஆயினும், சுகாதாரம், கல்வி, போஷாக்கு போன்றவை குறித்த செலவினங்கள் ரூபா அளவில் மட்டிட முடியாத பெருநன்மைகள் பலவற்றைப் பெற்றுத்தருகின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது. மேலும், பொது மராமத்து வசதிகள், வீடமைப்பு, சுகாதார சேவைகள், போக்குவரத்து, தொடர்புச் சாதனங்கள் போன்ற வசதிகள் (முதலீட்டுத்துறையின் உச்சப் பயன்பாட்டை உறுதி செய்யும்பொருட்டு) உற்பத்தித் துறையின் ஆற்றல்களை விருத்தி பெறச் செய்கின்றன. எனவே, இத்தகு சேவைகளை வழங்குவதற்கான பாரிய திட்டங்கள் பெருமளவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, தற்போதைய நிலையில், வறிய மக்கள் பிரிவினருக்கு கூடிய வருமானங்களைப் பெற்றுக்கொடுக்கவும், பொருளாதாரத்தில் சம சந்தர்ப்பம் அளிக்கவும் பொருத்தமான வழிகளாக முதலீடு நுகர்வுத் திட்டமிடல் போன்றவற்றைப் பயன்படுத்துதல் அவசியமானதாயிருக்கும்.

---

(32ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தியுற்ற மனுக்குலமொன்றின் தோற்றுவாய் இத்தகைய கடின முயற்சி ஒன்றிலேயே தங்கியிருக்கின்றது.

இக்கருதுகோள் கற்பனாவாதத்தின் பாற்பட்டது என்றும், தற்போதைய சமூக,அரசியல் அமைப்பில் நிதான மாறுதல்களைப் புகுத்துவது இதைவிட யதார்த்தமானதாக இருக்குமென்றும் சிலர் கூறலாம். அவ்வாறு கூறத் துணிபவர்களுக்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஜோன் ஸ்டுவாட் மில் கூறிய பின் வரும் வாசகத்தை நினைவூட்ட விரும்புகிறோம்.

"பெரிய தீமைக்குச் சிறிய பரிகாரம் போதாது. அது எந்த விளைவினையும் ஏற்படுத்தப் போவதில்லை."

உத்தேச மாவட்ட அமைச்சர்கள் நியமனம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

—கட்டுரை அடுத்த இதழில்

**மீன் பிடி**

# மீன்பிடிக்கைத்தொழிலை இயந்திரமயமாக்குதல்

உள்ளூர் இயந்திரப் படகுகளுக்கான மீன்பிடி உபகரணங்களினதும், உதிரிப் பாகங்களினதும் பற்றுக்குறை தொடர்ந்து நாட்டின் மீன்பிடி உற்பத்தியை பாதித்து வருகிறது. 1978ன் முதற் காலாண்டுப் பகுதிக்கு திட்டமிட்டிருந்த மொத்த மீன் உற்பத்தி இலக்கு 42,750 தொன்களாகும்; ஆனால் இவ்வருடம் ஜனவரி முதல் மார்ச் வரைக்கான காலகட்டத்தில் உற்பத்தி 36,000 தொன்கள் மட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவ்விலக்கு 6,000 தொன்களால வீழ்ச்சியடைந்துள்ளது. மீன் பிடி அமைச்சு (அதன் இயந்திரமயப்படுத்தற்றிட்டங்களைத் தொடர்ந்து) இயந்திரமயப்படுத்தப்பட்ட படகுகளின் மூலம் அதிகரித்த உற்பத்தி மதிப்பீடுகளைச் செய்திருந்தது.

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் மீன்பிடி அமைச்சின் சாதனை, (திட்ட அமுல் அதிகார சபைக்கு அறிக்கையிட்டுள்ளபடி) பல பிராந்தியங்களில் இலக்கையடையாது வீழ்ச்சியுற்றிருப்பதைக் காட்டுகிறது. உதாரணமாக மீன்பிடித் திணைக்களம், உபயோகத்தில் உள்ள பாரம்பரியப் படகுகளின் இயந்திரமயப்படுத்தற்கு வெளிப்படகு எந்திரங்களை வழங்குதற்கும் 17 முதல் 18 அடி வரை நீளமான கண்ணாடி நாரிழைப் படகுகளை வழங்குதற்குமான திட்டமொன்றை வைத்துள்ளது. இவ்வியந்திரங்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் இலக்குப்படி 420 எந்திரங்களை வழங்குதற்குப் பதிலாக 274 எந்திரங்களை மட்டுமே வழங்கக் கூடியதாயிருந்துள்ளது. இன்னும் 3½ தொன் எந்திரப் படகுகளின் தேவைக்கென 6 உட்படகு எந்திரங்கள் வழங்குதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவற்றில் ஒன்று கூட இக்காலகட்டத்தில் வழங்கப்படவில்லை. இக்குறைபாட்டிற்கான காரணமும் இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதமே. இத்தகைய 3½ தொன் படகுகளில் இலங்கை மீன்பிடித் திட்டத்தின் கீழானவையும், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியீடு செய்யப்பட்டவையுமான படகுகளும் உள. இங்கு கூட இலக்குக்கு அமைவான 30 படகுகளுக்குப் பதிலாக 18 படகுகளே வழங்கப்பட்டுள்ளன.

பரந்த அளவில் அதிகரித்த மீன் உற்பத்திக்கு எந்திரமயப்படுத்தற்றிட்டத்திலும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி செய்யப்படும் இலங்கைத் திட்டத்திலுமே மீன்பிடி அதிகார பீடங்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளன. 28 அடி நீளமான நாரிழைப் படகுகளையும் 38 அடி நீளமான 30 கண்ணாடி நாரிழைப் படகுகளையும் அறிமுகப்படுத்த எண்ணியுள்ள இத்திட்டம் வருடம் ஒன்றுக்கு உள்ளூர் உற்பத்தியை 10,000 முதல் 15,000 தொன்களினால் உயர்த்துதற்கு உதவுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஒரு 38 அடிப் படகின் வருடாந்த மீன்பிடி அளவு 180,000 இருத்தல்களென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1977 இறுதிவரை 28 அடி நீளமான 200 நாரிழைப் படகுகளில் 96 படகுகளும், 38 அடி நீளமான 30 கண்ணாடி நாரிழைப் படகுகளில் 6 படகுகளுமே வழங்கப்பட்டுள்ளன. இவ்வாசிய அபிவிருத்தி வங்கித் திட்டத்தின் கீழ் சகல படகுகளையும் விநியோகிப்பதற்கு ஒரு ஊக்குவிப்பாக அரசு இத்தகைய படகுகளின் விலையில் ஒரு பகுதியை தனியார் மீன்பிடியாளருக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மானியப்படுத்துதற்கு தீர்மானித்துள்ளது. 38 அடி நீளப் படகுகளின் மீது ரூபா 200,000 மட்டில் நிர்ணயிக்கப்பட்ட 35 சதவீத மானியத்தை படகோடு சேர்ந்து எந்திரங்களைக் கொள்வனவு செய்வோர்க்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை 28 அடி நீளமான படகுகள் மீது அவற்றின் மொத்த விலையிலும் 50 சத வீதமான மானியம் வழங்கப்பட்டு வருகிறது (இப்படகுகள் படகு உரு, எந்திரம், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்).

இருநூறு 28 அடி நீளப் படகுகள் களுத்துறை, பேருவளை, பலப்பிட்டி, அம்பலாங்கொட, இரத்கம, காலி, வெலிகமை, மாத்தறை, தங்கெல்லை, அம்பாந்தோட்டைப் பிராந்தியங்களில் உள்ள 10 மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. மீன் சந்தைப்படுத்துதற்கான குளிரூட்டப்பட்ட வான் வண்டிகள், லொறிகள், ஜீப்புகள், குளிரூட்டும் பெட்டிகள் போன்றவையும் படகுகள் பராமரிப்பிற்கான வேலைத்தள உபகரணங்கள் போன்றவையும் வழங்கப்படுகின்றன. இவ்விருநூறு 28 அடிப் படகுகளினதும் இறுதி உடமை கூட்டுறவுச் சங்கங்களுக்கல்லாது அப்படகுகளில் தொழில் செய்வோர்க்கே சென்றடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது மீன்பிடியாளருக்கு ஊக்குவிப்பை வழங்குதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். எனவே இதன் பயனாக அப்படகுகளில் தொழில் செய்வோர் முழுக் கடனையும் 2 அல்லது 3 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் பெரும்பாலான மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் படகுகளின் மீது தாம் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறியிருந்தன. ஒவ்வொன்றும் ரூபா 800,000 விலைமதிப்புள்ள முப்பது 38 அடி நீளக் கண்ணாடி நாரிழைப் படகுகளில் 22 படகுகள் தற்போது தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்பட்டுள்ளன. இப்படகுகள் கடலில் 50 மைல் தூரம் வரை சென்று மீன்பிடித்து ஒரு தடவையில் 'ஐஸ்' நீங்கலாக 7,000 இருத்தல் மீனைக் கொண்டு வரும் ஆற்றல் பெற்றவை. 28 அடி நீளமான படகுகள் ஒரு தடவைக்கு சராசரி 800 இருத்தல் மீனைக் கொண்டு வரும் திறன் பெற்றிருப்பதுடன் மாதமொன்றுக்கு 20 தடவை கடலுக்குச் சென்று வரும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன.

முன்பு மேற்கொள்ளப்பட்ட பல மீன் பிடித் திட்டங்கள், தீவில் பூவியல் அனுகூலங்களையும், கடல்படு வளங்களையும் பயன்படுத்தும் நோக்கத்துடன் இலாபகரமான ஒரு ஆழ்கடல் மீன் பிடியைக் கட்டியெழுப்பும் திட்டத்தை அடியொற்றியிருந்தன. ஆனால் இரண்டு தசாப்த அனுபவம் இதனால் அதிக நன்மையேதும் ஏற்படவில்லையெனக் காட்டுகின்றது. அதனைச் சரி செய்வதற்கு என்ன தேவைப்படுகிறது என்பதையும் இவ்வனுபவம் எடுத்துக் காட்டியுள்ளது. தொடர்ச்சியான இயந்திர மயப்படுத்தற்றிட்டத்திற்கு மாறுதற்கு எமது உள்ளூர் மீனவர்களை இறக்குமதி செய்யப்பட்ட தொழில் நுட்பங்களில் பரிச்சயப்படுத்துவதும், பயிற்றுவிப்பதும் அவசியம் என்றும் தெளிவாகத் தெரிகிறது. முன்னர் பயிற்சித் திட்டங்கள் போதாதிருந்ததோடு இயந்திர மயப்படுத்தல் நடைமுறையும் பின்தங்கியிருந்தது. இயந்திரப் படகுகள் வழங்கப்பட்டு நான்காண்டுகளுக்குப் பின்னர் இரண்டு அடிப்படைப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. நீர்கொழும்பில் உள்ள மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலையில் வழங்கப்பட்ட இப்பயிற்சி நெறிகளில் ஒன்று மீன்பிடிப் பயிற்சிக்கும், மற்றது எந்திரத் திருத்தப் பயிற்சிக்குமென வழங்கப்பட்டன. ஆனால் மிகச் சமீபத்திலேயே ஆசிய அபிவிருத்தி வங்கித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 38 அடி நீளப் படகுகளில் தொழில் செய்யத்தக்களவு தகைமையை வழங்கக் கூடிய உயர்தர மீன்பிடிப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

எந்திரமயப்படுத்தப்பட்ட படகுகளே பராமரிப்பதற்கேற்ற தேவையான வசதிகளைச் செய்து கொடுக்காமை, மீன் பிடி நடைமுறைச் சீர்கேட்டினையும், உற்பத்திக் குறைவினையும், மீனவர்களின் கஷ்டங்களையும், அதன் காரணமாக கடனைத் திருப்பிச் செலுத்துதற்கான அவர்களது இயலாமையையும் தோற்றுவித்துள்ளது. நமது ஆழ்கடல் மீன்பிடி இலாபகரமானதாக அமையுமா என்ற விடயம் பற்றி பல வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றுள்ளன. கைத்தொழில் அடிப்படையிலான ஆழ்கடல் மீன் பிடிக்கு முதலில் தேவைப்படுவது கப்பல் கட்டும் தொழில் நுட்பமும், கப்பல் பராமரிப்பு வசதிகளுமாகும். ஆனால் இவை நம் நாட்டில் அறவே இல்லை. இவ்வசதிகள் ஏற்படுத்தப்படாத பட்சத்தில் ஆழ் கடல் மீன்பிடி இலாபகரமாய் அமையாது என்பது ஒரு சாராரது வாதமாகும். சமீப காலங்களில் விருத்தி செய்யப்பட்ட புதிய தொழில் நுட்பங்களைப் பெற எமது நாடு தனது சக்திகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை. ஆனால் தற்போதைக்கு மிகவும் அவசியமானவை இக்கைத்தொழிலின் குறுகிய, நீண்ட கால நன்மைகளுக்கு முன்னுரிமை வழங்குவதும், இக் கைத்தொழிலுக்கான அத்தியாவசிய தேவைகளை இடையீடின்றிக் கிடைக்கச் செய்தற்கு இருக்கும் தடைகளை நீக்குவதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டப் பொருட்கள்**

# இறப்பர்—விலையுயர்வுகள் தொடர்கின்றன

இறப்பர் விலைகளின் அதிகரிப்புப் போக்கு இவ்வருடத்திலும் தொடர்ந்து செல்கின்றது. இவ் வருடம் பெப்ரவரி மாத இறுதியில் கொழும்பு ஏல விற்பனைகளில் இறப்பர் விலைகள் 1977ன் அதே மாதத் தவையோடு ஒப்பிடுகையில் 35 சத வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டன. ரூபாவின் புனர் மதிப் பீட்டைத் தொடர்ந்து கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் இறப்பர் விலைகளில் பாரிய அதிகரிப்புக் காணப்பட்டுள்ளமையும கருத்துக்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டியதொன்குகும். தொழில்நுட்ப வழியில் வளையுறை பெற்ற இறப்பரை அமெரிக்கா மொத்தமாகக் கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளது என்ற அறிக்கைகளின் எதிர்பார்ப்போடு பெப்ரவரியில் இறப்பரின் விலைகள் உயர்ச்சிப் போக்கில் சென்று கொண்டிருந்தன. தென் கொரியாவின் இறப்பர் கையிருப் புத் தொகை பேணல் திட்டம் பற்றிய செய்தியும், மார்ச்சு மாதத்திற்கான சோவியத் ஒன்றியத்தின் தேவை அதிகரிப்பும் விலைகளுக்கு மேலதிக உந்து சக்தியொன்றை அளித்துள்ளன. மேலும், சில பிரதான ஏல விற்பனை நிலையங்களில் இறப்பர் விற்பனையில் சாதகமான தாக்கத்தினை நாணய மதிப்பு ஏற்ற விறக்கங்கள் ஏற்படுத்தியுள்ளன. கொழும்பில், 1977 பெப்ரவரியோடு ஒப்பிடுகையில் 1978 பெப்ரவரியின் விலையதிகரிப்புகள் அதிகபட்சம் உயர்ந்தவையாய் காணப்பட்டுள்ளன. இவ்வதிகரிப்பு சுருட்டை, அவல் துண்டு முதலாம் ரகத்தில் 65 சத வீதமாகவும், துண்டுக் கிரேப் வகையில் 64 சதவீதமாகவும் இருந்துள்ளது.

எனினும் இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் கொழும்பு ஏல விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு வழங்கப்பட்ட சகல வகை இறப்பர்களின தும் தொகையில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. உதாரணமாக 1978 பெப்ரவரியில் வழங்கப்பட்ட 2,243 மெற்றிக் தொன்கள் பால் கிரேப் இறப்பர் முன்னைய மாதத்தின் மொத்தத்தோடு ஒப்பிடுகையில் 285 மெற்றிக் தொன்கள் குறைவானதாகும்; அதே போன்றே 1977 பெப்ரவரி மொத்தத்திலிருந்து இது 1,418 மெற்றிக் தொன்கள் குறைவானதாகும். துண்டுக் கிரேப்புகளைப் பொறுத்தவரையிலும் இதே நிலைதான். 1978 பெப்ரவரியில் இத் துண்டுக் கிரேப்புகள் 479 மெற்றிக் தொன்களே விற்பனைக்கு வழங்கப்பட்டன. இது அதற்கு முந்திய மாதத்தோடு ஒப்பிடுகையில் 75 மெற்றிக் தொன்களாலும், 1977 பெப்ரவரியோடு ஒப்பிடுகையில் 51 மெற்றிக் தொன்களாலும் குறைவடைந்து காணப்பட்டது. 1978 பெப்ரவரியில் வழங்கப்பட் டுள் ள 175 மெற்றிக் தொன்கள் சோல் கிரேப் வகை, அதற்கு முந்திய மாதமான ஜனவரியில் வழங்கப்பட்ட தொகையிலும் பார்க்க 40 மெற்றிக் தொன்களாலும் 1977 பெப்ரவரியோடு ஒப்பிடுகையில் 43 மெற்றிக் தொன்களாலும் குறைந்துள்ளது.

# யாவருக்கும் ஓர் உலகு—வரைபடங்களுக்கான விளக்கம்

மனுக்குலத்தின் மூன்றில் இரண்டு பங்கினர் துயரிலும், சஞ்சலத்திலும், வறுமையிலும் வாடி வாழ்க்கை நடத்தும் இன்றைய உலகில், சலுகை பெற்ற சிறுபிரிவினர் மிகை நுகர்வாலும், வளங்களை விரயம் செய்வதனாலும் அழிவை நோக்கிய பாதையில் அனைவரையும் இட்டுச் செல்கின்றனர். இத்தகைய இயல்புகள் குறிப்பிட்ட ஒரு மண்டலத்திலன்றி, உலகளாவிய ரீதியில் வியாபித்துக் காணப்படுகின்றன. குறைவிருத்தி நாடுகளில் வாழும் பெரும்பான்மை மக்கள் தம் அடிப்படைப் பௌதீக, கலாசாரத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய இயலாத நிலையில் வாழ்கின்றனர்; அதே வேளையில் இந்நாடுகளின் சலுகை பெற்ற மேட்டிமையாளர்களின் பொருள் நுகர்வு கைத்தொழில் மய நாடுகளின் உயர் மட்டங்களை ஒத்ததாயிருக்கின்றது.

செல்வம், தேசங்களிடையே சமனற்ற முறையில் பங்கிடு செய்யப்பட்டிருப்பதனை 2-5 இலக்கங்களைக் கொண்ட படங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

சராசரி கலோரி நுகர்வு, தலா நபர் ஒருநாள் புரோட்டீன் அளவுகளில் உலக உணவு வினியோகத்தை படம் 2 காட்டுகின்றது.

இணைப்புக் குறிகாட்டி மூலம் படம் 3 வீட்டு வசதி நிலைமைகளைக் காட்டுகின்றது. தம் வீட்டிலிருந்து 100 மீட்டர் தொலைவில் கூட நீர் வசதியைப் பெற்றிராத சனத்தொகை விகிதம், மின்சார வசதியற்ற விகிதம், மலகூடங்களில்லாத விகிதம், ஒரு வருடத்தில் 100 குடியிருப்பாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளின் அளவு, பிறப்பில் வாழ்வெல்லை போன்ற காரணிகளை உள்ளடக்கியதாக இக் குறி காட்டி இருக்கின்றது. (தரவுகள் இல்லாத விடங்களில்) ஏனையவற்றைக் கணிப்பீடு செய்ய இக் கடைசிக் காரணி பயன் படுத்தப்பட்டது. ஒரு காரணியின் உச்சமட்டப் பெறுமானம் 10 ஆகும்; எனவே இணைக் குறிகாட்டியின் மொத்த உச்ச மட்டப் பெறுமதி 60 ஆகும்.

படம் 4, 15 வயதுக்கு மேற்பட்ட கல்வி வாசனையற்றோரின் விகிதார அடிப்படையில் கல்வி அளவுகளைக் காட்டுகின்றது.

பிறப்பில் வாழ்வெல்லையை படம் 5 காட்டுகின்றது. சனத்தொகையினரின் சுகாதார நிலைமைகள் பெரும்பாலும் இக் குறிகாட்டியினுலே மதிப்பிடப்படுகின்றன.

எல்லாப் படங்களிலும், கூடிய தேவைகளைக் கொண்டிருக்கும் பிரதேசங்கள் நிறந் தீட்டிக் காட்டப்பட்டுள்ளன. சில பிரதேசங்களில் சகல குறிகாட்டிகளும் மிகக் குறைந்த பெறுமான அளவுகளைப் பெற்றிருப்பதைப் படங்கள் காட்டும்; ஏறத்தாழ உலக சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் இப் பிரதேசங்களில் வாழ்கின்றனர். வறுமையும், குறைவிருத்தியும் இந்நாடுகளின் பிரதான இயல்புகளாக இருந்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம்

# 1977—வர்த்தக மிகை குறித்த இரண்டாவது வெற்றிகர வருடம்

1977ம் ஆண்டிற்கான ஸ்ரீலங்காவின் பண்ட வர்த்தகம் தொடர்ந்து இரண்டாவது தடவையும் சாதகமான நிலுவையைக் காட்டுகின்றது. சுங்கப் பதிவுகளின் பிரகாரம், 1976-ம் ஆண்டு வர்த்தக நிலுவையில் ஏற்பட்ட மிகை கடந்த பன்னிரண்டு வருட காலத்தில் நிகழ்ந்த முதல் அனுகூலமாகும். 1966 இலிருந்து 1975-ம் ஆண்டுவரை நாடு தொடர்ந்தும் வர்த்தகக் குறையை அனுபவித்து வந்துள்ளது. 1975-ல் இக் குறை என்றுமில்லாதவாறு 131.8 கோடி ரூபாவாக உயர்ந்தது. அதே வேளையில் 1977-ல் பெறப்பட்ட வர்த்தக மிகை (63.1 கோடி) இதுவரை கால மிகக்கூடிய அளவாகும். 1976ல் 481.5 கோடி ரூபாவாக விருந்த ஏற்றுமதி வருமானம், 1977ல் 663.8 கோடி ரூபாவாக (பெரும்பாலான அட்டவணைகளில் மீள ஏற்றுமதிப் பெறுமானம் பதியப்படவில்லை) அதிகரித்ததுடன், 1976 464.5 கோடி ரூபாவாக விருந்த இறக்குமதிக் கொடுப்பனவுகள் 1977ல் 600 கோடி ரூபாவாக அதிகரித்தது. 1977ல் ஏற்றுமதி வருமான அதிகரிப்புக்கு பிரதானமாக தேயிலை ஏற்றுமதி காரணமாயிருந்தது. பெட்ரோலியம், உணவுப் பொருட்கள் போன்றவற்றின் கொள்வனவு காரணமாக நாடு இதுவரை கால மிகக் கூடிய தொகை இறக்குமதிச் செலவைச் செய்தது.

கடந்த நான்கு வருட கால வெளிநாட்டு வர்த்தக நிலைமையைக் கீழ் வரும் அட்டவணை காட்டுகிறது. 1965ம் ஆண்டிலிருந்தே நாட்டின் வர்த்தக மாற்று வீதம் சீர்குலைந்து வந்துள்ளது. 1971ம் ஆண்டிலிருந்து வர்த்தக நிலுவை இடைவெளி தொடர்ந்தும் அதிகரித்து வந்தது. 1971ல் 3.9 கோடி ரூபாவாக இருந்த இவ்விடைவெளி 1975ல் உச்சமட்டமான 113.8 கோடி ரூபாவை யடைந்தது. 1976ன் வர்த்தக மிகை ரூபா 17 கோடியாக இருந்ததுடன் நிலைமை சாதகமாக மாறியது. வர்த்தக மாற்று விகிதத்தில் 35 சத வீத அதிகரிப்பு ஏற்பட்டது. ஏற்றுமதி விலை 20 சத வீதம் அதிகரித்து இறக்குமதி விலைகள் 12 சத வீதம் வீழ்ச்சியடைந்தமை இதற்குக் காரணமாகும் (அட்டவணை 2ஐப் பார்க்க)

1977ல் மிகை 63.1 கோடி ரூபாவாக அதிகரித்தது. மொத்த ஏற்றுமதி விலைகள் 60 சத வீதத்தினாலும் இறக்குமதி விலைகள் 23 சத வீதத்தினாலும் அதிகரித்தமையால் வர்த்தக மாற்று விகிதம் மேலும் 31 சத வீதத்தினால் கூடிச் சென்றது. என்றுமில்லாதவாறு தேயிலை ஏற்றுமதிச் சுட்டெண் 80 சத வீதத்தினால் அதிகரித்தமை இவ் வர்த்தக மாற்று விகிதாசார விருத்திக்குக் காரணமாக அமைந்தது

### இறக்குமதிகள்

ஸ்ரீ லங்காவின் இறக்குமதிக் கொடுப்பனவில் எப்பொழுதும்உணவு இறக்குமதி பெரும் பங்கினைப் பெற்றுள்ளது. சர்வதேச சந்தையில் அரிசி, தானியங்கள், மா, சீனி ஆகியவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக 1976ல் இறக்குமதிகளிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. 1977ல் உணவு இறக்குமதியின் மொத்தப் பெறுமானம் 69.3 கோடி ரூபா அதிகரிப்பினைக் காட்டியது. இதன் விளைவாக நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி பெறுமானம் பெருமளவில் அதிகரித்து மொத்த இறக்குமதியில் 42 சத வீதமாக விருந்தது. அரிசி, தானியங்கள், மா, சீனி என்பன 1977ம் வருட மொத்த இறக்குமதியில் 36.5 சத வீதத்தினைக் கொண்டிருப்பதானது (அட்டவணை 5) உணவு இறக்குமதியில் நாட்டின் தங்கியிருத்தலைத் தெளிவாகக் காட்டுகின்றது. உணவு, குடிவகை போன்றவற்றின் இறக்குமதி இரட்டிப்பானமையால் நுகர்வு இறக்குமதிப் பெறுமானம் 45 சத வீதம் அதிகரித்ததாக வர்த்தக சுட்டெண்கள் காட்டுகின்றன. விலைகள் 16 சத வீத அதிகரிப்பினை பதிவு செய்தன. பெற்றோலிய இறக்குமதிகளில் அதிகரிப்பு காணப்பட்டபோதிலும் நடுத்தரப் பொருட்களின் பங்கு 49 சத வீதத்திலிருந்து 45 சத வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. வர்த்தக சுட்டெண்களின் பிரகாரம் மொத்த இறக்குமதிப் பெறுமானம் 6 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன், விலைகள் 40 சத வீதத்தினால் அதிகரித்தன. 1977ல் முதலீட்டுப் பொருட்களின் பங்கு 14 சத வீதத்திலிருந்து 12 சத வீதமாக வீழ்ச்சியடைந்தன. இறக்குமதித் தொகைகள் தொடர்பான பெறுமானச் சுட்டெண் 16 சத வீத அதிகரிப்பினை காட்டிய அதேவேளை விலைச் சுட்

அட்டவணை—1

வெளிநாட்டு வர்த்தகம் 1964—1977

(பத்து லட்சம் ரூபாக்களில்)

| வருடம் | ஏற்றுமதிகள்* | இறக்குமதிகள் | வர்த்தக நிலுவை |
|---|---|---|---|
| 1964 | 1876 | 1975 | — 99 |
| 1965 | 1948 | 1474 | 474 |
| 1966 | 1700 | 2028 | — 328 |
| 1967 | 1960 | 1738 | — 48 |
| 1968 | 2035 | 2173 | — 138 |
| 1969 | 1916 | 2543 | — 627 |
| 1970 | 2035 | 2313 | — 280 |
| 1971 | 1947 | 1986 | — 39 |
| 1972 | 2009 | 2064 | — 55 |
| 1973 | 2617 | 2715 | — 98 |
| 1974 | 3472 | 4554 | —1082 |
| 1975 | 3933 | 5318 | —1318 |
| 1976 | 4815 | 4645 | 170 |
| 1977 | 6638 | 6007 | 631 |

*மீள் ஏற்றுமதிகள் உட்பட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2:

## வெளிநாட்டு வர்த்தகர் சுட்டெண் 1968—77

| சுட்டெண் (1967 — 100) | | | | | |
|---|---|---|---|---|---|
| பெறுமானம் | | | விலைகள் | | |
| வருடம் | எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | வர்த்தக மாற்று விதம் |
| 1968 | 103 | 101 | 117 | 126 | 93 |
| 1969 | 98 | 108 | 117 | 134 | 88 |
| 1970 | 102 | 102 | 118 | 140 | 84 |
| 1971 | 99 | 90 | 117 | 150 | 78 |
| 1972 | 97 | 88 | 118 | 157 | 75 |
| 1973 | 98 | 79 | 137 | 209 | 65 |
| 1974 | 85 | 56 | 217 | 370 | 58 |
| 1975 | 102 | 69 | 199 | 433 | 46 |
| 1976 | 97 | 75 | 239 | 383 | 62 |
| 1977 | 89 | 97 | 382 | 471 | 81 |

மூலங்கள்; சுங்கப்பதிவுகள், ஸ்ரீலங்கா

டெண் 1 சத வீத எல்லை அதிகரிப்பினைக் காட்டியது. பொதுவாக மூன்று வகை இறக்குமதிப் பொருட்களினதும் பெறுமானம் அதிகரிப்பினைக் காட்டியது. இதில் நுகர்வுப் பொருட்கள் பெரும் பங்கினை வகித்தன.

உணவு இறக்குமதிகள் தவிர பெற்றோலியம், ஸ்ரீலங்காவின் பிரதான இறக்குமதிப் பொருளாக இருந்தது. கடந்த இரு வருட காலங்களில் நாட்டின் இறக்குமதியில் நான்கிலொரு பங்கினை இது வகித்தது. கடந்த வருட இறக்குமதிகளில் பிரதான பங்கு பெறும் பிறிதொரு பொருள் ஜவுளியும், ஜவுளிப் பொருட்களுமாகும். குறிப்பாக பருத்தி நூல் இறக்குமதி சென்ற வருடம் 200 சத வீத அதிகரிப்பினைக் காட்டியது. பருத்தி நூல் இறக்குமதி மாத்திரம் 1975-ல் 2.5 கோடி ரூபாவிலிருந்து 1976-ல் 14.5 கோடி ரூபாவாகவும் 1977-ல் 32.6 கோடி ரூபாவாகவும் அதிகரித்துச் சென்றது. மோட்டார் வாகனங்களினதும் உதிரிப்பாகங்களினதும் இறக்குமதி 8.3 கோடி ரூபாவால் அதிகரித்தது. பசளை இறக்குமதியில் பெரு வீழ்ச்சி காணப்பட்டது. 1977-ல் இதன் இறக்குமதி 1.8 கோடி ரூபாவாக இருந்தது. எவ்வாறிருப்பினும் நவம்பர் வரவு செலவுத் திட்டத்தின் புதிய வர்த்தக கொடுப்பனவு கொள்கைகளான இறக்குமதித்தளர்வு, ரூபாவை மிதக்கவிடல் போன்ற நடவடிக்கைகள் வருட இறுதியில் அமுலுக்கு வந்தமையால் இவை நாட்டின் (1977-ம் வருட) இறக்குமதி

அட்டவணை 3:

## 1975, 1976, 1977ம் ஆண்டுகளில் பிரதான இறக்குமதிப் பொருட்கள்

| பொருள் | பெறுமதி ரூ. பத்து லட்சங்களில் | | | இறக்குமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1975 | 1976 | 1977 | 1975 | 1976 | 1977 |
| பெற்றோலியம் | 894 | 1,196 | 1,490 | 17.0 | 25.7 | 24.8 |
| அரிசியும், தானியங்களும் | 1,98 | 743 | 1,061 | 22.8 | 16.0 | 17.7 |
| மா | 1,006 | 686 | 930 | 19.2 | 14.8 | 15.5 |
| சீனி | 250 | 68 | 199 | 4.7 | 1.5 | 3.3 |
| புடைவையும், நூலும் | 195 | 189 | 459 | 3.7 | 4.0 | 7.6 |
| உரம் | 208 | 76 | 18 | 4.0 | 1.6 | 0.3 |
| மருந்து வகைகள் | 69 | 59 | 87 | 1.3 | 1.3 | 1.4 |
| கொதிகலன், இயந்திர சாதனம், உதிரிப் பொருட்கள் | 229 | 292 | 313 | 4.3 | 6.3 | 5.2 |
| இரும்பும், உருக்கும் | 169 | 183 | 188 | 3.2 | 3.9 | 3.1 |
| மோட்டார் வாகனங்களும் பாகங்களும் | 94 | 150 | 233 | 1.8 | 3.2 | 3.9 |
| உப மொத்தம் | 4,312 | 3,642 | 4,978 | 82.1 | 78.4 | 82.9 |
| ஏனையவை | 939 | 1,003 | 1,029 | 17.9 | 21.6 | 17.1 |
| மொத்தம் | 5,251 | 4,645 | 6,007 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்; ஸ்ரீலங்கா அரசின் சுங்கப்பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 4:

வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவுகள்

| வகை | பெறுமானம் ரூ. பத்து லட்சங்களில் 1975 | 1976 | 1977 | இறக்குமதி வீதம் 1975 | 1976 | 1977 |
|---|---|---|---|---|---|---|
| நுகர்வுப் பொருட்கள் | 2,651 | 1,689 | 2,534 | 51 | 36 | 42 |
| நடுத்தரப் பொருட்கள் | 1,888 | 2,259 | 2,648 | 36 | 49 | 44 |
| முதலீட்டுப் பொருட்கள் | 653 | 641 | 746 | 12 | 14 | 12 |
| வகுக்கப்படாதவை | 59 | 54 | 79 | 1 | 1 | 1 |
| மொத்தம் | 5,251 | 4,645 | 6,007 | 100 | 100 | 100 |

மூலம்: ஸ்ரீலங்கா மத்திய வங்கி.

கொடுப்பனவில் ஏற்படுத்திய தாக்கவிளைவுகளை மதிப்பிட முடியாதுள்ளது.

## ஏற்றுமதிகள்

1977-ல் ஸ்ரீலங்காவின் மொத்த ஏற்றுமதி வருமானம் 663.8 கோடி ரூபாவாகும். இது எந்த ஒரு வருடத்திலும் நிலை நாட்டப்படாத ஒரு சாதனையாகும். ஏற்றுமதி வருமானம் 1976-ம் ஆண்டினை விடவும் 38 சத வீதத்தினால் (அல்லது 182.5 கோடி ரூபாவால்) அதிகரித்தது. முன்னெப்போதுமிராத இத்தகைய வருமான அதிகரிப்புக்கு தேயிலை பிரதான காரணியாக இருந்தது. ஏற்றுமதித் தொகை 1.4 கோடி கிலோம் கிராம்களாக வீழ்ச்சியடைந்த போதிலும், சராசரி ஏற்றுமதி விலை பெருமளவில் அதிகரித்தது. 1976-ல் ரூ. 10.50 ஆக இருந்த கிலோ விலை 1977-ல் ரூ. 18.86 ஆக உயர்ந்தது. இவ்விலை யுயர்ச்சிக்கு 1977-ல் சர்வதேச ரீதியில் காணப்பட்ட தேயிலை விலைகளின் ஸ்திரத்தன்மையும், வருடத்தின் பிற் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரூபா பெறுமதியிறக்கமும் காரணமாயமைந்தன. தேயிலை, றப்பர், தென்னை ஆகிய மூன்று பண்டங்களும் கடந்த வருட மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 72 சத வீதத்தை வகித்தன. இதில் தேயிலையின் பங்கு 29 சத வீதமாகும்; இறப்பர் ஏற்றுமதி அளவில் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் விலையதிகரிப்பு இதனை ஈடு செய்தமையால் ஏற்றுமதி வருமானம் 4.1 கோடி ரூபாவாக உயர்ந்தது. இறப்பர் கடந்த ஆண்டின் ஏற்றுமதியில் 5 சத வீதத்தைப் பெற்றது. ஏற்றுமதித் தொகை வீழ்ச்சியடைந்தமையால் தெங்குப் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் தொடர்ந்தும் குறைந்து வந்தது, இவ் வருமான வீழ்ச்சி 4.7 கோடி ரூபா அல்லது 12 சத வீதமாகும். தேங்காய் எண்ணெய் மூலமான ஏற்றுமதி வருமானம் 14.9 கோடி ரூபாவால் வீழ்ச்சியடைந்தது. அதாவது 1976ல் 20.1 கோடி ரூபாவிலிருந்து 1977ல் 5.2 கோடி ரூபாவாகக் குறைந்தது. வாசனைத் திரவியங்கள், சிறு விவசாய ஏற்றுமதிப் பொருட்கள் போன்றவற்றின் ஏற்றுமதி வருமானம் 1976ம் ஆண்டை விடவும் 10.6 கோடி ரூபாவால் (46%) அதிகரித்தது. ஜவுளிகள், தயாரிக்கப்பட்ட ஆடை வகைகள் போன்ற பாரம்பரியம் அற்ற பொருட்களின் ஏற்றுமதிகளினூலும் கூடிய வருமானம் (11.2 கோடி ரூபா) பதிவு செய்யப்பட்டது. இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் என்பவற்றின் மூலம் 3.8 கோடி ரூபாவும் மீன், இறால் என்பவற்றிலிருந்து 2 கோடி ரூபாவும் பெறப்பட்டன.

## வழங்கல் மூலங்கள்

கடந்த இரண்டு வருடங்களாக எமது இறக்குமதி அமைப்பில் காணப்படும் பிரதான அம்சம் குறித்த சில வழங்கல் மூலங்களில் மட்டும் கூடிய கவனம் செலுத்தி வருதலாகும். இவ்விரண்டு வருடங்களிலும் நாட்டின் இறக்குமதிப் பெறுமானத்தில் ஐந்து நாடுகள் ஏறாவாசிக்கும் அதிகமான பங்கைப் பெற்றிருக்கின்றன. ஸ்ரீலங்காவின் பெட்ரோலிய இறக்குமதி தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது; சவூதி அரேபியா ஈரான் ஆகிய இரு மத்திய கிழக்கு நாடுகளிடமிருந்தும் பெறப்பட்ட பெட்ரோலியம் சென்ற இரு வருடங்களிலும் ஒவ்வொரு வருடமும் நாட்டின் மொத்த இறக்குமதிப் பெறுமானத்தில் 22 சத வீதத்தினைக் கொண்டிருந்தது. மா, இயந்திரங்கள், வாகனங்கள் போன்றவற்றை வழங்கும் ஐக்கிய அமெரிக்காவும் ஜப்பானும் முறையே மூன்றும், நான்காம் இடத்தினைப் பெறுகின்றன. பல்வேறு கடன் திட்டங்களின் மூலம் பாரிய அளவில் மூலதன நுகர்வுப் பொருட்களை அளித்ததன் மூலம் ஐக்கிய இராச்சியம் பெற்றிருந்த ஐந்தாவது இடத்தினை இந்தியா கவீகரித்துக் கொண்டது. 1970க்களில் ஸ்ரீலங்காவின் பிரதான வழங்கல் நாடொன்றாக இருந்த சீனா 1975ல் உச்சஸ்தானத்தையடைந்து 1977ல் 9வது இடத்தில் வந்து நின்றது. அவுஸ்திரேலியாவும், தாய்லாந்தும் சீனாவை முந்தி விட்டன. 1977ல் ஸ்ரீலங்காவுக்கு இறக்குமதிகளை நிரம்பல் செய்த 90 நாடுகளுள் 25 நாடுகள் மொத்த இறக்குமதி பெறுமானத்தில் 95 சத வீதத்தினைப் பெற்றன. ஏனைய 65 நாடுகளும் 5 சத வீதத்தினை மட்டுமே வழங்கின. அண்மைக் காலங்களில் ஸ்ரீலங்காவின் வர்த்தகத்தில் ஆர்வத்துடன் பங்கெடுத்து வரும் பாகிஸ்தான் முதல் பத்து பிரதான வழங்கல் நாடுகளிலொன்றாக இருந்தது. மேலும் நம் நாட்டின் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யும் பிரதான நாடொன்றாகவும் அது இருந்து வருகின்றது.

## வெளிநாட்டுச் சந்தைகள்

1977ல் ஸ்ரீலங்காவின் உற்பத்திகளை இறக்குமதி செய்யும் பிரதான நாடாக பாகிஸ்தான் இருந்தது. நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 53.4 கோடி ரூபா அல்லது 8 சத வீதப் பங்கினை அது கொண்டிருந்தது. ஐக்கிய இராச்சியமும், ஐக்கிய அமெரிக்காவும் எமது ஏற்றுமதிச் சந்தைகளில் இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றன. இவ்விரு நாடுகளும் - நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் முறையே 8 சத வீதத்தினையும் 7.5 சத வீதத்தினையும் அளித்தன. கடந்த இரு வரு



Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5:

## 1975, 1976, 1977ம் ஆண்டுகளின் பிரதான ஏற்றுமதிப் பொருட்கள்

| | பெறுமதி—ரூ. பத்து லட்சங்களில் | | | ஏற்றுமதி சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1975 | 1976 | 1977 | 1975 | 1976 | 1977 |
| தேயிலை | 1,932 | 2,100 | 3,503 | 49.2 | 43.7 | 53.0 |
| இறப்பர் | 654 | 890 | 931 | 16.7 | 18.5 | 14.0 |
| தென்னை | 397 | 382 | 335 | 10.1 | 8.0 | 5.0 |
| இரத்தினக் கல்லும், | 182 | 264 | 302 | 4.6 | 5.5 | 4.6 |
| ஆபரணங்களும் | 111 | 173 | 285 | 2.8 | 3.6 | 4.3 |
| புடைவைகளும் | 59 | 140 | 149 | 1.5 | 2.9 | 2.2 |
| புடைவைப் பொருட்களும் | 22 | 75 | 95 | 0.4 | 1.5 | 1.4 |
| எரிபொருள்கள் மீனும் இருல்களும் உப மொத்தம் | 3,357 | 4,024 | 5,600 | 85.6 | 83.8 | 84.7 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 565 | 777 | 1,015 | 14.4 | 16.2 | 15.3 |
| மொத்த உள்ளூர் ஏற்றுமதிகள் | 3,922 | 4,301 | 6,615 | 100.00 | 100.00 | 100.00 |
| மீள் ஏற்றுமதிகள் | 11 | 14 | 23 | | | |
| மொத்த ஏற்றுமதிகள் | 3,922 | 4,301 | 6,638 | | | |

மூலம்: ஸ்ரீலங்கா அரசின் சுங்கப் பதிவுகள்

டங்களாக ஸ்ரீலங்காவின் வர்த்தகத்தில் தென்படுகின்ற பிரதான போக்கு ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், ஜப்பான் போன்ற நாடுகள் எமது வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்து வருவதாகும். 1976லும் 1977லும் ஸ்ரீலங்காவுடனான இந் நாடுகளின் மொத்த வர்த்தகம் பின்வருமாறு இருந்தது. ஐக்கிய அமெரிக்கா 175.1 கோடி ரூ. ஐக்கிய ராச்சியம் 159.5 கோடி ரூபா; ஜப்பான் 130.8 கோடி ரூபா. சீனாவின் வர்த்தகம் 1975ல் 112.2 கோடி ரூபாவாக இருந்தது. ஆயினும் அதனைத் தொடர்ந்து வந்த இரு வருடங்களிலும் இத்தொகை வீழ்ச்சி பெற்று கடந்த இரு ஆண்டுகளுக்கான மொத்தம் 130.8 கோடி ரூபா வாகியது.

ஐக்கிய அரபுக் குடியரசு, யூகோஸ்லாவியா, ரூமேனியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லவாக்கியா, சோவியத் ருஷ்யா ஆகிய நாடுகளுடன் ஸ்ரீலங்கா கொண்டிருந்த இருபக்க கொடுப்பனவு ஒப்பந்தங்களுக்குப் பதிலாக மாற்றத்தக்க ரூபா நாணய முறை இடம் பெற்றதன் பின்னர் இந்நாடுகளின் கொள்வனவுகளும் வர்த்தகமும் முன்னைய காலங்களை விடவும் அதிகரித்துச் சென்றன. உதாரணமாக ஐக்கிய அரபுக் குடியரசு இலங்கை உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையில் 7வது இடத்தினைப் பெற்றதுடன், அதன் கொள்வனவுப் பெறுமானம் 30.4 கோடி ரூபாவாக இருந்தது. மேலும் 1976ல் 20 லட்சம் ரூபா வாயிருந்த ரூமேனியாவின் கொள்வனவு 1977ல் 3.4 கோடி ரூபாவாக அதிகரித்தது. போலாந்தின் கொள்வனவுகள் 4.2 கோடி ரூபாவிலிருந்து 6.9 கோடி ரூபாவாக அதிகரித்தது.

1977ல் ஸ்ரீலங்காவின் ஏற்றுமதிப் பொருட்களைப் பெற்ற 124 நாடுகளுள் 25 நாடுகள் 81 சத வீதத்தினைக் கொள்வனவு செய்தன. இதில் மிகப் பிரதானமாக 4 கொள்வனவாளர்கள் மொத்த ஏற்றுமதிப் பெறுமானத்தில் 30 சத வீதத்தினைக் கொள்வனவு செய்தனர்.

இறக்குமதிப் பெறுமானங்கள் முன்னெப்போதுமிராத அளவுகளை எட்டின. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின் 1977ம் ஆண்டின் இறுதி ஆறு வாரங்களில் 83.5 கோடி ரூபாவை இறக்குமதியாளர்கள் செலவிட்டுள்ளதாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஈகத்தொழில் இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் இறக்குமதிக்கு ரூபா 21 கோடியும், பருத்தி நூல் இறக்குமதிக்கு 15.9 கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

(24ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தி ஹெக்டேயார் ஒன்றுக்கு 4 தொன் வீதமிருப்பின் இப்பிரச்சினை தலை தூக்கும்; ஆனால் ஹெக்டேர் ஒன்றுக்கு 6 தொன் வீதம் கணக்கிடப்பட்டால் எப்பிரச்சினையுமில்லை (இப்புள்ளிவிபரங்கள் உயர்ந்தனவாகத் தோன்றுமானால், இவை ஜப்பானிலும் வேற்றிடங்களிலும் சாதிக்கப்பட்டதில் ஏறக்குறைய பாதி தானாகும் என இக் குழுவினர் சுட்டிக்காட்டுகின்றனர்

வறுமையையும், குறைவிருத்தியையும் அகற்றுவதற்கு எத்தகைய தூல தடைகளுமில்லாத போதிலும், சமீப கால அமைப்புக்களில் கடும் அரசியல் சமூகக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அமில்கார் ஹெரேரா இதனை டோரன்டோவில் தெளிவாகச் சொன்னார். "சமூக அரசியல் நிலைமைகளில் மிக ஆழமான மாற்றங்கள் செய்தால் மட்டுமே எந்த நம்பிக்கைக்கும் இடமுள்ளது"

இந்நூல் தாங்கிவரும் வெளிப்படையான செய்தி இதுவாகும்.

இவ்வாய்வறிக்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளை இங்கு சுருக்கித் தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழிவு அல்லது நவ சமுதாயம்

## —ஓர் இலத்தீன் அமெரிக்க உலக மாதிரி

— அமில்கார் ஓ ஹேரேரா

இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ள மாதிரி, தற்போதைய போக்குகள் நீடித்தால் என்ன நேரிடுமென்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு முயற்சியல்ல; ஆனால், ஓர் இறுதிக் குறிக்கோளை — குறை விருத்தியிலிருந்தும் சஞ்சலத்திலிருந்தும் விடுவிக்கப்பட்ட ஓர் உலகம் என்னும் இலட்சியத்தை அடைவதற்கான ஒரு வழியை எடுத்துக் காட்டவே முயல்கின்றது. அது உலகத்தைப் பற்றிய ஓர் எண்ணக் கருத்தைச் சித்திரிக்கின்றது. இவ்வெண்ணக் கருத்தை அதன் கர்த்தாக்கள் பகிர்ந்து கொள்வதுடன், அதில் அவர்கள் ஆழ்ந்த அக்கறையும் கொண்டுள்ளனர். மறுபுறத்தில் அது கருமத்தைக் கருதியதாக உள்ளது. ஏனென்றால், உலகத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பற்றி அலசி ஆராய்ந்து தெளிந்த, ஆனால், யதார்த்த ரீதியாக அறிந்துணர்ந்த ஒரு கருத்துடன் அது தொடங்குவதுடன், மாறுதல்களை வரவேற்பதிலும், சிருஷ்டி ஆற்றல்களை வெளிப்படுத்துவதிலும் கடந்த காலங்களில் மனித சமுதாயம் பெற்றிருந்த ஆற்றல்களின் அடிப்படையிலான பரிகாரங்களையும் அது தேடுகின்றது.

இவ்வளவு பிரமாண்டமான ஒரு குறிக்கோளை ஓர் ஒப்பாசாரமான கட்டுக் கோப்பில் முற்றாக அடக்கிவிட முடியாது. எனவே 'மாதிரி' என்னும் வார்த்தை இரு வழிகளில் உபயோகிக்கப்படும். முதலாவதாக, ஓர் 'இலட்சிய' சமுதாயம் என்னும் கருத்தைக் குறிக்கவும், இரண்டாவதாக, கணித முறைப்படி அமைந்த ஒரு மாதிரியைக் குறிக்கவும் இது உபயோகிக்கப்படும்.

இலட்சிய சமுதாயம் என்பது, மனிதகுலத்தைத் தற்போது எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் பௌதிக எல்லையறைகளைக் கொண்டவையென அபிவிருத்தியுற்ற நாடுகளில் நிலவும் பொதுவான கருத்துக்கெதிரான ஒரு குறிக்கோளாகும். இக் கருத்தின்படி, பொருள் நுகர்விலும் ஜனத்தொகையிலும் ஏற்படும் தொடர்ந்த அதிகரிப்புகளால், சமீப எதிர்காலத்தில் பூவுலகின் இயற்கை மூலவளங்கள் தீர்ந்து விடுமென்பது திண்ணம். இப்படி இயற்கை மூலவளங்கள் முடிந்துவிடும் பிரச்சினைகள் எதிர்காலத்தில் தவிர்க்கப்படுமாயின், வளர்ந்துவரும் அசுத்தமாக்கல் மட்டங்களின் விளைவாகச் சூழல் சீர்குலைவு ஏற்படுமென்பது நிச்சயம். விளைவு எப்பொழுதும் ஒரே விதமாகவே உள்ளது. பெருவாரியான மரண விகிதங்களுடன் கூடிய பெரிய சீர்குலைவும், கைத்தொழிற் புரட்சிக்கு முற்பட்ட கால வாழ்க்கைதர இறக்கமுமே அவையாகும்.

அபிவிருத்தியுற்ற நாடுகளிலுள்ள பெருஞ் செல்வாக்குள்ள வட்டாரங்கள் சிலவற்றில் உத்தேசிக்கப்படும் பரிகாரங்களை ஒரு சில வார்த்தைகளில் சுருக்கிக் கூற முடியும்:

- பிரதான பிரச்சினை குறிப்பாக மூன்றாம் உலகில் ஏற்பட்டு வரும் துரிதமான ஜனத்தொகை வளர்ச்சியாகும்.
- பேரழிவைத் தவிர்ப்பதாயின், இது கட்டுப்படுத்தப்படுவது அத்தியாவசியமாகும்.
- அசுத்தமாக்கலைக் கட்டுப்படுத்துவதும், மூலவளங்கள் முதலியவற்றை விவேகமாக உபயோகிப்பதும் இரண்டாம்பட்ச நடவடிக்கைகள் மாத்திரமேயாகும்.

இந் நிலையிலுள்ள அடிப்படைத் தன்மையாதெனில், முற்றிலும் ஆராய்ந்து பாராது சமுதாயத்தின் மையமதிப்புக்களை உள்ளவாறே அது ஒப்புக்கொள்வதாகும்.

தற்போதைய கர்த்தாக்களின் நிலை முற்றிலும் வித்தியாசமானதாகும். சமுதாயத்தை எதிர்நோக்கும் பெரிய பிரச்சினைகள் பௌதிகப் பிரச்சினைகளல்ல; ஆனால் சமூக — அரசியல் பிரச்சினைகளாகும் என வாதிக்கப்படுகிறது. நாடுகளுக்கிடையேயும், நாடுகளுக்குள்ளேயும் அதிகாரம் சமனற்ற முறையில் பங்கிடு செய்யப்பட்டிருப்பதனாலேயே இப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதனையடியொற்றிய சுரண்டலின் விளைவாக அடக்குமுறையும், அன்னியப்படுத்தலும் ஏற்பட்டுள்ளன. சூழலின் சீரழிவு மனித முன்னேற்றத்தின் ஒரு தவிர்க்க முடியாத விளைவல்ல; அது, அழிவுப் போக்கில் வழிநடத்தப்படும், சமுதாய நிறுவனங்கள் ஏற்படுத்தியிருக்கும் ஒரு விளைவாகும்.

உலக சமூக, சர்வதேச நிறுவனங்களில் துரிதமான மாற்றங்களை ஏற்படுத்துவதனால் மட்டுமே குறைவிருத்தியிலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் மனுக்குலத்துக்கு விடுதலை தேடிக் கொடுக்க முடியும் என்பதில் இலட்சிய சமுதாயம் குறித்த இம்மாதிரி நம்பிக்கை வைத்துள்ளது.

இலட்சிய சமுதாயமொன்றை வர்ணிப்பது மாத்திரம் போதாது; அதன் லோகாயத வாழ் தகவை எடுத்துக் காட்டுவதும் அவசியமாகும். இவ்விதமாக எதிர்காலத்திற் சூழலும், அதன் இயற்கை மூலவளங்களும் இத்தகைய சமுதாயமொன்றை எய்துவதன்மீது பாதிப்புக்கள் ஏற்படுத்தும் என்ற நியாயமான சந்தேகங்களை நீக்கும் வகையில் நாம் எமது பணியை ஆரம்பிக்க வேண்டும். இரண்டாவதாக, மூலதனம், ஆள்பலம், நில, தற்போதைய ஜனத்தொகைப் போக்குகள் என்ற அடிப்படையில் உலகத்திலுள்ள பல்வேறுபட்ட நாடுகளும் பிரதேசங்களும் (குறிப்பாக மிக வறிய நாடுகள்) ஒரு நியாயமான காலவெல்லைக்குள்ளே நாம் பரிந்துரைக்கும் குறிக்கோள்களை அடைய முடியுமென்பது எடுத்துக் காட்டப்படவேண்டும்.

முதலாவது குறிக்கோளை அடைய —முன்னுணரத்தக்க எதிர்காலத்திலே முற்று முழுதான தூலவரையறைகள் இருக்கமாட்டாவென்பதை எடுத்துக்காட்ட புதுப்பிக்க முடியாத மூலவளங்களான வலு, சூழல் அசுத்தமாதல் போன்றன தொடர்பாக தற்போதுள்ள நிலைமை பற்றிப் பரிசீலனையொன்று மேற்கொள்ளப்பட்டது.

உலகத்திலுள்ள சகல நாடுகளும் அல்லது பிரதேசங்களும் ஒரு நியாயமான காலத்திலே தங்களுடைய தற்போதைய நிலைமைகளிலிருந்து உத்தேசக் குறிக்கோள்களுக்கு நகர முடியுமென்பதை ஸ்தாபித்து, இரண்டாவது குறிகோளைக் கையாளுவதற்காகக் கணித முறையிலான மாதிரியொன்று அமைக்கப்பட்டது. இவ்விதமாக, எண்ணக் கருத்திலுள்ள மாதிரி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்குரிய ஒரு யோசனையாகும்; கணித முறையிலான மாதிரி அதன்லோகாயத வாழ் தகவை ஆராய்ந்தறிவதற்குரிய சாதனமாகும்

புதிய சமுதாயத்தில் உற்பத்தி முறை, அடிப்படை மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை ஒரு பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது என்ற பிரமேயமே கணித முறையிலான மாதிரியின் அடிப்படையாகும். இந்தத் தேவைகள் போஷாக்கு, வீடமைப்பு, கல்வி; சுகாதாரம் ஆகியவனவாகும். நபரொருவர் தனது சமூக கலாசாரச் சூழலில் பூரணமாகவும் சுறுசுறுப்பாகவும் பங்கெடுக்க வேண்டுமாயின், இத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவது ஒரு முன்னியந்தனையாகும். ஒரு சமத்துவ, சுதந்திர சமுதாயத்தை அமைப்பதற்கு இது அத்தியாவசியமானதாகும். ஆனல், இது மட்டும் போதாது.

கணித முறையிலான மாதிரி, அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை மையமாகக் கொண்டதாகும். இது பிரதானமாக ஒரு பொருளாதார மாதிரியாகும். அல்லது இன்னும் சரியாகச் சொல்வதாயின், இது ஐந்து வித்தியாசமான பகுதிகளை — போஷாக்கு, கல்வி, வீடமைப்பு, மூலதனப் பொருட்கள் 'இறுதியில் நுகர்பொருள்களும் மற்றும் சேவைகளும் — உள்ளடக்கிய உற்பத்தி முறையின் மாதிரியாகும். இக்கடைசிப் பகுதி மற்ற நான்கு பகுதிகளிலில்லாததையெல்லாம் அடக்கியுள்ளது. உபயோகிக்கப்படும் உற்பத்திப் பணி மூலதனத்துக்கும் தொழிலாளருக்குமிடையே பிரதியீட்டை அனுமதிப்பதுடன், தொழில்நுட்ப முன்னேற்றத்தால் உற்பத்திச் சக்தியில் ஏற்படும் அபிவிருத்திகளையும் பிரதிபலிக்கின்றது.

இதுவரை அமைக்கப்பட்டுள்ள மற்றும் பெரும்பாலான மாதிரிகளிலிருந்து இதனைப் பிரித்துக் காட்டும் ஒரு முக்கிய தன்மை யாதெனில், ஜனத்தொகை மாற்றங்களைச் சமூக — அரசியல் மாற்றங்களுடன் இணைக்கும் ஓர் உபமாதிரியினால் ஜனத்தொகையின் அளவு, அதிகரிக்கும் உள் வளர்ச்சியினால் உண்டாக்கப்படுகிறது என்பதாகும். இந்த உப மாதிரி, இப் பரிசிலனை வெளியிடப்பட்ட அடிப்படை யூகங்களில் ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு அனுமதிக்கின்றது. அஃதாவது, ஜனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ள ஒரே (உண்மையிலேயே தகுதியான) வழி அடிப்படை வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதாகும். ஜனத்தொகைப் பகுதியை அமைப்பதிலும் கணனி (கம்பியூட்டர்)யின் இயக்கங்களது முடிவுகளிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் இந்த யூகம் அடிப்படையில் சரியானதென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

பொருளாதார முறையின் பிரதான பணி, சிறந்த பகிர்வைப் பெறுவதற்காக ஐந்து காரணிகளுக்கிடையே மூலதனத்தையும், ஆள்பலத்தையும் பங்கிடுவதாகும். அப்பொழுது, இச் சிறந்த பகிர்வை எவ்வாறு விளக்குவது? அதை எவ்வாறு அடைவது? என்ற கேள்வி எழுகின்றது. பூரண ஆய்வுகளுக்குப் பின்னர் வாழ்வெல்லை

---

உலகெங்கும் பெருமளவு சர்ச்சையை எழுப்பிய புத்தகம், "வளர்ச்சிக்கு வரையறைகள்" என்னும் ரோம் கிளப்பின் அறிக்கையாகும். 1972 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட இப்புத்தகம் மனித குலத்தினதும் பூவுலகின் மூல வளங்களினதும் எதிர் காலத்தைப் பற்றிக் காரசாரமான விவாதத்தைத் தூண்டி விட்டது; பொருளாதார முயற்சிகள் நிகழும் பெரும் நிலப் பரப்புகளின் போக்குகளினதும் கொள்கைகளினதும் தலையீட்டைப் பற்றி ஒரு புதிய உணர்வை உண்டாக்கியது; சிக்கலான உலக முறையின் கணிய பூர்வமான செயற்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கான முதல் முக்கிய முயற்சியெனக் கருதப்படலாயிற்று. இந்நூலைப் பற்றிய நோக்கொன்றில் ('பொருளியல் நோக்கு' மே 1976) "இது ஒரு நவ காலனித்துவ கீழ்த்தர நடவடிக்கை; உலகின் செல்வந்த நாடுகள், வறிய நாடுகளைச் சுரண்டுவதன் மூலம் முன்னெப்போதுமில்லாத அளவுக்குச் செல்வச் செழிப்பைச் சாதித்துவிட்டு... (இப்பொழுது) வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்க அல்லது வளர்ச்சியை நிறுத்த உத்தேசிக்கின்றன... வறிய நாடுகள் அபிவிருத்திக்கான நம்பிக்கையைக் கைவிடுவது என்பதே இதன் பொருள்... அதே சமயத்தில், குழந்தைகள் பெறுவதைக் குறைக்கும்படி வறிய நாடுகளுக்குக் கட்டளையிடும் அசட்டுத் துணிவையும் கொண்டிருக்கின்றது" என கலாநிதி அலெக்சாந்தர் கிங் குறிப்பிட்டார்.

பூவுலகின் ஒன்றோடொன்று பிணைந்துள்ள மூல வளங்களால் முன்னேற்றமடைந்த தொழில் நுட்பவியலைக்கொண்டு கூட, பொருளாதார, ஜனத்தொகை வளர்ச்சியின் தற்போதைய விகிதங்களை 2100ஆம் ஆண்டுக்கு அப்பால், எடுத்துச் செல்ல முடியாதிருக்கும் என்ற கவலை தரும் செய்தியை இப்புத்தகம் வெளியிட்டது.

பின்னர் 1970 ஆம் ஆண்டில் இலத்தீன் அமெரிக்க விஞ்ஞானிகள் ரோம் கிளப் அங்கத்தவர்களுடன் றியோ டி ஜெனீரோவில் கூடி தங்களுடைய "உலக மாதிரி 11" — "வளர்ச்சிக்கு வரையறைகள்" பற்றிக் கலந்தாலோசித்தனர். இலத்தீன் அமெரிக்கர்கள், ரோம் கிளப்பின் அறிக்கைக்குப் பொறுப்பாகவிருந்த பேராசிரியர் டெனிஸ் மீடோஸின் மீதும் அவரது சர்வதேசக் குழுவின் மீதும் நமக்கிருந்த மனக்கசப்பைப் பகிரங்கமாகவே வெளியிட்டனர். மீடோஸின் அறிக்கைப்படி உலகில் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து இலத்தீன் அமெரிக்கர் கவலை கொண்டதுடன் மீடோஸின் யூகங்களிலிருந்து மாறுபட்ட கணிப்பீடுகளைப் பிரயோகித்து உலக நிலைமையைப் பற்றித் தங்கள் சொந்த மாதிரியை உருவாக்குவதென்றும் முடிவு செய்தனர். மூன்றாம் உலகின் நோக்கிலிருந்து எதிர் காலத்தைத் தரிசிப்பதென அவர்கள் தீர்மானித்தனர். இறுதியில், டாக்டர் அமில்கார் ஹெரேராவின் தலைமையில் 20 பேரைக் கொண்ட செய் திட்டக் குழுவொன்று சர்வதேச அபிவிருத்தி ஆய்வு நிலையத்தின் மானியமொன்றின் ஆதரவுடன் இரு வருடங்கள் பணியாற்றி 1975ஆம் ஆண்டில் ஓர் உலக மாதிரியை உருவாக்கியது. முந்திய நூலின் முடிபுகளை தலைகீழாக மாற்றிய இவ்வாய்

(அடுத்த பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தபட்சமாக்கப்படும் வகையில் ஒவ்வொரு பகுதிக்கும் மூலவளங்களை ஒதுக்கும் ஒரு கணிதப் பொறியைப் புகுத்துவதெனை முடிவு செய்யப்பட்டது.

இந்த மாதிரி சுயாதிபத்தியத்தின் முக்கியத்துவத்தை வற்புறுத்துகிறது; இப்பொழுது உத்தேசிக்கப்படுவது என்னவெனில், பல்வேறு பிரதேசங்களும் (அல்லது நாடுகளும்) பிரதானமாகத் தங்களுடைய முடியுமென்ற எடுகோளினை அடிப்படையாகக் கொண்டவையாகும். இவ்விதமாக, அரசியல் முறைகளிலுள்ள தற்போதைய வித்தியாசங்கள் அதற்குப் பின்பு முக்கியமற்றதாகிவிடும்.

இந்தப் பரிசீலனை உத்தேசக் குறிக்கோள்களை, உலகம் எந்த முறையைக் கைக்கொள்வதன் மூலம் எய்தலாமென்பதை ஆராயவில்லை. சரித்திரம் எடுத்துக் காட்டுவதுபோல, சமூக மாற்றங்கள் எந்த முறைகள் மூலம் நடைபெறுமென்பதை முன்கூட்டியே எடுத்துரைப்பது கஷ்டம் என்பதே இதற்கு காரணமாகும்; அஃதெப்படியிருப்பினும், இது இப் பரிசீலனை முயற்சியின் நோக்கமன்று.

குறை அபிவிருத்தி, அடக்குமுறை, துன்ப துயரங்களிலிருந்து சமுதாயத்தை விடுவிப்பது சாத்தியமே என்பதை எடுத்துக் காட்டுவதே பிரதான நோக்கம். இது உண்மையில் நடைபெறுமா அல்லது நடைபெறாதா என்பது மனிதர்களின் திடசித்தத்தையும், நடவடிக்கைகளையும் சார்ந்திருக்கும். உத்தேச திசையில் இத் திடசித்தத்தைத் திரட்டுவதற்கு இந்த மாதிரி உதவுமானால், அதன் கர்த்தாக்களின் நோக்கத்தை அது நிறைவேற்றி விடுமென்பது திண்ணம். இந்த முறைக்குப் பூகோள அண்மை உதவியாயிருக்கிறது.

ஒருவேளை இதைவிட முக்கியமானதாயிருக்கக்கூடிய இன்னொரு தெளிவாக்கப்பட்ட உண்மையாதெனில், ஒரு தொகுதிக்குள்ளிருக்கும் நாடுகளுக்கிடையேயுள்ள அரசியல், சமூக வேறுபாடுகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்பதாம். இவ்விதமாக, முதலாளித்துவ நாடுகளுக்கும் சோஷலிச நாடுகளுக்குமிடையே, அவை கைத்தொழில் மயமாக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது அபிவிருத்தியடைந்து வருவதாயிருந்தாலும் சரி, எத்தகைய வித்தியாசமும் காட்டப்படுவதில்லை.

உத்தேச புதிய சமுதாயத்தின் லோகாயத சாத்தியப்பாட்டை எடுத்துக் காட்டுவதற்கு முயலவிருக்கும் இம் மாதிரியின் குறிக்கோள் இதனை நியாயமானதென நிரூபித்துள்ளது. இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ள பெறுபேறுகள், 1980-ஆம் ஆண்டளவில் உத்தேச சமுதாயத்தை நோக்கிச்செல்லும் கொள்கைகளை அமுலாக்கம் செய்ய சொந்த மூலவளங்களை உபயோகித்து, குறித்த குறிக்கோள்களை எய்த முடியுமா என்பதை நிலைநாட்டுவதாகும். வித்தியாசமான நாடுகளின் நிலப் பரப்பிலும், இயற்கைக் வளங்களிலுமிருக்கும் சமமின்மைகளை மனத்திற் கொண்டால், சுயேச்சையான அபிவிருத்தியில் பிரதேசப் பொருளாதார ஆற்றல் ஒரு மிக முக்கியமான பங்கினைப் பெறுகின்றதென்பது தெளிவு. இது ஒவ்வொரு நாட்டுக்குள்ளிருக்கும் சக்திகளுக்கு மட்டுமன்றி, விரிவான சந்தர்ப்பத்தில், ஒரேவிதமான பிரச்சினைகளைக் கொண்ட நாடுகள் தங்களுடைய மூலவளங்களைப் பொதுவாக ஒன்றுதிரட்டுவதற்குப் பொருந்தும்.

---

(முற்பக்கத் தொடர்ச்சி)

வறிக்கை, உலகின் பிரதான பிரச்சினை மூன்றும் உலகில் ஜனத்தொகை துரிதமாக வளர்ந்து வருவதேயாகும்; பேரழிவைத் தவிர்ப்பதாயின், இதனைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும் என்ற போதனையையே ரோம் கிளப்பின் ஆராய்ச்சி அறிக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளதெனக் கருதியது. ஆனால், ஹெரோரா இப்படிச் சொன்னார். "இப்பொழுது நாம் பேரழிவொன்றிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; இது, பேரழிவொன்றைக் காண 80 ஆண்டுகள் காத்திருக்கும் ஒரு பிரச்சினையல்ல" ரோம் கிளப்பின் மாதிரி புள்ளி விவரங்களை உலகளாவிய திரட்டுகளில் ஆராய்ந்தது; ஆனால், உலக ஜனத்தொகையில் 25 சதவிகிதத்தினர் (கைத் தொழில்மயமான நாடுகளிலுள்ள மக்கள்) உலகின் புதுப்பிக்க முடியாத மூல வளங்களில் 85 சதவிகிதத்துக்கு மேற்பட்ட பகுதியை நுகர்ந்து வருகின்றார்களென்ற உண்மையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. பூமண்டலமெங்கும் வியாபித்து வரும் கொந்தளிப்புகளுக்கு (சனத் தொகை வளர்ச்சியை விடவும்) இதுவே பிரதான காரணமாயிருக்கின்றது.

ஒரு நாட்டின் தலா வருமானத்துக்கும், அதன் ஜனத்தொகை வளர்ச்சி விகிதத்துக்குமிடையே ஒரு நெருக்கமான தொடர்பு உண்டென்ற கருத்தை இக் குழு மறுக்கிறது. அவர்கள் உருகுவே நாட்டைச் சுட்டிக்காட்டினர். அந்நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி தலா 600டாலர் மட்டுமே; ஆனால் அதன் ஜனத்தொகை வளர்ச்சி வேகம் மேற்கு ஐரோப்பாவினதைவிட மிகக் குறைவாயுள்ளது. இதற்குக் காரணம் அந்நாட்டில் நெடுங் காலமாக வழங்கப்பட்டு வரும் உயர்தர சமூகப் பாதுகாப்பாகுமென இவர்கள் வாதிக்கின்றனர்.

இதிலிருந்து ஹெரோரா தலைமையிலிருந்த குழுவினர் தம் ஆராய்ச்சியில் பரிசோதனை செய்ய வேண்டிய ஓர் அடிப்படை ஊகம் தோன்றியது; அஃதாவது, ஜனத் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்குரிய ஒரே உண்மையான தகுந்த வழி அடிப்படை வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதேயாகும் என்பதாம்.

வளைந்து கொடுக்காத திட்ட அமைப்புக்கள் விரைவில் அர்த்தமற்றதாக்கி விடுமென ஹெரோரா கருதுகிறார். ஏனெனில் சமூக அரசியல் கட்டுக்கோப்புகள் இடையறாது மாறும் நிலையிலிருக்கும்போது, அவை மாறாமல் நிலைபெற்றுள்ளன என்று இவை ஊகித்துக்கொள்கின்றன. ஒவ்வொரு மனிதப் பிறவியும் இவ்வுலகில் உயிருடனிருக்கிறுரென்ற சாதாரண உண்மையினால், வீட்டு வசதி, சுகாதாரம், உணவு, கல்வி ஆகியவற்றில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளப் பரிபூரண உரிமையுடையவராவர் என்ற ஒரு நியமமான அனுகூல முனைக்கு அவர்கள் விரைந்தனர்.


முறையே 1980களின் முற்பகுதியிலும் 2008 ஆம் ஆண்டளவிலும் இந்த அடிப்படைத் தேவைகள் பூர்த்தி எய்தலைத் தடுக்கவல்ல எந்தத் தாலத் தடைகளும் இலத்தீன் அமெரிக்காவிலோ அல்லது ஆபிரிக்காவிலோ இல்லை. அதிகமான மக்களைக் கொண்ட ஆசியா ஒரு பிரச்சினையைத் தோற்றுவித்தது. இப்பிரச்சினை வீடமைப்பு, கல்வி போன்றன தொடர்பானதல்ல; உணவு உற்

(21ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIGURE 1



சனத்தொகையின் விகிதத்துக்கேற்ப நாட்டின் பரப்பளவு வரையப்பட்டிருக்கும் உலகம்

படத்தில் காணப்படும் இலக்கங்களுக்குரிய நாடுகள்

பிராந்தியம் 1

1. அல்பேனியா
2. ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு
3. அவுஸ்திரேலியா
4. அவுஸ்திரியா
5. பெல்ஜியம்
6. பல்கேரியா
7. கனடா
8. செக்கோஸ்லாவக்கியா
9. டென்மார்க்
10. ஐக்கிய அமெரிக்கா
11. ஸ்பெய்ன்
12. பின்லாந்து
13. பிரான்ஸ்
14. கிரேக்கம்
15. ஹங்கேரி
16. அயர்லாந்து
17. இஸ்ரவேல்
18. இத்தாலி
19. ஜப்பான்
20. லெபனன்
21. நோர்வே
22. நியூசிலந்து
23. தாழ் பிரதேச நாடுகள்
24. போலந்து
25. போர்த்துக்கல்
26. போர்ட்டோ ரிக்கோ
27. ஐக்கிய இராச்சியம்
28. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு
29. ருமேனியா
30. சுவிடன்
31. சுவிட்சர்லாந்து
32. சோவியத் ருஷ்யா
33. யூகோஸ்லாவியா

பிராந்தியம் 2

34. ஆர்ஜன்டீனா
35. பொலிவியா
36. பிரேசில்
37. சிலி
38. கொலம்பியா
39. கோஸ்டா ரிக்கா
40. கியூபா
41. ஈக்குவடோர்
42. எல் சல்வடோர்
43. கௌதமாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. ஹயிட்டி
45. ஹொண்டுராஸ்
46. ஜமைக்கா
47. மெக்சிக்கோ
48. நிகாராகுவா
49. பனமா
50. பாகுவே
51. பெரு
52. டொமினிகன் குடியரசு
53. டிரினிடாட்—டொபாகோ
54. உருகுவே
55. வெனிசூலா

பிராந்தியம் 3

56. மேல் வொல்ட்டா
57. அங்கோலா
58. அல்ஜீரியா
59. புருண்டி
60. கமரூன்ஸ்
61. சாட்
62. கொங்கோ
63. ஐவரி கோஸ்ட்
64. டஹோமி
65. எகிப்து
66. எதியோப்பியா
67. கானா
68. கயானா
69. கென்யா
70. லைபீரியா
71. மடகாஸ்கார்
72. மளாவி
73. மாலி
74. மொரோக்கோ
75. மொரிடானியா
76. மொஸாம்பிக்
77. நைகர்
78. நைஜீரியா
79. லிபியா
80. மத்திய ஆபிரிக்கக் குடியரசு
81. ரொடீசியா
82. ருவாண்டா
83. செனீகல்
84. சியாரா லியோன்
85. சோமாலியா
86. தென் ஆபிரிக்கா
87. சூடான்
88. டான்ஸானியா
89. டோகோ
90. டியூனிஸ்
91. உகாண்டா
92. ஸயரே
93. ஸாம்பியா

பிராந்தியம் 4

94. ஆப்கானிஸ்தான்
95. சவூதி அரேபியா
96. பர்மா
97. கம்போடியா
98. மக்கள் சீனக் குடியரசு
99. வட கொரியா
100. தென் கொரியா
101. பிலிப்பைன்ஸ்
102. ஹொங்கொங்
103. இந்தியா
104. இந்தோனேசியா
105. இராக்
106. இரான்
107. ஜோர்தான்
108. லாவோஸ்
109. மலேசியா
110. மொங்கோலியா
111. நேபாளம்
112. நிவு கினியா
113. பாகிஸ்தான்
114. சிரியா
115. சிங்கப்பூர்
116. ஸ்ரீலங்கா
117. தாய்லாந்து
118. துருக்கி
119. வட வியட்னாம்
120. தென் வியட்னாம்
121. யெமன்
122. ஜனநாயக யெமன்
123. வங்காள தேசம்.

---

# யாவர்க்கும் ஓர் உலகு

## சமகால சமுதாயம் பற்றிய ஒரு விமரிசனம்

செல்வந்த நாடுகளில் காணப் அழுகி நாற்றமெடுத்துப் போயிருக்

படும்தோல்வி மனப்பான்மை, விரக்தி என்பனவற்றினை அடியொற்றி மாறுதல் வேண்டி நிற்கும் மனப்போக்கு மக்களிடையே துளிர்த்துள்ளது. முன்னைய பல வாலாற்றுக் கால கட்டங்களில் போன்றே, இன்றைய உலகின் சமுதாய அமைப்பில் நிகழ்ந்துள்ள சிதைவும், சீர் குலைவும் உலகளாவிய ரீதியில், புதியதோர் ஒழுங்கு எழுச்சியுற்று வர வேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன. வெறுப்பும் அநீதியும் அடக்கு முறையும் நிறைந்த இன்றைய சமூக அமைப்பினையும், சர்வதேச ஒழுங்கினையும் மூர்க்கத் தனமாக நிராகரித்து மாற்றுச் சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்புவதில் தணியாத ஆர்வம் பரிணமித்துள்ளது. இம்மாற்றுச் சமுதாயங் கூட இன்னும் அநேகமாகப் பொதுப் படையாகவே வர்ணிக்கப்படுகிறது.

இற்றை வரை புதியதாகவே இருக்கும் இத்தகைய போக்கு செல்வந்த நாடுகளிலும் வறிய நாடுகளிலும் ஒரே மாதிரியாகக் காணப்படினும் பின்னைய நாடுகளிலேயே இதுகுறித்த வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்து வருகின்றன.

கும் பாரம்பரிய சமூக ஒழுங்குகளுக்குப் பேரளவில் பலியாகி இருக்கும் வறிய நாடுகள் முடியுமான சகல மாற்றுப் பரிகாரங்களையும் கண்டு பிடிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். மனுக்குலத்தின் பூரண அபிவிருத்தியை பங்கப்படுத்தும் இன்றைய சூழ்நிலை தொடர்ந்தும் நிலவி வருவதன் காரணமாக சமூக அமைப்பையும் சர்வதேச ஒழுங்கையும் மாற்றியமைக்க வேண்டுமென்ற உணர்வு இந்நாடுகளில் மிகையாக வலுப்பெற்று வருகின்றது.


அபிவிருத்தியடைந்த நாடுகளில் இம் மாறுதல் குறித்த விழிப்புணர்வு குறைவாயிருப்பினும் இளைஞர் புத்தி ஜீவிகள் போன்ற வட்டாரங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. செல்வந்த சமுதாயங்களில் நேரடி அடக்கு முறையையும், துயரங்களையும் மீறி அன்னியப்படுத்தல் பாரிய பிரச்சினையொன்றாக உருவெடுத்துள்ளது. மூன்றுவது அகிலத்தின் நாடுகளுக்கும் கைத்தொழில் மய நாடுகளுக்குமிடையே நிலவும் வேறுபாடு இதுவாகும். மூன்றுவது உலகில் நிகழும் சுரண்டலுக்கும் சஞ்சலத்துக்கும் எந்தக் காரணிகள் பின்னணியாக இருக்கின்றனவோ அதே காரணிகள் கைத் தொழில் நாடுகளில் வேரூன்றியிருக்கும் அன்னியப்படுத்தலுக்கும் தூண்டுதலாக இருப்பதனை ஆய்வுகள் காட்டும். இன்றைய சர்வதேச ஒழுங்கு போட்டி போட்டுச் செல்வம் குவிக்கும் குறிக்கோளுக்கு அனுசரணையாகவும், மானிட இனத்தின் சமாதானத்துக்கும் பரஸ்பர நல்லெண்ணத்துக்கும் ஊறு விளைவிப்பதாகவும் இருக்கின்றது. மனிதனை வெறும் உற்பத்திக் கருவியாக மட்டும் கருதும் தற்போதைய ஒழுங்கு, மனித இனத்தின் ஒழுங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திப் பயணத்தை இடை நிறுத்துகின்றது.

பொது அபிலாசைகளையும் குறிக்கோள்களையும் மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் வாழும் பல் வேறு பிரிவினரையும் ஒன்றிணைக்கும் நோக்குடன் தோற்றம் பெற்றிருக்கும். இப்புது ஒழுங்கு பற்றிய கருத்து, ஐரோப்பிய நாடுகள் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தினை விஸ்தரிக்கத் தொடங்கிய காலத்தின் பின்னர் இதுவரை காலமும் எழுச்சியடையாதிருந்த புதியதோர் சக்தியாகப் பரிணமிக்கின்றது. இன்று சர்வதேச ரீதியில் காணப்படும் ஒருமைப்பாடானது முகையவிழ்த்து வரும் இப்புதிய சமுதாய ஒழுங்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரை படங்களுக்கான விளக்கத்தினை 17ம் பக்கத்திற் பார்க்கவும்.




Distribution of food in the world, expressed as average consumption of calories and protein per person per day.

வெற்றியைக் குறியீடாகக் காட்டுகின்றது.

பரிந்துரை பெறும் புதிய சமுதாயத்தின் மத்திய மூலகங்கள் யாவை?

அமைதியான அபிவிருத்தி இன்று எதிர்நோக்கியிருக்கும் தடை சமூக அரசியல் ரீதியானவை என்பதும், சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் அதிகாரப் பங்கீட்டை இத்தகைய சக்திகளே தீர்மானிக்கப்படுகின்றன என்பதும் முதலில் தெளிவாக உணரப்பட்டுள்ளது. இரண்டவாதாக, வரலாற்றில் முதன் முதலாக தொழில் நுட்ப அரசியல் சக்திகள் உலகை ஒரு தனி அலகாக தோற்றமெடுக்கச் செய்துள்ளன. குறிப்பாக மூன்றுவது அகிலத்தின் தலை விதி ஏனைய மனித இனங்களின் தலை விதியோடு நெருக்கமாக இணைந்துள்ளது. இதன் நிலை தொடர்ந்தும் கீழ் நோக்கிச் செல்லுமாயின் சலுகை பெற்ற நாடுகளுக்கு பாரதூரமான விளைவுகளை எதிர் நோக்கலாம்.

தனியாகப் பிரித்தெடுத்தால் இம் மூலகங்கள் யதார்த்த நிலையின் அரைகுறையான பார்வையையே வழங்குகின்றன. வரலாற்று ரீதியான வேர்களிலிருந்து பிரவாகம் பெற்று வரும் மாறுதல் பெறுவதற்கான மனப் போக்கின் மீள் உயிரூட்டலின் சில அடிப்படைப் பெறுமானங்களின் பின்னணியில் நோக்கும் போது இம் மூலகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இப் பெறுமானங்களில் இரண்டு மையமானவை; ஒன்று மனிதனுக்கு அடிப்படை சம உரிமை உண்டென்ற எடுகோள் வலுப்பெற்று வருவது; மற்றது வரலாற்றை ஒரு அடைக்கப்படாத படிமுறையாகக் காணும் வரலாற்றுக் கோட்பாடு. இப்படி முறையின் நெறி மனித விருப்புகள் நடவடிக்கைகள் போன்றவற்றின் மீதான இறுதி ஆய்வில் தங்கியுள்ளது. முதலாவது ஓர் உண்மையான அமைதி நிலவும் உலகினைச் சமைப்பதற்கான உறுதியான ஒரே அடிப்படையை அடக்கியுள்ளது. இரண்டாவது இத்தகைய உலகினை அடைவதற்கான முன்னிபந்தனையாயுள்ளது.

புதிய உலகொன்றையும், மனுக்குலத்தின் விருத்தியையும் இம்மாதிரி குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்தரு "இலட்சிய" மாதிரியை உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் பிரயோகிப்பதன் மூலமே புதிய உலகின் மலர்ச்சிக்கான பின்னணியை ஏற்படுத்த முடியும்.

உலகளாவிய ரீதியில் புதியதோர் ஒழுங்கினை எழுச்சியடையச் செய்வதனை இறுதி இலட்சியமாகக் கொண்டிருக்கும் இம்மாதிரி, (தனித்தனி நாடுகளின் இறைமையையும், சுதந்திரத்தையும் கண்ணியப்படுத்தும் அதே வேளையில்) முழு மனித இனத்தையும் சர்வதேச சமுதாயமொன்றுக ஒருங்கிணைக்கவும், ஐக்கியப் படுத்தப்பட்ட மனித மனச்சாட்சியைப் பிரதிபலிக்கும் ஓர் உலகைத் தரிசனம் செய்யவும் முயல்கின்றது. இத்தகையதோர் எழுச்சி நீண்ட காலப்படி முறைகளைக் கொண்டதும், கடினமானதும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், எதிர்கால உலகம் தோற்றுவிக்கவிருக்கும் பாரிய பிரச்சினைகளுக்கான விவேகமான ஒரு தீர்வு, இதன் வெற்றியிலேயே தங்கியிருக்கின்றது.

ஆசியாவைப் பொறுத்தளவில் பெறுபேறுகள் வித்தியாசமானவையாக இருக்கின்றன உணவுத் துறையிலேயே இங்கு பிரச்சினை எழுகின்றது. 2010ம் ஆண்டளவில் இடைக்கக் கூடியதாயிருக்கும் மொத்த நிலப்பரப்பும் பயிரிடப்படும்; அதன் பின்னர் கால் நடை வளர்ப்பு, மீன்பிடி என்பனவற்றில் கவனஞ் செலுத்த வேண்டும். எவ்வாறிருப்பினும், அதிகரிக்கும் சனத் தொகையினைப் போஷிப்பதற்கு இவை போதியதாயிரா. இதன் விளைவாக, உயிர் வாழப் போதுமான அளவை விடவும் நுகர்வு வீழ்ச்சியடைந்து செல்லும்.


பயிர்ச் செய்கைக்காகப் புது நிலங்களை விருத்தி செய்யும்போது உணவுற்பத்திச் செலவுகள் அதிகரித்துச் செல்லும் இதற்காக பொருளாதாரத்தின் ஏனைய துறைகளிலிருந்து வளங்கள் உறிஞ்சப்படுவதனல் பிற அடிப்படைத் தேவைகளின் நிறைவில் இது தாக்கத்தை ஏற்படுத்தும். சுருக்கமாகச் சொல்வதாயின், போதியளவு சேம நல மட்டங்களை எய்துவதில் ஏற்படும் தாமதம், கூடிய சனத் தொகை சாதிப்பினை ஏற்படுத்தும்; இதன் விளைவாக மீண்டும் நச்சுச் சுழல் ஆரம்பமாகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIGURE 4





Percent of illiterates in population aged 15 years and over

ஆயினும், ஆசியாவின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் இல்லாமலில்லை. ஏனெனில், (சனத்தொகை ஒரு ஸ்திரத்தன்மையையடையும் போது) ஏனைய பிரதேசங்களில் பயிர்ச் செய்கை பண்ணப்படாத நிலப்பரப்பு பெருமளவில் இருக்கும். ஆசியா உணவை இறக்குமதி செய்ய முடியும்; ஆனால், இத்தகையதொரு தீர்மானம் ஏனைய சகல முயற்சிகளும் தோல்வியடையும் ஒரு கட்டத்திலேயே எடுக்கப்படுதல் வேண்டும்.

உச்ச மட்டத்தை விட மிகக் குறைந்தளவில் இருக்கும் விளைச்சல் அளவுகளை அதிகரிப்பதானது இப்பிச்சினைக்கான ஒரு பொருத்தமான தீர்வாக இருக்கும். ஆசியாவின் விவசாய விளைச்சல் ஹெக்டயாருக்கு (2½ ஏக்கர்) 6 தொன்களாக இருக்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் பார்ப்பின், அடிப்படைத் தேவைகள் தேவையான மட்டங்களில் நிறைவு செய்யப்படுவதைக் காண முடியும். தலா நபர் உணவு நுகர்வு 1994ல் 3000 கலோரிஸ் ஆக இருக்கும்; ஆறு வருடங்களின் பின்னர் தேவையான போஷாக்கு மட்டம் அடையப்படும். 2000 — 2010க்கு மிடையில் பாடசாலை செல்வோர் 98% ஆக இருக்கும். ஆனல் ஒரு குடும்பத்துக்கு ஒரு வீடு என்ற இலக்கு 2020ம் ஆண்டளவிலேயே எய்தப்படும்.

FIGURE 3




The world housing situation by country. The various hatchings represent a portion of an index number that comprises six factors, each having a value of 10, to a maximum of 60: crowding; availability of running water, electricity, and toilets; houses built each year; and life expectancy.

குறிப்பிடத்தக்களவிலான இத்தகைய விருத்திகளின் பின்னர் கூட இப் பிராந்தியத்தில் உணவு ஒரு பிரச்சினையாகவே இருக்கும். இந் நியமவோட்டத்தின் முடிவு வரை போதியளவு உணவு வினியோகம் பேணப்படினும், 2030 அளவில் கிடைக்கக் கூடியதாயிருக்கும் மொத்த நிலமும் பாவிக்கப்பட்டதாயிருக்கும். தற்போதைய உணவு கையிருப்பு, கால் நடை, மீன் பிடித்துறை, குறைந்த சனத் தொகை வளர்ச்சி போன்றனவே இதற்குக் காரணமாகும். ஓட்டத்தின் இறுதி வருடங்களில் உணவுற்பத்தித்திறன் மிகக் குறைவடைந்து செல்வதுடன், 2060ம் ஆண்டின் பின்னர் ஆசியா அதன் மக்களுக்கு போதியளவு உணவினை வழங்க முடியாத நிலையிலிருக்கும்.

நீண்ட கால ரீதியில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேறு சில வழிகளைக் கையாள முடியும். விளைச்சல் அளவுகளை மேலும் அதிகரிக்கவும், பாரம்பரியமற்ற மூலங்களிலிருந்து உணவைப் பெறவும் முயல வேண்டும். பொருத்தமான குடும்பத் திட்டங்கள் மூலம் (நீண்டகால ரீதியில்) சனத்தொகை அதிகரிப்புக்கும், உணவு உற்பத்தி அளவுகளுக்குமிடையே இருக்கும் இடை வெளியை நீக்குதல் அவசியமாகும்.

முதலில், தற்போதைய வருமான அமைப்பைப் பேணுவதாயின் குடிசனத் தொகையின் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குத் தேவையான காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் குறிப்பிடத் தக்களவுக்கு இது நீட்டிச் செல்லும். இத்தாம தத்தின் விஸ்தீரணத்தை இதற் கான மாதிரியின் நியமவோட்டத்தி லிருந்து மதிப்பிடலாம். குறிப்பாக ஆபிரிக்காவுக்கும் இலத்தீன் அமெ ரிக்காவுக்குமான இம்மாதிரியில் லெயோன்திவ்வின்- பிராந்தியங்கள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட் டுள்ளவையோடு (பிராந்தியங்கள் சரியாக ஒன்றுபடாததால் தனிநபர் தலா மொத்தத் தேசிய உற்பத்தி யின் பெறுமதி அநேகமாக வேறு பட்டவையாய் இருந்தும்கூட) அண்ணளவாக ஒன்றுபட்டுள் ளன. பிராந்தியங்களின் இரண்டு அணுகு முறைகளிலும் வருமானப் பகிர்வு ஒன்றாகவே உள்ளது. எனவே அட்டவணையில் உள்ள பெருக்குக் காரணியை மாதிரியின் பெறுபேறுகளோடு அண்ணள வாகப் பிரயோகிக்கலாம்.


ஆபிரிக்கவில், ஏற்கனவே உள்ள படி, 2008ம் ஆண்டளவில் தனி நபர் தலா 558 டொலர் சராசரி வருமானத்துடன், - இம்மாதிரியின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. தற்போதைய வருமான அமைப்புப் பேணப்படுவ தாகக் கொள்ளப்படின் அட்ட வணையில் உள்ள பெருக்குக் காரணியில் காட்டப்பட்டுள்ளது போல் இவ்வருமானம், 200 டொலர் களால் அதிகரிக்க வேண்டும். முத லாவது கருதுகோளில் இருந்து 38 வருடங்களுக்குப் பின்னர் மட் டுமே — அதாவது 2046ம் ஆண் டிலேயே — எதிர்பார்த்த பெறு மானத்தை அடைய முடியும். இலத் தீன் அமெரிக்காவில் அடிப்படைத் தேவைகள் 809 டொலர் தனி நபர் தலா வருமானத்துடன் 1992ல் பூர்த்தி செய்யப்படலாம். ஆனால் இரண்டாவது கருது கோளின் பிர காரம் அவசியம் எனக் கருதப் படும் 4045 டொலர் பெறுமானம் 50 வருடங்கள் பிந்தியே அதாவது 2043ம் ஆண்டிலேயே அடையப் பட முடியும். உலகின் ஏனைய பிராந்தியங்களில் என்ன சம்ப விக்கும் என்பதை எடுத்துக் காட்ட இவ்விரண்டு உதாரணங் களுமே போதுமானவை.

வேறு வழியில் இப்பிரச்சினை யின் விஸ்தீரணத்தைக் காட்ட இம் மாதிரியின் நியமவோட்டத்தினைப் போன்று அதே காலகட்டத் தினையே இது அண்ணளவாக எடுக்கும் எனக் கொண்டும் தற் போதைய வருமான அமைப் பினையே பேணிக் கொண்டும் உலகி லுள்ள சகல நாடுகளினதும் குடி சனத் தொகையின் அடிப்

தற்போதைய வருமானப் பகிர்வமைப்பு -பேணப்படத் தக்கதாய் 2000ம் ஆண்டில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருளாதார வளர்ச்சி வீதங் கள்:

| | 1960—70 கால கட்டத்தில் வளர்ச்சி வீதங்கள் | 2000ம் வருடத்தில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தற்கு அவசியமான வளர்ச்சி வீதங்கள் |
|---|---|---|
| வட அமெரிக்கா | | |
| தென் அமெரிக்கா (அதிக அபிவிருத்தி) | 4.5 | 5.3 |
| தென் அமெரிக்கா (குறைந்த விருத்தி) | 5.3 | 9.9 |
| மேற்கு ஐரோப்பா (அதிக விருத்தி) | 5.2 | 10.5 |
| மேற்கு ஐரோப்பா (குறைந்த விருத்தி) | 4.6 | 5.7 |
| சோவியத் ஒன்றியம் | 6.7 | 7.9 |
| கிழக்கு ஐரோப்பா | 7.0 | 4.1 |
| ஜப்பான் | 5.7 | 3.4 |
| தூர கிழக்கும், இந்தியாவும் | 10.6 | 5.6 |
| மத்திய கிழக்கு (எண்ணெ வள நாடுகள்) | 5.3 | 10.5 |
| ஆபிரிக்கா (அதிக விருத்தி) | 8.5 | 10.4 |
| ஆபிரிக்கா (குறைந்த விருத்தி) | 4.1 | 11.5 |
| தென் ஆபிரிக்கா | 5.1 | 11.8 |
| அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் ம் | 6.0 | 12.8 |
| மக்கள் சீனக் குடியரசு | 4.9 | 5.6 |
| | 4.4 | தரவு இல்லை |

FIGURE 5




Life expectancy at birth by country.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தற்கு அவசியமான பொருளாதார வளர்ச்சி வீதங்கள், கணிக்கப்பட்டுள்ளன. இதில் காணப்படுவது போல் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் வளர்ச்சி வீதங்கள் 10 சத வீதத்திற்கும் 12 சத வீதத்திற்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

சுருங்கக் கூறுமிடத்து, தற்போதைய வருமானப் பகிர்வு முறையைப் பேணிக் கொண்டு பொருளாதார வளர்ச்சியைக் காண்பதாயின் துயரங்களும், சஞ்சலங்களும் இல்லாத சுதந்திரமான மானிட இனமொன்று குறித்த இலட்சியத்தை அடைவதற்கு ஆகக் குறைந்தது இரண்டு தலைமுறைக் காலங்களாவது செல்லும். அத்தோடு விரும்பும் குறிக்கோளை அடைவதற்கு மூன்று முதல் ஐந்து மடங்கு பொருள் வளங்களைச் சூழல் தாக்கத்தைப் பெருக்கிப் பிரயோகிக்க வேண்டிய தேவையையும் இது உணர்த்துகிறது. இவை யாவும் சலுகை பெற்ற சிறுபான்மையினரின் கவனயீனமான நுகர்ச்சிகளைப் பேணுவதற்கே செய்யப்பட வேண்டியவையாயுள்ளன.

## முடிவுரை

ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்ட மாதிரியின் பெறு பேறுகள் எடுத்துக் கூறுவது யாதெனில், உத்தேசிக்கப்பட்ட கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுமாயின் ஒரு தலைமுறைக்குச் சற்று அதிகமான காலகட்டத்தில் முழு மனுக்குலமும் போதிய அளவு வாழ்க்கைத் தரத்தை அடைந்துவிடலாம் என்பதாகும். மனித இனத் தோற்றத்தின் ஆரம்ப காலத்திலிருந்து அவனது பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது மிக அவசிய, உடலியல், கலாசாரத் தேவைகளின் பூர்த்தியாகும். மூன்றாவது அகிலத்திலுள்ள அநேக நாடுகள் இத்தேவைப் பூர்த்திகளை இந்நூற்றாண்டின் இறுதியில் அல்லது அடுத்த நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் எய்திவிட முடியும்.

இதை நிறைவேற்றும் வழியில் ஏற்படக் கூடிய உள்ளூர் இயல்பினதான ஒரே ஒரு பூவியல் பிரச்சினை, அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆசியாவில் விவசாயம் செய்யக் கூடிய நிலத்தில் ஏற்படக் கூடிய நிரம்பல் குறையாகும். எவ்வாறாயினும் வேறு பிராந்தியங்களில் உள்ள பெருமளவிலான விவசாய நிலங்கள் இக்குறையை நிரப்புதற்குப் பெரிதும் பயன்படலாம். இத்தகைய பிரச்சினையின் தாக்கம், 80 வருடங்களுக்குப் பின்னரேயே உணரப்படுமாகையால் சாத்தியமான இலக்குகளுக்கு மிகக் குறைந்த மட்டங்களில் இருப்பதாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கும். பயிர் விளைச்சலை அதிகரிக்கவும், பாரம்பரிய மற்ற மூலங்களிலிருந்து உணவு உற்பத்தியைப் பெறவும், மாதிரியில் எதிர்பார்க்கப்பட்டுள்ளதைவிடக் குறைவான காலத்திற்குள் குடிசனத் தொகை ஒரு சமன்பாட்டை அடைதற்கு ஏதுவான குடும்பத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள ஆசியாவுக்குப் போதியளவு கால அவகாசமுண்டு.

முக்கியமாக அடிப்படைத் தேவைகள் குறித்த பொது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன் மூலம் குடிசனத் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது சாத்தியமாகும் என்று இம்மாதிரி காட்டுகிறது. (தற்போதைய தொழில் நுட்பங்களின்படி அடியொற்றிச் சென்றுகொண்டிருந்து) பூமியின் உணவுற்பத்தித் திறன் பூரணமாகப் பயன்படுத்தப்படாதிருப்பினும் கூட இச்சமன்பாட்டை உலகளாவிய ரீதியில் அடைந்துவிட முடியும்.

மனித இனத்தின் அமைதியான அபிவிருத்திப் போக்கில் தற்போதுள்ள முட்டுக்கட்டைகள் புவியியல் சம்பந்தமானவையோ, பொருளியல் சம்பந்தமானவையோ அல்ல; ஆனால், அவசியமாக அவை சமூக, அரசியல் சார்பானவையாகும். உத்தேச இலக்குகளை எய்துவதற்காகக் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கும் வளர்ச்சி வீதங்கள் (தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையைப் பொறுத்தவரையில்) வழமைக்கு முரணானவை என்று கூறுவதற்கில்லை. எனவே, அதி உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினாலன்றி அத்தியாவசிய மற்ற நுகர்ச்சியைக் குறைப்பதனாலும் அதிகரித்த முதலீட்டினாலும், உணவுற்பத்திக்கும் நகரத் திட்டமிடலுக்குமான நிலத்தின் சிக்கனமான பயன்பாட்டைத் தற்போது பங்கப்படுத்தும் சமூக, பொருளாதார, அரசியல் முட்டுக்கட்டைகளை நீக்குவதனாலும் அடிப்படைப் பொருள்களையும் சேவைகளையும் நியாயமான முறையில் பங்கீடு செய்வதனாலும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சர்வதேச வர்த்தகத்தில் குறைபாடுகளை நீக்குதற்கான உயிர்ப்புள்ள திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதனாலுமே இவ்விலக்கு அடையப்படவிருக்கின்றன.

இம்மாதிரியின் சுவையான விளைவுகளில் ஒன்று, சாத்தியபூர்வமான சர்வதேச உதவி — குறிப்பாகக் கைத்தொழில்மய நாடுகளிலிருந்து வறிய நாடுகளுக்கு மாற்றப்படும் வளங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின்மீது இது குவிக்கும் பார்வையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் உதவியைவிட அதிக அளவிலான சர்வதேச உதவி கிடைத்தாலும் கூட அது வளமாற்றீடு நடைபெறும் காலத்தில் நடு நன்னிலை மட்டத்தை ஏற்படுத்துமேயன்றி சாத்தியமான ஒன்றாக இராது. பல வளர்முக நாடுகளில் இன்றைய சூழ்நிலையில் சர்வதேச உதவி, சலுகை பெற்ற வர்க்கத்தினர் மத்தியில் செலவு செய்தலைத் தூண்டுதற்கு உதவுமேயன்றி, குடிசனத் தொகையில் பெரும்பான்மையினரின் வாழ்க்கைச் சூழ்நிலையில் மிகச் சிறிய தாக்கத்தினையே ஏற்படுத்தும்; அல்லது ஓரளவு தாக்கத்தினைக்கூட ஏற்படுத்த முடியாதுபோகும் என வருமானப் பகிர்வு தொடர்பாக நாம் முன்பு கண்டது தெளிவாகச் சுட்டி நிற்கிறது.

செல்வந்த நாடுகளிலிருந்து வறிய நாடுகளுக்கு நிகர வளமாற்றீடு தவிர, சர்வதேச ஒற்றுமையும் உருவாகலாம். (எதிர்மறையான சென்மதி நிலுவைகளைத் தவிர்ப்பதன் மூலம்) அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வளர்முக நாடுகள் பொருளாதார வளர்ச்சியை அடையலாம் என்றும் இம்மாதிரி காட்டுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தி குன்றிய நாடுகளில் இருந்து கொள்வனவு செய்யும் உற்பத்திப் பொருள்களுக்கு தற்போதைய விலைகளை நீக்கி நியாயமான விலைகளை நிர்ணயித்தால் இக்குறிக்கோள்களை அடைவது இலகுவில் சாத்தியமாகும். மேலும் மாதிரியில் முன்மொழியப்பட்டுள்

(32-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அரங்கின் அபிவிருத்திக்காட்சிகள்

## ''வலு, உணவு, தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் நாடுகளின் கை ஓங்கும்''

—டட்லி சியர்ஸ்—

தற்போதைய அரசுக் கொள்கைக்கிணங்க பொருளாதாரத்தின் குறிப்பிட்ட சில துறைகளுக்கான அபிவிருத்தி உத்திகள் பற்றிய ஆலோசனை வழங்குவதற்கென ஸ்ரீலங்கா அரசின் அழைப்பின் பேரில் பேராசிரியர் டட்லி சியர்ஸ் பொருளியல் நிபுணர் குழுவொன்றுடன் இவ்வருட ஆரம்பத்தில் இங்கு விஜயம் செய்திருந்தார். சஸ்ஸெக்ஸ் சர்வ கலாசாலை அபிவிருத்திக்கல்வி நிறுவன ஆய்வாளரும், ஐரோப்பிய அபிவிருத்தி நிலையங்களின் பேரவைத்தலைவருமான பேராசிரியர் சியர்ஸ் இந்நாட்டில் நன்கு அறிமுகமானவர்; சர்வதேச தொழில் தாபனம் 1971ல் இங்கு அனுப்பிய விசேட தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கி வந்த அவர், "தொழில் வாய்ப்புக்களையும், அபிலாசைகளையும் ஒருங்கிணைத்தல்'' என்ற தலைப்பின் கீழ் விரிவான அறிக்கையொன்றைத் தயாரித்தளித்ததன் மூலம் பலரின் கவனத்தையும், அபிமானத்தையும் பெற்றார். சமீபத்திய அவரது விஜயத்தின் போது ஸ்ரீலங்கா அறிவியல் அபிவிருத்திக் கழகத்தில் ''கியூபாவின் அபிவிருத்தி அனுபவம்'' என்ற பொருள் பற்றி உரை நிகழ்த்தியதுடன், அபிவிருத்தி தொடர்பான பொதுப் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்களிலும் பங்கு கொண்டார். மக்கள் வங்கியின் ஆராய்ச்சித்துறை இயக்குநர் கலாநிதி சுசந்தா குணதிலகா 'பொருளியல் நோக்கு' சார்பில் பேராசிரியர் சியர்சை பேட்டி கண்டார். இப்பேட்டியின் முக்கியமான சில பகுதிகளை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

கேள்வி: பேராசிரியர் சியர்ஸ் அவர்களே! பொருளாதாரத் தோற்றுவாய்மீதான அபிவிருத்திகள் தொடர்பாக நீண்ட வழித்தொலை நோக்கில் சில விசாலமான கேள்விகளைக் கேட்க விரும்புகிறோம். 1500 முதல் 21ம் நூற்றாண்டு வரைக்கான மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இன்றைய உலக ஒழுங்கின் பொதுவமைப்பை எவ்வாறு நீங்கள் வகுப்பீர்கள்?

பதில்: வடக்குத் தெற்குப் பிரிவினைகள் அடிப்படையிலோ, அபிவிருத்தியடைந்த நாடுகள்-அபிவிருத்தியடையா நாடுகள் என்ற அடிப்படையிலோ அல்லது அது போன்ற வகைகளிலோ நான் என் சிந்தனையை வழிப்படுத்த விரும்பமாட்டேன். ஆனால், மூன்று முக்கிய அடிப்படை வளங்களைக் கொண்டுள்ள நாடுகள் எவை என்ற அடிப்படையிலேயே நோக்க விரும்புவேன். அம் மூன்று அடிப்படைக் காரணிகளும் வலு, உணவு, தொழில்நுட்பம் ஆகியவையாம். இம் மூன்று அடிப்படைக் காரணிகளிலும் அநேகமாகத் தன்னிறைவு கொண்டுள்ள நாடுகளாக மூன்று நாடுகளே உள. அவை ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், சீனு ஆகிய மூன்றுமாம். ஆனல், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரதானப் பலவீனம் உண்டு. அமெரிக்கா தொழில்நுட்பத்தையும் உணவையும் ஏற்றுமதி செய்கிறது. ஆனல், வலுவை இறக்குமதி செய்வதில் அதிகமாகத் தங்கியிருக்கிறது. மறுபுறத்தில் சோவியத் ஒன்றியம் வலுவையும், தொழில்நுட்பத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆனல், உணவை இறக்குமதி செய்வதில் தங்கியிருக்கிறது. சீனுவுக்கு அதன் வாழ்க்கை மட்டத்திற்கு அமைவாக உணவும், வலுவும் உண்டு. ஆனல், தொழில்நுட்பத்தில் மிகப் பிந்திய ஆரம்பமே அதற்குண்டு. எப்படியெனினும் தொழில்நுட்பக் குறைபாட்டினைப் பொறுத்தளவில் ஒரு சில தசாப்தங்களில் அதனைச் சீர்செய்துவிடலாம். ஆனல், உணவையும் வலுவையும் பொறுத்தளவில் இது இயலாத காரியம். எனவே 21ம் நூற்றாண்டில் சீனு மற்ற இருநாடுகளையும் முந்திச்சென்றுவிடும். இம் மூன்று நாடுகளுக்குமே பாரிய நிலப் பரப்பும், இராணுவ தொழில்நுட்பத் தலைமைக்கான குடிசனத் தொகை ஆதாரமும் இருக்கின்றன.

கேள்வி: பாரிய நிலப்பரப்புக்களைக் கொண்ட பிரேசில், இந்தியா போன்ற நாடுகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் தன்னிறைவுக்கான கொள்திறன் அவற்றிடம் உண்டா?

பதில்: பிரேசிலைப் பொறுத்தமட்டில் அங்கு வலிமையான இருமுனைச் சமூக, பொருளாதார அமைப்புக்கள் உள. இந்தியாவுக்கு இது போன்றதே. இந் நிலை, இந் நாடுகள் தமது ஆற்றல் திறனை அடைவதற்கு தடையாயிருக்கலாம்.

கேள்வி: தங்களது வகைப்படுத்தல் மிக எளிமையானதாகவும், சுலபமானதாகவும் தோன்றுகிறது. தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் உள்ள பல்வேறு பட்ட சமூக வர்க்கங்களினதும் குழுக்களினதும் பொருளாதார உறவுகள் பற்றி, சிறப்பாக அவற்றின் இடைத் தொடர்புகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

பதில்: உலக முறைமையின் எந்த விவரணமும் சில அத்தியாவசியமான நிர்ணய காரணிகளை மட்டும் தெரிந்தெடுத்து இலகுவாக்கப்படுதல் வேண்டும். என்னைப் பொறுத்தளவில் நான் முன்பு குறிப்பிட்ட மூன்று காரணிகளும் ஆதாரமானவையாகத் தோன்றுகின்றன.

கேள்வி: இலங்கை விஞ்ஞான முன்னேற்றத்திற்கான சங்கத்தில் நிகழ்த்திய தங்கள் உரையில் கியூபாவை ஒரு உதாரணமாகக் காட்டி ஆராய்ந்தபோது மிகச் சிறிய அந்நாடு அபிவிருத்தியடைந்த நகரமயப்பட்ட நாடுகளில் தங்கியிருந்த தொடர்புகளை வெகுவாக வைத்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். முன்னர் மற்ற நாடுகளில் தங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்த சிறிய நாடுகள் அத்தங்கியிருத்தலிருந்து விடுபட எடுக்கும் உபாயம் மிகச் சிறியதாக இருப்பதாகவும் இதன் விளைவாகப் புதிய தங்கியிருத்தல் நிலையொன்று தோன்றுவதற்கு ஏதுவாக இருக்குமென்றும் உணரக் கூடிய அளவுக்கு உங்கள் ஆய்வு எம்மை இட்டுச் சென்றுள்ளது. இலங்கையைப் போன்ற எமது நாடுகளுக்கு இது பொருந்தக் கூடியதாக இருப்பதோடு இது போன்ற விளைவுகள் எமது நாட்டிற்கும் ஏற்படலாம். இத வகையில் உங்கள் கருத்து அதிக நம்பிக்கையின் பாற்பட்டதாக இல்லையா ?

பதில்: இருக்கலாம், ஆனல், எனது பார்வையில் அது அப்படித்தான் தோன்றுகிறது. எப்படியெனினும் இலங்கைக்குள்ள ஒரு பெரும் வரப்பிரசாதம் அதன் நீர் மின்னியல் ஆக்கத்திறன். அத்தோடு இலங்கையில் அரிசித் தன்னிறைவும் வெகு விரைவில் ஏற்படக் கூடியதாயுள்ளது.

கேள்வி: 1962ல் 'சிறப்பு வருகை தரும் பொருளாதார நிபுணர்கள் ஏன் தோல்வியடைகிருர்கள்' என்ற தலைப்பில் தாங்கள் எழுதி வெளியிட்ட கட்டுரையைப் பிரசுரித்திருந்தீர்கள். என் எண்ணப்படி இக் கட்டுரை தாங்கள் எழுதி வெளியிட்ட மிகவும் குறிப்பிடத்தக்க கட்டுரையாகும். அதன் பின் அக் கொள்கையை நீங்கள் மாற்றிவிட்டீர்களா? சுருங்கக் கூறின் இப்படி பிறநாடுகளிலிருந்து வருகை தரும் பொருளாதார நிபுணர்கள் 1962ல் தம் முயற்சியில் தோல்வி கண்டபோதிலும் தற்போது வெற்றி காணுகிருர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: இல்லை. உண்மையில் நான் கொண்ட கருத்தையே இன்றும் கண்டுள்ளேன். உள்நாட்டுப் பொருளாதார நிபுணர்களின் சேவைக்கு மிகச் சிறிய அளவிலேயே வெளிநாட்டு வருகை தரும் பொருளாதார நிபுணர்கள் பங்காற்ற முடியும். ஒரு உள்நாட்டு நிபுணர் சில கோட்பாட்டு முறைகளைக் கண்டுபிடிக்கலாம். அம்முறைகளை அவர் வெளியிடச்சங்கோகிக்கலாம். அத்தகைய கோட்பாட்டு முறைகளுக்கு இவ் வெளிநாட்டு நிபுணர்கள் ஊக்கமளிக்கக் கூடியவர்களாகவோ அல்லது சில நோக்களில் அவற்றினை ஒழுங்குபடுத்த உதவுபவர்களாகவோ இருக்கலாம். ஆனல், அவர்களுடைய இச் சேவை நடவடிக்கை ஓர் எல்லைக் கோடுவரையானதாகவே இருக்கும்.

கேள்வி: பிரித்தானியாவுக்கு நெருக்கடியான பல சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுண்டு. அதனது இறுதியான வேலைவாய்ப்பின்மை இலங்கையினதை விட அநேகமாக இருமடங்கானதாகும். பிரித்தானிய பொருளாதாரத்தில் உள்ள குறைபாடுகளை மதிப்பிடு செய்து அவற்றைச் சரி செய்யக் கூடிய வழி முறைகளை எடுத்துக் கூறக் கூடிய தகுதியும், அறிவும்ஆற்றற்றிறமையும் தன்னம்பிக்கையும் கொண்ட பல இலங்கையர்கள் இங்குள்ளனர் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் எப்போது என்னை உங்கள் நாட்டிற்கு ஆலோசனை வழங்க அழைக்கப் போகிறீர்கள் ?

பதில்: அது எனது கையில் இருக்குமாயின் அப்படி அழைக்கப் படுபவர்களில் முதல்வராக நீங்களே இருப்பீர்கள். ஆனல், இவ் வழைப்புகளெல்லாம் அரசியல் மற்றும் வேறு சக்திகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

கேள்வி: சுருங்கக் கூறின், அரசியல் சக்தி என்று நீங்கள் குறிப்பிட்டதன் மூலம் உயர் அறிவுப் பேற்று விடயங்களில் கூட இன்னும் உலகக் குடியேற்ற வாதிக்கப் பிரிவொன்று அங்குண்டு என்று அர்த்தமா ?

பதில்: பிரித்தானியாவுக்குள் உள்ள அரசியல் சக்தி பற்றியே யான் குறிப்பிட்டேன். உயர் அறிவுப் பேற்று ரீதியாக அங்கு அதிகரித்தளவில் சமத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. உங்களுக்குத் தெரிந்திருக்கும், சஸ்ஸெக்ஸில் உள்ள எமது நிலையம் சர்வதேசக் கலந்துரையாடல்களுக்கு முக்கிய கேந்திர நிலையமாயுள்ளது. அகில உலகிலும் உள்ள சமூக விஞ்ஞானிகள் அங்கு வந்து தங்கிப்போயுள்ளனர். அதன் அலுவலர்களில் பலர் பல தேசங்களிலும் இருந்து வந்தவர்களாயுள்ளனர். எனினும் சமூக விஞ்ஞானங்களில், இயற்கை விஞ்ஞானங்களில் இருப்பதைப் போன்று, கைத்தொழில் மயப்பட்ட நாடுகளில் விருத்தியாக்கப்பட்ட கோட்பாடுகளும் மாதிரிகளும் அவ்வாராய்ச்சிகளைச் செய்கின்ற ஏனைய நாட்டுச் சமூக விஞ்ஞானிகளின் உள்ளங்களிலே பாரிய செல்வாக்கினைப் பிரயோகிக்கின்றன. இது மிகவும் அதிகமான ஒரு செல்வாக்காகும்.

---

(30ம் பக்கத் தொடர்ச்சி)

ளது போல் தம் வளர்ச்சி வீதங்களைக் குறைப்பதன் மூலம் செல்வந்த நாடுகள் கிடைக்கக் கூடிய வளங்களின் அருமையைத்தளர்ந்துவதற்கு பணிபுரிய முடியும். இப்படிச் செய்வது வறிய நாடுகளுக்கு மறைமுகமாக உதவுவதாகவும் முடியும்.


ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டவாறு 2060ம் ஆண்டில் தொடர்ந்தும் சமனின்மைகள் நீடிக்கும். குறிப்பாக ஆசியாவைப் பொறுத்தமட்டில், அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்குமிடையிலான வளர்ச்சி மட்டங்களில் இவ்வேற்றத் தாழ்வுகள் நிலவும் என்று பாருளாதாரக் குறிகாட்டிகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆயினும் எதிர்கால தொழில்நுட்ப அபிவிருத்திகள் இவ்விடைவெளியை நீக்கவல்லனவாக இருக்கும்.

இறுதியாக, மனிதனின் தலைவிதி வெல்ல முடியாத பாரிய பௌதீகத் தடைகளில் தங்கியிருக்கவில்லையென்பதையும், அவனல் இலகுவில் சீர்படுத்தக் கூடிய சமூக, அரசியல் காரணிகளிலேயே அது பெருமளவில் தங்கியிருக்கின்றது என்பதனையும் இம்மாதிரி காட்டுகின்றது. ஆயினும் இதன் தீர்வு சுலபமானதாயில்லை; சமூக ஒழுங்கையும், வேரூன்றிய அதன் விழுமியங்களையும் பெறுமானங்களையும் உடனடியாக மாற்றியமைப்பதானது, (பௌதீக வரையறைகளை வெற்றி கொள்வதை விட) இன்னல் மிகு ஒரு கருமம் என்பதனை வரலாற்று அனுபவம் காட்டி நிற்கின்றது. ஆயினும்,


(15ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(410). மலேஷியா (860) போன்ற நாடுகள் ஸ்ரீலங்காவை விடவும் கூடிய தலா நபர் வருமானங்களைப் பெற்றிருக்கின்றன. மேலும் சிங்கப்பூரையும் ஸ்ரீலங்காவையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சுவையானதாக இருக்கும். சிங்கப்பூரின் பௌ. வா. கு. (83) அநேகமாக நம் நாட்டளவை ஒத்ததாகும்; ஆனால் அந் நாட்டின் தலா நபர் மொ. தே. உ. 2700 டொலர்களாகும். குவைத் நாட்டின் தலா நபர் மொ. தே. உ. 15480 டொலராகும்; அதே வேளையில் அந்நாட்டின் பௌ. வா. கு. 74 ஆக — அதாவது ஸ்ரீலங்காவின் அளவை விடவும் குறைவானதாக — இருக்கின்றது. மேலும் ஐக்கிய அரபு எமிரேட்டுகளின் வருமான அளவு 13990 டொலராகவும் குறி காட்டி (மிகக்குறைந்தது) 33 ஆகவும் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.


# மக்கள் வங்கி

ஸ்தாபிதம் 1961
கூட்டுறவு வர்த்தக வங்கி

கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்—544
மக்கள் வங்கிக் கிளைகள் —210
கடற்றொழில் வங்கிகள் — 4

மக்கள் வங்கி அதனுடன் போட்டியிடும் ஏனைய வர்த்தக வங்கிகளை விடவும் மிகக் கூடுதலான சேவைகளையும், வசதிகளையும் பொது மக்களுக்குப் பெற்றுத்தருகின்றது.

* கூட்டுறவு இயக்கத்தினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் வங்கி மக்கள் வங்கியே.
* நெல், தேயிலை, இறப்பர், தென்னை, கறுவா, புகையிலை, உப உணவுப் பயிர்கள் போன்றவற்றின் உற்பத்திக்குப் பயிர்ச் செய்கைக் கடன்கள்.
* பொதுத்துறை, தனியார் துறை நிறுவனங்களதும் கூட்டுத்தாபனங்களினதும் கைத்தொழில் இயந்திரங்களுக்கு நிதி வழங்குதல்.
* நடைமுறைக் கணக்குகள், நிலையான வைப்புக்கள், (வட்டி 15 சத வீதம் வரை) சேமிப்புக் கணக்குகள், பிரத்தியேகமான முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள் என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறுபட்ட வங்கிச் சேவைகள்.
* ஏற்றுமதி, இறக்குமதி வசதிகள்—ஆவணமிடல், சந்தைத் தகவல்.
* வாகனங்கள், குளிர்பதனப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் மின்னியக்கக் கருவிகள் போன்றவற்றைத் தவணை முறையில் வாங்குவதற்கு நிதி வசதிகளைச் செய்தல்.
* வெளி நாடுகளில் வாழும் இலங்கையருக்கான வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகள்.
* சிறு வியாபாரிகளுக்கான தினசரிக்கடன் திட்டம் (கைமாற்று)
* கடற்றொழிலாளர், தச்சுத் தொழிலாளர்களுக்கான விசேஷ கடன்கள்.
* கிராமிய மின்மயமாக்கலுக்கு நிதி வசதி.
* உயர்கல்வி, கலைகள், கைவினைத்திறன் போன்றவற்றுக்கு உதவி வழங்குதல்.
* சுற்றுலாத் தகவலும், சுற்றுலாத் துறையினருக்கான நிதிகளும்.
* கடற்றொழில் துறையின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு கடற்றொழில் வங்கிகள்.
* கைத்தறி, மின்தறிக் கைத்தொழிலுக்கான நிதி வசதி.
* உள்நாட்டுத் திரைப்படக் கைத்தொழிலுக்குக் கடன்கள்.
* பொதுத்துறை, வங்கி ஊழியர்களின் வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதி வசதி.
* அடகு எடுத்தல்.
* நாடெங்கணும் வியாபித்திருக்கும் கிளைகள் இச்சேவைகளை வழங்கி வருகின்றன.

12 லட்சத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் கொடுக்கல் வாங்கல் செய்யும் வங்கி

# மக்கள் வங்கி

தலைமையலுவலகம்.

இல. 75 சேர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு-2.

த. பெ. இல. 728.

தொலைபேசி: 27841—9.




விலை 2/-

பொருளியல் நோக்கில் இடம் பெற்றுள்ளவற்றை பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக்ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org